முத்தமிழ்க் காவலர்

# கி.ஆ.பெ.விசுவநாதம்

83



மணிவாசகர் பதிப்பகம்

டாக்டர் ந.சுப்புரெட்டியார்

# முத்தமிழ்க் காவலர்
# கி.ஆ.பெ. விசுவநாதம்


'தமிழ்ச்செம்மல்'
பேராசிரியர்
முனைவர் ந. சுப்புரெட்டியார்
இயக்குநர், தெற்கு-தென்கிழக்கு ஆசிய நாடுகளின்
மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்.



மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : 16, நவம்பர், 1999
திருவள்ளுவர் ஆண்டு : 2030
உரிமை : மணிமேகலை கண்ணன்
**விலை : ரூ. 35.00**

## பதிப்பாசிரியர்

## முனைவர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

பல்கலைக்கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினர்.

பல பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் சிறப்பாசிரியர்.

பத்து நூல்களின் ஆசிரியர்.

இவர் எழுதிய **தாகூர்** நூல் தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.

குன்றக்குடி அடிகளார் **தமிழவேள்** என்னும் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

**பதிப்புச்செம்மல்** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.


தொலைபேசி :

**சிதம்பரம் : 30069 சென்னை : 5361039**
**மதுரை : 622853 கோயமுத்தூர் : 397155**
**திருச்சி : 706450**

அச்சிட்டோர் : பீகேஆப்செட் பிரஸ், சென்னை - 600 013.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

- *அப்பரடிகள்*



முத்தமிழ்க் காவலர்

பிறப்பு : **10-11-1899** மறைவு : **19-12-1994**

96 - அகவை வாழ்ந்து
தமிழ்ப்பணியாற்றி - நிலையாகத்

# தமிழ்ப் புலவர் குழு

அமைத்துப் புகழ்பெற்ற

# கி.ஆ.பெ.வி. அவர்களின்

நூற்றாண்டு விழாப் பொழிவு
முன்னைய - இன்றைய - பின்னைய
தமிழ்ச் சான்றோர்கட்கு

# அன்புப் படையல்

உள்ளுறை தன்னால் இறைச்சியால் தொன்னூல்
உணர்ந்திடும் எழுவகை நிலத்தைத்
தெள்ளின் தோன்றிப் பொன்னொடு மணியைத்
திசையெலாம் வியப்புற எடுத்து
வள்ளலாய் அறிஞர்க் களித்தலால் புலமை
வயங்கிய சீரிய சான்றோர்
ஒள்ளிய நலஞ்சால் திருவடி மலரில்
உவப்பினிற் பொலிக இந்நூல்.[1]

---

*1. எழுவகை நிலம் - தொல் பொருள் - செய்யு பேரா 79 - இளம் 75 - தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - பக். 377.*

# நூல்முகம்

**அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,**
**அகத்திலே அன்பினோர் வெள்ளம்,**
**பொறிகளின் மீது தனியர சாணை,**
**பொழுதெலாம் நினதுபேர் அருளின்**
**நெறியிலே நாட்டம், கருமயோ கத்தில்**
**நிலைத்திடல் என்றிவை, அருளாய்**
**குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்**
**குலவிடு தனிப்பரம் பொருளே![2]**

*- பாரதியார்*

*இந்த நூல் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் பொது வாழ்வில் அவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய தொண்டுகள் பற்றி அவர் எழுதிய 25 நூல்களில் அமைந்த கருத்துகள் அடங்கியது. அவர்தம் நூற்றாண்டு விழாவில் பேசிய கருத்துக்கள் இவை. இவை முத்தமிழ்க் காவலர் பற்றிய அனைத்துச் செய்திகளையும் ஒரே இடத்தில் காணக் கூடிய ஒளிவிளக்கு. இறையருளாலும் அண்ணல் முத்தமிழ்க் காவலர் ஆசியாலும், முத்தமிழ்க் காவலர் மருமகன் T.S.K. கண்ணன் - மகள் மணிமேகலை கண்ணன் ஆகியோர் அடியேனுக்கு வழங்கிய வாய்ப்பாலும் இந்நூல் அடியேனின் முத்தமிழ்க் காவலரின் நூற்றாண்டுப் பொழிவாக வெளி வருகின்றது. இன்று விழாவில் குழுமியிருக்கும்*

---

*2. பா.க. சுயசரிதை - 49*

தமிழ்ப்பெருங்குடி மக்கள் முத்தமிழ்க் காவலரைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வதற்கும் இவ்விழாவில் கலந்து கொள்ள முடியாத ஏனைய தமிழ்ச் சான்றோர்கட்கும் முத்தமிழ்க் காவலரைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கும் இந்நூல் துணையாக இருக்கும் என்பது அடியேனின் நம்பிக்கை. முத்தமிழ்க் காவலர் நூல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து உதவிய அவர்தம் அருமை மகள், மங்கையர் திலகம் மணிமேகலை கண்ணன் அவர்கட்கு என் இதயம் கலந்த நன்றி. அடியேனை இச்சீரிய பணியில் ஈடுபடுத்திய அடியேனின் ஆகூழுக்கும் நன்றி. பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்ட வேங்கட வாணனுக்கு என் சரணம் கலந்த வணக்கம்.

**தேவனே நின்னை யல்லால்**
**பிறிதொரு தேவை எண்ணேன்;**
**பாவனை நின்னின் அல்லால்**
**பிறிதொரு பற்றும் இல்லேன்;**
**யாவையும் காட்டக் கண்டேன்;**
**என்னுளே நின்னைக் கண்டேன்;**
**காவலா! கருணை யானே!**
**இனிமற்றோர் காட்சி உண்டோ?[3]**

*- அதிவீரராம பாண்டியர்.*

3. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி - 64

# தமிழ் மீட்சி இயக்கம்

## பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

'முத்தமிழ்க் காவலன் மூத்ததமிழ்த் தலைவன்
சித்த மருத்துவச் செம்மலான் - ஒத்த
புலவர் குழுக் கண்டான் பொய்யில் அறிஞன்
நிலவரை வாழ்க நிறைந்து'

- வ.சுப. மா.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் ஆற்றலை, ஆளுமையை, ஆற்றிய அரும்பணிகளை மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், பாட்டோவியமாக்கியுள்ளார். இந்தக் கோட்டோவியம் முத்தமிழ்க் காவலரை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

சிவந்தமேனி, நெடிய தோற்றம், வெள்ளை உடை, மஞ்சள் நிற தங்க பிரேம் உள்ள கண்ணாடி, நிமிர்ந்த நடை உடையவர் விசுவநாதம்.

ஆயிரம் பேர் உள்ள கூட்டத்திலும் இவர் யார் எனச் சுட்டி வினவுதற்குரிய தோற்றப் பொலிவினர்.

இவர் ஆற்றிய பணிகள் பல. அவற்றில் சிறப்பிடம் பெறத் தக்கன இருபெரும் பணிகள்.

1. புலவர் குழுவைத் தோற்றுவித்தது.

2. தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்ற வித்தாக அமைந்தது.

49 புலவர் பெருமக்களை ஒருங்கிணைத்து, பிரெஞ்ச் அகாதெமி போல வலிவும் பொலிவுமுள்ள ஒரு குழுவை உருவாக்கினார்கள். மொழிக் காப்பு, மொழி வளர்ச்சி, மொழியைப் பரப்புதல் ஆகிய மூன்று வகைகளிலும் புலவர்குழு ஆற்றிய பணி காவியப்புகழ் உடையது.

தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று 30 ஆண்டுகள் போராடி வெற்றி பெற்றவர்.

வாழ்நாள் முழுதும் தமிழின் மீட்சிக்கும், தமிழின் எழுச்சிக்கும் ஓயாது உழைத்தவர்.

இவர் ஒரு மொழிப் போராளி. இனமான எழுச்சிக்கு இந்திப் போராட்டம் முதல் இவர் பங்கு பெற்று வெற்றி குவித்த போராட்டங்கள் பல.

வாழ்நாள் முழுதும் கண்ணியமிக்க தமிழர் தலைவராகத் திகழ்ந்தார்.

துறைதொறும் தமிழ் வளர்ச்சிக்குத் தொண் டாற்றினார்.

காலம் போற்றுவதில், உரிய நேரத்தில் விழாவிற்கு வருவதில் இவருக்கு நிகர் இவரே.

சங்கப்புலவர் போல் பெருமித வாழ்வினர். இவர் காலத்தில் வாழ்ந்து வருவது நமக்குப் பெருமை.

பெருமகனாரோடு 30 ஆண்டுகள் பழகும் பேறு எனக்கு வாய்த்தது. புலவர் குழுவில் வ.சுப. மாணிக்கனார் மறைவுக்குப்பின் அவரிடத்தில் என்னை நியமித்தார். முத்தமிழ்க் காவலருடன் அந்தமானுக்குக் கப்பல் பயணத்தில் உடன் சென்ற நாட்கள் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவம்.

செயல்திறமிக்க செம்மலாய், வாழ்வாங்கு வாழ்ந்து செவ்வறம் பேணிய சான்றோராய் வாழ்ந்த முத்தமிழ்க் காவலரை வணங்குவது நல்லது; வாழ்த்துவது என் நாவிற்கு அமையாது.

தலைசிறந்த தமிழர் தலைவரின் நூற்றாண்டு விழாவில் அவர்தம் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதில் களிபேருவகை அடைகிறேன். அறிஞர் பெருமக்கள் பலருக்கு நூற்றாண்டு விழா எடுக்க முயற்சி மேற்கொண்டு பலரின் நூற்றாண்டு விழாவைக் கண்ட முத்தமிழ்க் காவலருக்கு இன்று நூற்றாண்டு விழா. பல்லோர் உவகை என்னுள் பெய்தது போன்று பெருமகிழ்வு கொள்கிறேன்.

நல்லவரின், வல்லவரின் வாழ்க்கை வரலாற்று நூலை நூற்றாண்டுவிழா நாளில் வெளியிடுவதில் என்போல் எவரும் இன்களி மகிழ்நகை அடையமாட்டார்கள்.

இந்நூலை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் எழுதியவர் பேராசிரியர் முனைவர் சுப்புரெட்டியார். கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராக வீற்றிருந்த பெருமையர். பெருநூல்கள் படைப்பதில் வெற்றி குவித்தவர். அறிவியல் தமிழ்நூல் பல எழுதிய சாதனையாளர். ஒரு நொடி கூட வீணாக்காது எழுத்துப் பணியில் தன்னை முழுதும் ஈடுபடுத்திக் கொண்ட 80ஆண்டு இளைஞர். நூற்றாண்டு விழா நாயகரின் பன்முக நலங்களைத் திட்பநுட்பத்துடன் விளக்கி யுள்ளார். பாட்டுடைத் தலைவருடன் பல்லாண்டு பழகிய கேண்மையர். த்மிழக வரலாற்றையும் தமிழ்ப் பெருமக்கள் வாழ்வினையும் வாக்கினையும் தம் நெஞ்சில் தேக்கி வைத்து இருப்பவர். அவற்றை நீள நினைந்து நினைவலைகளாக எழுதும் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் படைப்புப்பணியில், எழுத்துப் பணியில் இந்நூலும் அவருக்குப் பெருமை சேர்க்கிறது.

அண்மையில் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்களின் நூற்றாண்டு விழாவுக்காக இராய. சொ.வின் வாழ்க்கை வரலாற்றை வளமான தமிழில் வடித்துத் தந்தார்கள்.

ஒரே ஆண்டில் - 1999இல் நூற்றாண்டு கண்ட தமிழ்ச் சான்றோர் இருவரின் வாழ்க்கை வரலாற்றினை வெளியிடும் பேறு மணிவாசகர் பதிப்பகத்திற்கு மட்டுமே கிடைக்கும் ஒப்பரிய தமிழ்ப்பேறு.

கடந்த 40ஆண்டுகளாக (1960-2000) துறைதொறும் தமிழுக்குத் தொண்டாற்றி வரும் பதிப்பகம் சான்றோர் வரலாறுகளைத் தமிழ்நாட்டு இளைஞர் உலகம் கற்று உயரவேண்டும் எனும் நன்னோக்கில் இந்நூலை வெளியிடுகிறது. பழந்தமிழ்நூல் காப்பகமாகவும், செம்பதிப்புக்களின் தாயகமாகவும், சான்றோர் சிந்தனைகளின் பதிவகமாகவும் மணிவாசகர் பதிப்பகம் விளங்குகிறது. இந்நூல் சிறப்பாக வெளிவரப் பெரிதும் துணை நின்ற என் மகன் மெ. மீனாட்சி சோமசுந்தரத்தின் தொடர்பணிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

# உள்ளுறை

பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பெரியோர் கேண்மை | 13 |
| 2. | முத்தமிழ்க் காவலர் | 19 |
| 3. | வணிகர் திலகம் | 41 |
| 4. | சித்தாந்த வித்தகர் | 55 |
| 5. | சொல்லின் செல்வர் | 75 |
| 6. | இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர் | 90 |
| 7. | இல்லற நெறியாளர் | 105 |
| 8. | மருத்துவமாமணி | 128 |
| 9. | அநுபவ நாயகர் | 137 |
| 10. | தமிழ்ப் புலவர்குழு கண்ட புரவலர் | 161 |

## பின்னிணைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் கி.ஆ.பெ. வின் படைப்புகள் | 175 |

# தோரண வாயில்

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னை பிறப்பறுக்கும் பேராளன் – தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து[1]

*அவைத் தலைவர் அவர்களே!*

*அன்பு நிறைந்த தமிழ்ப் பெருங்குடி மக்களே!*

*இந்த அவையில் குழுமியிருக்கும் பெரியோர்களே!*

இன்று இனிய நாள் எல்லோருக்கும். நம்முடன் இருந்து 96 ஆண்டுகள் வாழ்ந்து, ஈடும் எடும்பும் இல்லாத தமிழ்ப் பணிபுரிந்த முத்தமிழ்க் காதலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் நூற்றாண்டு விழா. அவர் காலத்தில் நாம் வாழ்ந் திருந்தோம் என்ற பெருமிதமும் பெருமையும் நாம் பெற்றோம் என்ற மனநிறைவும் அடைகின்றோம். திருச்சி மாவட்டத்தில் ஒரு சிற்றூரில் பிறந்த (27-8-1916) ஒருவர் திருச்சி தலைநகரில் பிறந்த (14-12-1899) மற்றொருவரின் நூற்றாண்டு விழாவில் பேசுகின்றார் என்ற பெருமை பெற்றதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அண்ணல் விசுவநாதத்தைப் பற்றிப் பேசப் புகுவது இந்த விசுவப் பெருமண்டலத்தை - அகண்டப் பெருவெளியைப் - பேசப் புகுவதோடொக்கும். இரண்டும் இயலாத செயல்கள். எனினும், முயல்கின்றேன். இப்பெருமகனாரைப் போற்றிப் பேசும் பேச்சைப் பெரியோர் கேண்மை, முத்தமிழ்க் காதலர், வணிகர் திலகம், சித்தாந்த வித்தகர், சொல்லின் செல்வர், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர், இல்லற நெறியாளர், மருத்துவ

1. திருவா. திருவெண்பா-4

மாமணி, அநுபவ நாயகர், தமிழகப் புலவர் குழு கண்ட புரவலர் என்னும் பகுதிகளாக - ஒரு பதிகம் போன்ற அமைப்பாக - அமைத்துக் கொண்டு பேச முற்படுகின்றேன். தோரண வாயிலையும் முடிப்புரையையும் சேர்த்துக் கொண்டால் பேச்சு 12 பகுதிகளாக அமைகின்றது.

# 1

# பெரியோர் கேண்மை

**மக்களாகப்** பிறந்த ஒவ்வொருவர் வாழ்விலும் பெரியோர்களது தொடர்பு மிகவும் இன்றியமையாதது என்பது ஒரு பேருண்மை. அவர்களிடம் பெறும் உதவி மிகச் சிறிதாக இருப்பினும், அவர்தம் ஆசி என்றுமே இருந்து கொண்டிருக்கும். இது தவிர, சிற்றினம் சேராது தவிர்க்கப் பெறுவது நாம் அடையும் பெரிய வாய்ப்பாகவும் அமையும். இதனை நீள நினைந்தே வள்ளுவப் பெருந்தகை **'பெரியாரைத் துணைக் கோடல்'** (அதி - 45) ஓர் அதிகாரத்தையே தமது நூலில் வகுத்துக் கொண்டு பத்துக் குறளில் பல்வேறு நோக்கில் பல பட விரித்தோதுகின்றார்.

அண்ணலின் வாழ்வில் பெரியோர் கேண்மை பல சிறப்புகளை நல்கியுள்ளது. சிறு வயது முதற் கொண்டே பெரும் புலவர்களின் தொடர்பு ஏற்பட்டது இறைவனது திருவுள்ளக் குறிப்பு. அத்தொடர்பு இறுதிவரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது. 'மல்லல் பேர்யாற்று நீர்வழிப்படூஉம் புணை போல், முறை வழிப்படும் ஆருயிர்' (புறம் - 192) என்பது சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் திருவாக்கு அல்லவா?

என் நிலையும் இது போன்றதே. மூன்று வயதில் தந்தையை இழந்த அடியேனது வாழ்வில் பெரியோரை நாடும் பண்பு அடியேனிடம் இயல்பாகவே அமைந்தது இறைவனது திருக்குறிப்பேயாகும். இன்றுவரை (அகவை 84)

பெரியோர்களின் தொடர்பும் நல்ல நண்பர்களின் இணக்கமும் தொடர்ந்து இருந்து வருகின்றன.

நினைவு - 1: 1934-இல் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் இடைநிலைப் படிப்பில் முதலாண்டு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். செகப்பிரியரின் நாடகங்களைப் பற்றி உரைநடையில் படித்து அநுபவித்த காலம். ஜூலியஸ் சீசர் நாடகத்தில் புரூட்டஸ், அந்தோணி இருவரும் சிறந்த பேச்சாளர்கள். இவர்களுள் அந்தோணி கதை மாந்தன் என்னை அதிகமாகக் கவர்ந்தான். அவனைப் பற்றி ஒரு கற்பனை உருவம் என் மனத்தில் இருந்து கொண்டிருந்தது. தனியாக நூலக நூல்களைப் பயிலும் பழக்கத்தால் ஏற்பட்ட விளைவு இது. ஜூலியஸ் சீஸர் நாடகமும் பாடமாக இருந்து அதனைக் கற்பித்த லாரன்ஸ் சுந்தரமும் நினைவுக்கு வருகின்றார்.

அக்காலத்தில் 'சவுக்கு' என்ற பகுதியிலுள்ள காசியப்பர் இராவுத் ஸ்டோர்ஸ் தங்கும் விடுதியில் அறையொன்றில் தங்கிக் கொண்டிருந்தேன். மாலை நேரங்களில் கூட்டங்கள் எங்கு நடைபெற்றாலும் அவற்றில் கலந்து கொண்டு அறிஞர்கள் பேச்சுக்களைச் செவிமடுப்ப துண்டு. பெரும்பாலும் டவுன் ஹால் மைதானத்தில் அரசியல் கூட்டங்களும், மலைக் கோட்டை யானை கட்டித் தெருவில் கீழ்க் கோடியில் உள்ள மண்டபத்தில் சைவ சித்தாந்தக் கூட்டங்களும், மலைக் கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் சமய, இலக்கியக் கூட்டங்களும் வழக்கமாக நடைபெறும். சில சமயம் தெப்பகுளத்துக்கருகிலுள்ள பிஷப் ஹீபர் கல்லூரி மண்டபத்தில் இலக்கியக் கூட்டங்கள் நடைபெறுவதுண்டு.

ஒரு சமயம் பேராசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா பிஷப் ஹீபர் கல்லூரியில் பேசுவதாக அறிவிப்பு கிடைத்தது. அப்போதுதான் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களைக் கண்டேன்.[1] என்னுடைய பேராசிரியர் மு. நடேச

1. அப்போது அவருக்கு அகவை 35. அநுபவம் மிக்க சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தவர். எனக்கு வயது 17-18. நாட்டுப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு முதன் முதலாக வந்த ஆரம்பகாலம். எந்தவித அநுபவமும் இல்லாத 'காட்டான்'. இலக்கிய அறிவு பெற வேண்டும் என்ற துடிப்புடன் இருந்த காலம்.

முதலியார் அவர்களும் நாட்டார் ஐயா அவர்கள் பேசும் கூட்டத்திற்கு வருவதில் தவறுவதில்லை. திரு கி.ஆ.பெ.வி. யின் சந்தனச் செம்மேனி இனிய புன்முறுவல் தவழும் முகம், நன்கு வாரிய கிராப்புத் தலை, வெண்மை ஆடை முதலியவை அமைந்த கம்பீரமான தோற்றம் என்னைக் கவர்ந்தது. நானே என்னை அவருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டேன். அன்றிலிருந்து அவர் எனக்கு ஒரு குறிக்கோள் மனிதராக ஆகிவிட்டார். என் கற்பனையிலிருந்த செகப்பிரியரின் நாடக மாந்தன், இவருடன் ஐக்கியமாகி விட்டான். பின்னர் இவரைச் சைவ சித்தாந்தச் சபையில் சந்திப்பதுண்டு.

**நினைவு - 2:** 1939-இல் என் கல்லூரிப் படிப்பு பி.எஸ்சி பட்டத்துடன் நிறைவு பெற்றது. 1940-41இல் சென்னை சைதாப் பேட்டை ஆசிரியர் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்று எல்.டி. பட்டமும் பெற்றேன். துறையூரில் புதியதாகத் தொடங்கப்பெற்ற உயர்நிலைப் பள்ளியில் முதல் தலைமை யாசிரியர் பணி ஏற்றேன். புதிய பள்ளியாதலால் தலைக்கு மீறிய வேலை. சில சமயம் அண்ணல் தம்பம்பட்டிக்குப் புகையிலை வாணிக நிமித்தம் வருங்கால் அங்குள்ள ரெட்டியார்கள் பலர் என் உறவினர்களாதலால் அவர்களுடன் இவரைக் கண்டு மகிழ்ந்ததுண்டு. இதனைத் தவிர இந்த ஒன்பதாண்டுகளில் அண்ணலிடம் யாதொரு தொடர்பும் இல்லை.

**நினைவு - 3:** 1950. ஜூலை முதல் துறையூர் தலைமையா சிரியர் பணியைத் துறந்து, அழைப்பின்பேரில், புதிதாகத் திறக்கப் பெற்ற காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியர் பதவி ஏற்றேன். இங்குக் கடுமையான உழைப்பு. பொது மக்களிடம் அதிகத் தொடர்பு இல்லை — சில பள்ளிகளின் ஆண்டு விழா போன்ற சிலவற்றில் பங்கு கொள்வதைத் தவிர. பத்தாண்டுக் காலம் இங்குப் பணியாற்றிய போது இரண்டு முறை காரைக்குடிக்குச் சுற்றிலுமுள்ள ஊர்களில் அமைந்துள்ள இரண்டு பள்ளிகளின் ஆண்டு

விழாக்களில் அண்ணலும் அடியேனும் சேர்ந்து பேசியதாக நினைவு. தமிழில் பயிற்று முறைகள் பற்றிய நூல்கள் கல்லூரி மட்டத்தில் ஒன்றுமே இல்லை. நூற்றுக்கணக்கான தாய்மொழி பயிற்றும் முறைகளை நுவலும் ஆங்கில நூல்கள், கவிதை பயிற்றும் முறைகளை நவிலும் ஆங்கில நூல்கள், அறிவியல் பயிற்றும் முறைகளை விளக்கும் ஆங்கில நூல்கள், கல்வி உளவியல் நூல்கள் ஆகியவற்றில் மிகவும் ஆழங்கால் பட்டு தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை; கல்வி உளவியல், கவிதை அநுபவம் (திறனாய்வு) ஆகிய ஐந்து பெரிய நூல்களை எழுதி புதிய முறையில் நிரந்தரமாக - நிலையாக - இருக்கும் நூல்களை எழுதி வெளி யிடும் பணியில் மிகவும் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தேன்.

நினைவு - 4: 1960- ஆகஸ்டு முதல் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்றேன். இங்கு ஒரு முறை தமிழகப் புலவர் குழுவைப் பல்கலைக்கழகத்தில் வரவேற்றுச் சிறப்பிக்கும் வாய்ப்பு வந்தது (1965). அதனை ஏற்றுச் செய்ய முடியவில்லை. குடும்பம் காரைக்குடியிலும் நான் திருப்பதியிலும் இருந்த துன்ப நிலை (6 ஆண்டுகள்). செப்டம்பர் 12 நாள் விடுமுறை; நடுவில் புலவர் குழு வருகை. வகுப்பு இல்லாதபொழுது பெரும்பாலும் நூலகத்தில் இருப்பேன். ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் குவியலாகக் கிடந்தன. நூலகர் ஒருவர் துணை கொண்டு வகைப்படுத்தி எண்ணிட்டுப் பிரிவினை செய்யும் பணியில் இருந்தேன்.

அண்ணல் என் அறைக்கு வந்து முகவரி அட்டையை என் மேசையின்மேல் விட்டுச் சென்றார். தங்குமிடம் பற்றிய குறிப்பு இருப்பின் நேரில் சென்று அவரைப் பார்த்திருப்பேன். எனினும், தெலுங்குப் பேராசிரியர் டாக்டர் சென்னாரெட்டி யிடம் புலவர் குழுவை வரவேற்கும் பொறுப்பை ஏற்று

நடத்துமாறு ஏற்பாடு செய்து விட்டுக் காரைக்குடி சென்று விட்டேன்.[1]

திருப்பதியில் தமிழ்த்துறைக்காகக் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையை நானாக ஏற்படுத்திக் கொண்டேன். மானியம் பெறுவதற்காக சுமார் பத்து ஆண்டுகள் சென்னைத் தலைமை செயலகத்துக்குக் காவடி எடுத்தல், அறிவியல் நூல்கள் எழுதுதல், டாக்டர் பட்டத்திற்கு ஆய்தல் ஆகிய செயல்கள் போன்ற அலுவல்களில் மூழ்கி விட்டேன். என் கவனமும் தத்துவ நோக்கில் செல்வதாயிற்று.

நினைவு - 5: திருப்பதியில் ஓய்வு பெற்று 1978 சனவரி முதல் சென்னை வாசம். முதல் இரண்டு ஆண்டுகள் தமிழ் வளர்ச்சி கழகத்தில் தமிழ்க் கலைக் களஞ்சியப் பதிப்பாசிரியர் பணி; அதிலிருந்தும் ஓய்வு. 1982 முதல் அரசு ஏற்பாடு செய்த உயர் மட்டக் குழுக்களில் அடியேனும் அண்ணலும் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகள் அமைந்தன. எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கூட்டங்கள் பெரும்பாலும் எழும்பூர் இருப்பூர்தி நிலையத்தருகிலுள்ள ஒரு கட்டடத்தில் நடைபெறும். கூட்டம் முற்பகல் காலையில் தொடங்கி மதியம் முடிந்து விடும். அண்ணலிடம் உரையாடிக் கொண்டு இருப்பூர்தி நிலையத்திற்கு வருவேன். ஒரு தயிர் அமுதுப் பொட்டலம் வாங்கி வருமாறு பணிப்பார்; வாங்கி வருவேன். அதற்கு மேல் உண்பதில்லை. பயணச் சீட்டு வாங்கி வண்டியில் ஏற்றி விட்டு தான் திரும்புவேன். அண்ணலிடம் பழகுவதில் ஒரு தனி இன்பம். தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நெருங்கிப் பழகினேன். இன்னும் நாலாண்டுகளில் அவர் காலத்திலேயே நூற்றாண்டு விழா அரசு எடுக்கும் என்றும், அதில் அடியேன் கலந்துகொண்டு உரையாற்றுவேன் என்றும் கூறுவேன். என்னைக் 'கூர்ந்து உற்று நோக்கி' மகிழ்வார். அதன் பிறகு நடைபெற்ற இரண்டு மூன்று கூட்டங்களில் அண்ணல்

1. கூட்டத்தில் ஒரு சில புலவர் குழு உறுப்பினர்கள் திருப்பதி தமிழ் நாட்டைச் சேர்ந்தது எனப் பேசியது கசப்பை விளைவித்துவிட்டது.

டு. உ.

இல்லை. இல்லாமை ஒரு பெரிய குறைவாக இருந்தமையை அனைவரும் உணர்ந்தனர்.

> நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்திவ் உலகு [குறள் – 336]

என்னும் குறளை மனம் அசை போட்டுக் கொண்டிருக்கும். இதுதானே எல்லோருக்கும் பொருந்துவது? அந்த நாள் வருவது என்று என்பது ஒருவருக்கும் தெரிவதில்லை!

# 2

# முத்தமிழ்க் காதலர்

தமிழின் சிறப்பையே தம் வாழ்வின் சிறப்பாகக் கருதியவர் திருச்சி வீசுவநாதம். அதற்காக அப்பெருமகனார் அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தவர். இவருடைய பேச்சும் மூச்சும், சொல்லும் செயலும், எண்ணமும் எழுத்தும் எல்லாமே தமிழாக இருந்து வந்தது. இவருடைய உள்ளத் திருக் கோயிலில் என்றும் நிலையாக மேலோங்கி இருந்தவை தமிழ் நலமும் தமிழர் நலமுமே. சிறந்த வணிகராகிய இவர் இவற்றையே என்றும் ஓயாது இலவசமாக விற்றுக் கொண்டிருந்தவர்; பரப்பிக் கொண்டிருந்தவர்.

மிக்க இளமையில் வள்ளுவர் வகுத்த நெறிப்படி 'பெரியாரைத் துணைக் கொண்டதனால்' (அதி. 45) இவர்தம் தமிழறிவும், தமிழ் உணர்வும் பெருகலாயிற்று. "நான் ஓரளவு தமிழறிவு பெறுவதற்கு உறுதுணையாக இருந்து வந்த உயர்திரு மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாண சுந்தர முதலியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா[1], பண்டித மணி கதிரேசச் செட்டியார், நாவலர் ச. சோம சுந்தர பாரதியார் ஆகிய தமிழ்ச் சான்றோர்களுக்கு இந்நூலை காணிக்கையாக்குகிறேன்"[2] என்று இவரே குறிப்பிட்டுள்ளமை யால் தெளியலாம்.

1. நான் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்று வந்த காலத்தில் (1934-39), இவரையும் நாட்டார் ஐயாவையும் திருச்சி தெப்பக்குளத்தருகிலுள்ள பிஷப் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற தமிழ் இலக்கிய கூட்டங்களில் பலமுறை கண்டு மகிழ்ந்ததுண்டு.

2. 'தமிழின் சிறப்பு' என்ற நூலின் முன்னுரையில்.

முத்தமிழ்க் காதலர்: இப்பெருமகனார் சிலம்பை ஆழ்ந்து கற்றதனால் 'முத்தமிழ்க் காதலர்' ஆனார் எனத் தோன்றுகின்றது. இக்காவியம் கற்றதன் பயனாக,

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'[3]

என்று சொல்லும் அளவுக்குஇவர்தம் தமிழ்க்காதலின் ஊற்றம் அமைகின்றது. கவிதையின் மேன்மையையும் சிறப்பையும் நன்கு உணர்ந்த வடமொழி வாணர்கள் தலைவன் ஏவலாளனுக்குக் கூறுதல் போன்றவை அறநூல்கள் என்றும், நண்பர் ஒருவருக்கொருவர் கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும், கணவனுக்கு மனைவி உரைப்பது போன்றவை காவியங்கள் என்றும் ஒரு வகைப் பாகுபாடு செய்துள்ளனர்.[4] இளங்கோ அடிகள் தாம் உணர்த்த வேண்டிய நீதிகளை இலை மறை காய்கள் போல், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல், அற்புதமாக அமைத்துள்ளமை அண்ணல் விசுவநாதத்தின் உள்ளத்தை மிகவும் கவர்ந்திருத்தல் வேண்டும். காவியத்தில் உணர்த்தப் பெற்றிருக்கும் முத்தமிழ்க் குறிப்புகள் அவரிடம் முத்தமிழ்க் காதலை எழுப்பியிருக்க வேண்டும். இதனால் அவர் 'முத்தமிழ்க் காதலர்' ஆனார் என்ற வண்மையையும் அறிய முடிகின்றது.

## 1. இயற்றமிழ்க் காதல்

தமிழ் இலக்கியங்கள் ஆழ்ந்து கற்றதனால் விளைந்த அற்புதப் படைப்பு 'தமிழின் சிறப்பு'[5] என்னும் நூல். இதனால் தமிழின் 16 செல்வங்கள் இருப்பனவாகக் காட்டுவர் அண்ணல் பெருமான். அவற்றுள் சில சுடர்விடும் நுண்ணியக் கருத்துகள்:

3. தமிழ் விடு தூது - கண்ணி - 151
4. பாட்டுத்திறன் பக். - 329
5. பாரி நிலைய வெளியீடு! முதற்பதிப்பு 1969லும் ஐந்தாம் பதிப்பு 1993லும் வெளிவந்துள்ளன.

*(1)* பெயர் சிறப்பு என்ற தலைப்பின் கீழ் வருவன:

*(அ)* தமிழுக்கு இனம் மூன்று. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவை. நமது மொழிக்குப் பெயர் வைக்க எண்ணிய தமிழ்ச் சான்றோர்கள் அக்காலத்திலேயே இனத்திற்கு ஒரு எழுத்தாக எடுத்து மூன்று இனங்களுக்கும் 'பிரதிநிதித்துவம்' வழங்கிப் பெயர் வைத்திருப்பது எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது. த - வல்லினம். மி - மெல்லினம், ழ் - இடையினம்.

*(ஆ)* தமிழுக்கு 'முத்தமிழ்' எனவும் பெயர் உண்டு. இஃது இயல், இசை, நாடகம் என்றாகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும். இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச் செய்யும். நாடகத் தமிழ் நடந்து காட்டி மக்களை நல்வழிப்புத்தும்.

*(இ)* சைவ சமயக்குரவருள் ஒருவராகிய சம்பந்தர் தம் பெயருக்கு முன் 'தமிழ்' என்பதையே அடைமொழியாகக் கொடுத்துத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்று குறிப்பிட்டுக் கொண்டார்.

*(ஈ)* வைணவ சமய ஆழ்வார்கள் பலரும் பல்வேறு அடை மொழிகளிட்டு 'விட்டு சித்தன் விரித்த தமிழ்', 'கோதை வாய்த்தமிழ்', 'பரகாலன் பைந்தமிழ்', 'சடகோபன் செந்தமிழ்' என்று தமிழின் பெயரைச் சிறப்பித்துள்ளனர்.

*(உ)* நமது நாட்டிற்குச் 'செந்தமிழ் நாடு' என்று பெயர் சூட்டியவர் பாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும், மொழிக்கு அடைமொழியாக 'செம்மையும்' அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியது.

*(ஊ)* 'தமிழ் தமிழ்' என்று கூறிக் கொண்டே போனால், 'அமிழ்து அமிழ்து' என்று ஒலிக்கும் எனக் கூறி மகிழ்ந்தவர் பாவேந்தர். அந்த அளவோடு விட்டு வைக்காமல் 'தமிழுக்கு அமுதென்று பேர். அது எங்கள் உயிருக்கு நேர்' எனவும் கூறிப் போற்றியவர்.

(2) **இனிமைச் சிறப்பு:** கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டுவருமாறு சொல்லியிருந்தார் அண்ணல். அவன் அன்று வராமல் மறுநாள் வெறும் கையோடு வந்து நின்றான். அண்ணல் கோபித்தார். அவன் பேசினான்.

'நேற்று மலைக்கு நடந்தேன். பலவிடங்களிலும் அலைந்தேன். இறுதியில் பெரும்பாறைத் தேன் கண்டு சிறிது கலைத்தேன். ஒரு கொடியைப் பிடித்தேன். எதிர் சென்று கலைத்தேன். சட்டியில் பிழிந்தேன்.... நன்றாக வடித்தேன். அதனைக் கண்டு மகிழ்ந்தேன். அதில் சிறிது குடித்தேன்; களித்தேன்; களைத்தேன்; அயர்ந்தேன்; மறந்தேன். இன்று காலை எழுந்தேன்; நினைத்தேன்; தேனை அடைந்தேன். எடுத்தேன். விரைந்தேன். நடந்தேன். வந்தேன். சேர்ந்தேன். இப்போதுதான் உங்கள் ஆளிடம் கொடுத்தேன்' என்று.

இதைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல், ''படித்தேன்'' என்று கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி 'தேன்' என்று சுவைக்கும்' என்கின்றார் அண்ணல். தமிழின் இனிமை தேனாக வடிகின்றது; இனிக்கின்றது.

(3) **எளிமைச் சிறப்பு:** தமிழ் மொழி எழுதவும் படிக்கவும் பேசவும் எளிதானது. இச்சிறப்பைப் பிறமொழிகளில் காண இயலாது.

தமிழ் எழுதுக்களே 30 (ஆய்தத்தை நீக்கி). 'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே'

தமிழ் மொழி பேசவும் எளிது. தமிழ்ச் சொற்களில் 100 எடுத்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு சொல்லையும் ஒலித்துப் பார்த்தால் அவை மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனி நாக்கு, அடி நாக்கு, நடு நாக்கு, அண்ணாக்கு, உள்நாக்கு கொண்டே ஒலிப்பதாக இருக்கும். தொண்டைக்குக் கீழ் வேலையே இராது. பிற மொழிச் சொற்கள் சிலவற்றிற்கு 100க்கு 30-40 வீதமும் சிலவற்றிற்கு 60-70 வீதமும் தொண்டைக்குக்

கீழிருந்து வலிந்து ஒலித்தாக வேண்டும். அவை 'பஹ்த் அச்சா ஹை' என்பது போன்றவை.

ஆண்டாள் நாச்சியார் வரலாற்றை கிருட்டிண தேவராயர் என்ற ஆந்திர மன்னர் 'ஆமுக்தமால்யதா' என்று தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார். என் அரிய நண்பர் தெலுங்குப் பேராசிரியர் சதாசிவ ரெட்டி என்பார் 'அதைப் படித்தால் 'தம்' வாங்கும்; அடி வயிற்றைக் கலக்கும்' என்று கூறுவார். அவரை ஒரு சுலோகம் பாடும்படி கேட்டேன். அப்படித்தான் இருந்தது.

இன்னொரு தெலுங்குப் பேராசிரியர் டாக்டர் கோதண்ட ராமய்யா என்பவரைப் 'போதன்ன பாகவதத்தில்' கசேந்திர மோட்சப் பகுதியைப் பாடும்படிக் (15 பாடல்கள்) கேட்டேன். அவை தேசி தெலுங்கில் (அதிகம் வடமொழி கலவாத தெலுங்கு) அமைந்திருந்தமையால் தென்றல் வீசுவதுபோல் இருந்தது!

(4) *எழுத்துச் சிறப்பு:* பிறமொழி எழுத்துகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு தமிழ் எழுத்துகளுக்கு உண்டு. அவற்றுள் ஒன்று 'ழ' என்ற எழுத்து. இது 'சிறப்பு ழகரம்' எனக் குறிப்பிடப் பெறுவது. 'தமிழ்' என்ற மொழியின் பெயரிலேயே 'ழ' கொலு வீற்றிருக்கின்றது.

''இசைக் கருவிகள் யாவும் தமிழகத்தில் தமிழினால் கண்டுபிடிக்கப் பெற்று, தமிழிலேயே பெயரிடப் பெற்றுள்ளன. அதுவும் தமிழுக்கே சிறப்பாகவுள்ள ''சிறப்பு ழகரத்தை'' ஒவ்வொன்றிலும் பதிய வைத்து

தோல் கருவிக்கு 'முழவு' எனவும்

துளைக் கருவிக்கு 'குழல்' எனவும்

நரம்புக் கருவிக்கு 'யாழ்' எனவும்

பெயரிட்டு இவை அனைத்தும் தமிழனின் சொந்தச் சொத்து என்பதை பண்டையிலேயே பதிய வைக்கப் பெற்றுள்ளது.

*(5) சொற்சிறப்பு:* தமிழ்மொழியிலுள்ள சிறப்புகளில் 'சொற்சிறப்பு' என்பதும் ஒன்று. இச்சிறப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இதனைப் பிற மொழிகளிலே காண இயலாது. தமிழ்ச் சொற்களின் தொகை ஏறக்குறைய 90,000 மட்டுமே. தமிழில் எந்தச் சொல்லும் ஏழெழுத்துக்கு உட்பட்டதே[6]. தமிழில் எட்டெழுத்துச் சொல்லைக் காண முடியாது. 6, 7 எழுத்துச் சொற்கள் மிகச் சில. 5 எழுத்துச் சொற்களும் சிலவே. 4 எழுத்துச் சொற்கள் பல. 3, 2 எழுத்துச் சொற்களே மிகப் பல. ஓரெழுத்துச் சொற்களும் தமிழில் உண்டு. அவை.

| | | |
|---|---|---|
| [அ] | ஆ – பசு | கோ – மன்னன் |
| | நா – நாக்கு | தீ – நெருப்பு |
| | தா – கொடு | மை – கருமை |
| | போ – செல்லல் | ஈ – ஓர் உயிர், கொடு |
| | கா – காத்தல் | பூ – மலர் |

என்பன போன்றவை.

*(ஆ) உருவம், பருவம்:* பிற மொழிச் சொற்கள் உருவத்தை மட்டும் காட்டும். தமிழ்ச் சொற்கள் உருவத்தையும் பருவத்தையும் காட்டும்.

| | | |
|---|---|---|
| பேதை | பெண் | 5 வயதுக்கும் கீழ் |
| பெதும்பை | பெண் | 10 வயதுக்கும் கீழ் |
| மங்கை | பெண் | 16 வயதுக்கும் கீழ் |
| மடந்தை | பெண் | 25 வயதுக்கும் கீழ் |
| அரிவை | பெண் | 30 வயதுக்கும் கீழ் |
| தெரிவை | பெண் | 35 வயதுக்கும் கீழ் |
| பேரிளம்பெண் | பெண் | 45 வயதுக்கும் கீழ் |

6. ஆங்கிலத்தில் 23 எழுத்துச் சொற்களும் உண்டு.

*(இ) ஆணுக்கும் இந்த வேற்றுமை உண்டு.*

| | | |
|---|---|---|
| பாலன் | ஆண் | 7 வயதுக்கும் கீழ் |
| மீளி | ஆண் | 10 வயதுக்கும் கீழ் |
| மறவோன் | ஆண் | 14 வயதுக்கும் கீழ் |
| திறலோன் | ஆண் | 15 வயதுக்கும் கீழ் |
| காளை | ஆண் | 16 வயதுக்கும் கீழ் |
| விடலை | ஆண் | 30 வயதுக்கும் கீழ் |
| முதுமகன் | ஆண் | 50 வயதுக்கும் கீழ் |

*(ஈ) பூ, இலைகளிலும் இந்த வேற்றுமைகள் உள்ளன.*

(i) பூ பற்றியவை

| | | |
|---|---|---|
| அரும்பு | பூ | அரும்பும் நிலை |
| மொட்டு | பூ | மொக்கு விடும் நிலை |
| முகை | பூ | முகிழ்க்கும் நிலை |
| மலர் | பூ | மலரும் நிலை |
| அலர் | பூ | மலர்ந்த நிலை |
| வீ | பூ | வாடும் நிலை |
| செம்மல் | பூ | வதங்கும் நிலை |

(ii) இலை பற்றியவை

| | | |
|---|---|---|
| கொழுந்து | இலை | குழந்தைப் பருவம் |
| தளிர் | இலை | இளமைப் பருவம் |
| இலை | இலை | காதற் பருவம் |
| பழுப்பு | இலை | முதுமைப் பருவம் |
| சருகு | இலை | இறுதிப் பருவம் |

*தமிழ் மொழியின் சொற்களஞ்சியம் அற்புதம்!*

6. *கவிதைச் சிறப்பு:* கவிதை புனைவது ஒரு கலை. சொற்களைத் தொடுப்பதும் பூக்களைத் தொடுப்பதும் ஒன்று போன்றதே. தொடுக்கப் பெற்ற பூக்கள் 'சரம்' என்று வழங்கும்; தொடுக்கப் பெற்ற சொற்கள் 'கவிதை' என்ற பெயர் பெறும். தமிழ்ப் புலவர்கள் கண்ட கனவே கவிதை. அது சொற்களைக் குறைப்பதற்காகவும் நினைவிற் கொண்டு வருவதற்காகவும் தோன்றியது.

பூக்களைத் தொடுப்பதற்கு நார் அமைதல் போல் சொற்களைத் தொடுப்பதற்கு சந்தி அமைகின்றது. சந்தி என்பது ஒரு சொல்லையும் மற்றொரு சொல்லையும் இணைக்கும் ஒருவித முறையாகும். அங்கு + இருக்கும் - அங்கிருக்கும்; சங்கு + ஊதும்; சங்கூதும்; பங்கு + ஆளி - பங்காளி. இந்தச் சந்திகளால் கவிதைக்கு இரண்டு வித நன்மைகள் விளைகின்றன. ஒன்று, முதல் சொல்லின் இறுதி எழுத்தையும் வரும் சொல்லின் முதல் எழுத்தையும் சேர்த்து ஒரு சொல்லாக ஒட்டுவது. மற்றொன்று, இச் சொற்களின் பொருள் கெடாமலும் ஓசை கெடாமலும் அவற்றிலுள்ள ஒவ்வோர் எழுத்தைக் குறைத்து விடுவது.

நினைவாற்றலுக்குக் கவிதைகள் துணை செய்கின்றன. கவிதைக்குத் துணை செய்வன அதிலுள்ள மோனையும் எதுகையுமாகும். இவை இரண்டுமின்றிக் கவிதை அமையாது. அமைந்தாலும் அது நினைவில் அமையாது.

சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி. அதனை அண்ணல் உரைநடையில் 320 சொற்களில் அமைக்கின்றார். இக் காட்சியை 74 எழுத்துகளாகச் சுருக்கிப் பொருள் கெடாமல் இளங்கோ அடிகள் தொடுத்த கவிதை இது.

**மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்**
**கண்டனவே தோற்றான் அக்காரிகை தன் சொற்செவியில்**
**உண்டனவே தோற்றான் உயிர்![7]**

7. சிலப்பதிகாரம் 11

இக்கவிதையில்,

(1) 320 எழுத்துகளை 74 எழுத்துகளாகக் குறைத்தும் பொருள் குறையவில்லை.

(2) கவிதையாக அமைக்கப்பெற்றதால் நினைவாற்றலுக்குள் அடங்குகின்றது. ஆனால், அண்ணல் காட்டிய உரைநடை அடங்காது.

(3) மெய் - விரி; கை - கண்; கண்ட - காரி - உண்ட - உயிர் என்பன மோனைகள்.

(4) மெய்யில் - கையில்; கண்ட உண்ட என்பன எதுகைகள். இவை நினைவாற்றலுக்குத் துணை செய்பவை.

(5) கண்ட + அளவு - கண்டளவு. உண்ட + அளவு - உண்டளவு; ஆனது சந்தநியினால் இது கவிதைக்குள் ஒட்டுமுறை.

(6) கவிதையோ மெய்யில் தொடங்கி உயிரில் முடிகின்றது.

(7) மெய் - உயிர் என்பதால் உடம்பைக் கண்டு உயிர் போயிற்று என்பதும் உண்மையைக் கண்டு உயிர் போயிற்று என்பதும் பொருள் நயங்கள்.

(8) உடலிற் புழுதி அவள் ஓடி வந்த தோற்றம்; அவிழ்ந்த கூந்தல் கணவனிழந்த தோற்றம்; கையிலுள்ள சிலம்பு தன் கணவன் கள்வனல்லன் என்பதற்குச் சான்று; கண்களிலிருந்து வழியும் நீர் வாழ்விழந்த தோற்றம்; காரிகையின் சொற்களிலே உண்மை; இந்த ஐந்தையும் கண்டதுமே கணவன் உயிரையும் மன்னன் உயிரையும் தோற்றான் என்பது கருத்து நயம்.

(9) மன்னன் தன்மீது பழி போக்கும் முன்னே உயிர் போக்கிக் கொண்டது ஒரு தமிழ்ப் பண்பாடு.

இங்கு அண்ணலாரின் உரை விளக்கம் முத்தமிழ் உரை விளக்கமாகவே அமைகின்றது. அதன் ஏழு நயங்கள், ஐந்து கருப்பொருள்கள் படிப்போர் படித்தே நுகர்தற்குரியன. உயிர் பறி கொடுத்து மெய்யாக வந்த கண்ணகி, அரசியையும்

அரசனையும் உயிரற்ற உடலாக்கிக் கூறும் பாட்டு என இம்முதலும் முடிவும் சுட்டுகின்றது என்று அண்ணல் குறிப்பிடும் எட்டாவது நயம், ஆறாவது கருத்துப் பொருள் மிக நன்று; மிக நன்று.

விரி வஞ்சி பிற சிறப்புகள் விடப் பெற்றன. அவற்றை அண்ணலரின் நூலில் கண்டு மகிழ்க.

1. **நீதி நூல்கள்:** அண்ணல் விசுவநாதம் தாம் பங்கு கொண்ட துறைகளிலெல்லாம் ஒழுக்கத்தையும் கடைப் பிடிப்பவர்; ஒழுக்க சீலர். ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பியவர்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும் [131]**

என்ற குறள் மணியின் ஒளியில் நடமாடியவர்.

சிறுவர்க்கும் இளைஞர்கட்கும் பயன்படும் பொருட்டு

(அ) நல்வாழ்வுக்கு வழி

(ஆ) மும்மணிகள்

(இ) நான்மணிகள்[8]

என்ற மூன்று நூல்கள் எழுதியுள்ளார். இவற்றில் பாடல்களும் உரையும் எதிரெதிராக அமைந்து படிப்போருக்கு உதவியாக உள்ளன.

*(அ)* **நல்வாழ்வுக்கு வழி:** ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த ஔவைப் பெருமாட்டி அருளிய மூதுரை 30ம், நல்வழி 40ம், 250 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த துறைமங்கலம்[9] சிவப்பிரகாச அடிகள் அருளிய நன்னெறியில் 30உம் ஆக 100 வெண்பாக்களைப் பொறுக்கி எடுத்து அவற்றின் எளிய உரைநடையில் கருத்துரையுடன் வெளியிடப் பெற்ற நூல் இது. அண்ணலாருக்கு அகவை ஏழில் அவர்தம் தந்தையார் அளித்த செல்வங்கள் இவை. நாள்தோறும் ஒவ்வொரு வெண்பாவாக

8. இம்மூன்றும் பாரி நிலைய வெளியீடுகள்; முறையே நான்காம் பதிப்பு 1991; பத்தாம் பதிப்பு 1991; ஏழாம் பதிப்பு 1994.

9. பெரம்பலூருக்கு அருகில் சாலையின் மீதுள்ள ஒரு சிற்றூர்.

மனப்பாடம் பண்ணியவை. இவை நாளடைவில் அண்ணலாரின் உள்ளத்தைக் கவர்ந்தன; நன்கு பயன்பட்டன. 'வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும்' அமைந்தன. இவை இக்கால இளைஞர்கட்குப் பயன்படும் பொருட்டு நூல் வடிவம் பெற்று வெளியிடப் பெற்றது.

(ஆ) **மும்மணிகள்:** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'திரிகடுகத்தின்'[10] மறுபிறவி இது. பழந்தமிழ் மக்களின் அறிவை, அன்பை, அறத்தை, பண்பை, வாழ்வை நன்கறியத் துணை செய்யும் முறையில் அமைந்தது. இந்நூல் கவிதையாக இருப்பதால் அதனை எளிய நடையில் எழுதிப் பொதுவுடைமையாக்கி மக்கள் அனைவரும் பயன் பெறுமாறு வழங்கியுள்ளார் கலைமாமணி விசுவநாதம்.

நேருக்கு நேராக கருத்துரையாகவே எழுதப் பெற்றுள்ளது. பெரும்பான்மையான கருத்துகள் திரிகடுகத்தை ஒட்டியனவே உள்ளன. காலத்திற்கேற்ப வேண்டாத சில விடப்பட்டு வேண்டிய சில வருவிக்கப் பெற்றுள்ளன. மக்களுக்கு இது நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளது.

(இ) **நான்மணிகள்:** 'நான்மணிக்கடிகை' என்னும் நூலின் (பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று)[11] மறுபிறவியாகும் இந்நூல். வெண்பா யாப்பில் அமைந்த பாக்களின் கருத்தை எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு எளிய நடையில் எழுதி நற்பணி செய்துள்ளார் நம் அண்ணலார். மும்மணிகள் போலவே, இதிலும் சில கருத்துகள் விடப் பெற்றும் சில சேர்க்கப் பெற்றுமாக அமைந்துள்ளது. இளைஞர்கட்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்று நம்பலாம்.

---

10. திரிகடுகம் – சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு மருந்து. இது உடலைப் பற்றிய பிணிகலைத் தீர்க்கும் ஒரு சிறந்த மருந்து. உள்ளத்தைப் பற்றி நிற்கும் பிணிகளைத் தீர்க்கும் இந்நூலும் மருந்தின் பெயரையே பெற்றிருப்பது ஒரு சிறப்பு. ஒவ்வொரு பாடலிலும் மூன்று முக்கிய கருத்துகள் அமைந்திருக்கும்.

11. உடற்பிணியைத் தீர்க்கும் நான்கு மருந்துச் சரக்குகள் அமைந்திருப்பது போல் உள்ளத்தின் பிணி தீர்க்கும் நான்கு முக்கிய கருத்துகள் அமைந்து நூலின் பெயராகியது.

பல்லாண்டுகட்கு முன்னர் மருந்துக் கடையில் உள்ள மாத்திரைகளை வாங்கி பொடி பண்ணி நீரில் கலக்கி நோயாளருக்குத் தரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.[12] இந்த முறையைப் பின்பற்றி அண்ணலார் பாக்களின் கருத்தை உரைநடையில் தந்தனர் போலும்!

**2. திருக்குறள்:** திருக்குறளை நீதி நூல் வகையில் சேர்த்தல் ஆகாது. அது காலங் கடந்த இணையற்ற ஏடு. அது செல்லும் காலந்தோறும் மாறாத, அவ்வக் காலத்திற்குப் பெருத்தமான, அறக்கருத்துகளை எடுத்து ஓதும். ஆகவே, அஃது ஓர் உலகப் பொதுமறை. அதனைத் தேசிய நூலாக்குவது ஆளும் அரசின் கடமை.

திருக்குறள் நெறி பரப்ப பல்வேறு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. நூல்கள் வெளி வந்து கொண்டுள்ளன. 'வள்ளுவர் வழி' என்ற திங்கள் இதழில் வள்ளுவம் பற்றிய பல அரிய கட்டுரைகள் வெளி வந்து கொண்டுள்ளன. ஆண்டுதோறும் அரசு திருவள்ளுவர் விருது வழங்கி வருகின்றது. ஆனால் குறள் நெறிப்படி ஒழுகுபவர் அரியராகவே காணப்படுகின்றனர்.

அண்ணல் விசுவநாதமும் கடந்த எழுபது ஆண்டுகளாக தமது பேச்சாலும் எழுத்தாலும் வள்ளுவர் நெறி பரப்பி வருகின்றார். இப்பெருமகனார்,

(1) திருக்குறள் புதைபொருள் (2 பகுதிகள்)

(2) வள்ளுவரும் குறளும்

(3) திருக்குறள் கட்டுரைகள்

(4) திருக்குறள் செயல்திறன்

12. இப்போது மருத்துவர்கள் நோயாளர்களிடம் சீட்டு எழுதித் தந்து மாத்திரைகளை வாங்கச் செய்து அவற்றை விழுங்கி நீர் பருகுமாறு பரிந்துரைக்கின்றனர்.

(5) வள்ளுவர் உள்ளம்[13]

*இவை ஐந்தும் வள்ளுவர் நெறி பரப்பும் கருவி நூல்கள். அண்ணல் சொல்லியபடி நடப்பவர். ஒழுக்கம் அவர்தம் மூச்சு. ஒழுக்கம் தவறியவர்களைக் கண்டால் சீறுவார்.*

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் [664]

*என்ற குறளில் உள்ள "சொல்லுதல் யார்க்கும் எளிய" என்பது பிறர் பின்பற்றும் நெறி. "சொல்லிய வண்ணம் செயல்" நம் அண்ணல் கடைப்பிடிக்கும் நெறி. இன்று நாம் காண்பதெல்லாம்*

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல் [834]

*என்ற குறள் குறிப்பிடும் பேதையர்களையே.*

*(1) திருக்குறள் புதை பொருள்: இந்த நூலின் இரண்டு பகுதிகளையும் படிப்போர் "அண்ணல் ஆய்ந்து கற்ற ஆய்வாளர்" என்பதை நன்கு அறிவர். முதற் பகுதியில் 12 குறள் மணியின் பொருளையும், இரண்டாம் பகுதியில் 10 குறள் மணியின் பொருளையும் கோலார் தங்க வயலில் தோண்டத் தோண்ட தங்கம் கிடைப்பது போல் "தோண்டித் தோண்டி" ஆழ் பொருளைக் காட்டுகின்றார். "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி" (396) போல் இக்குறள் மணிகளில் புதை பொருளைப் புலப்படுத்துகின்றார். 'ஒழுக்கம் விழுப்பம் தரலால்' (131) என்ற குறளில் 'உயிரினும்' என்ற சொல்லுக்கு இவர் தோண்டித் தோண்டிக் காட்டும் நுண் பொருளும் (முதல் பகுதி பக் 10-13) 'கொல்லா நலத்தது' (984) என்ற குறளில் 'பிறர்' என்ற சொல்லுக்கு அகழ்ந்து காட்டும் புதை பொருளும் (முதற்பகுதி பக். 17) 'உடுக்கை இழந்தவன்' (988) என்ற குறளில்*

13. இவை ஐந்தும் பாரி நிலைய வெளியீடுகள். முறையே பதினோராம் பதிப்பு 1990, நான்காம் பதிப்பு (1998), பதின்மூன்றாம் பதிப்பு 1990, ஒன்பதாம் பதிப்பு 1990, ஒன்பதாம் பதிப்பு 1990, ஏழாம் பதிப்பு 1994.

வரும் 'இழந்தவன்' என்ற சொல்லுக்குப் பன்னி உரைக்கும் ஆழ் பொருளும் (முதற் பகுதி - பக் 43) நம்மை வியக்க வைக்கின்றன.

'கைவேல் களிற்றொடு' (774) என்ற குறளில் வரும் 'நகும்' என்ற சொல்லுக்குப் பொருள் கூறும்போது 'என்ற' சொல்லுக்குக் காட்டும் பொருளும் (இரண். பகுதி பக் 40-4) 'கூத்தாட்டவைக் குழாத்து' (332) என்ற குறளுக்கு 'செல்வம் வருதலும் போதலும்' பற்றி இவர் கூறும் விளக்கமும் நம்மை வியக்க வைக்கின்றன. இவ்விடத்தில் ரசிகமணி டி.கே.சி. கூறும் விளக்கத்தையும் நினைவு கூர்கின்றோம். ''செல்வம் சேர்தல் மெதுவாக நீண்ட காலமாக நடைபெறும் என்பது முதல் அடியிலுள்ள நான்கு நீண்ட சீர்களாலும், 'செல்வம் போதல்' விரைவாக நடைபெறும் என்பதை இரண்டாம் அடியிலுள்ள மூன்று குறுகிய சீர்களாலும் குறிப்பால் புலப்படுத்துகின்றார், வள்ளுவர் '' என்பது ரசிகமணியின் உரை.

(2) வள்ளுவரும் குறளும்: இது கோவை திருவள்ளுவர் படிப்பகத்து ஆண்டு விழாவில் (1953) அண்ணல் விசுவநாதம் பேசிய பேச்சு. கொம்பு, சுழி மாறாமல் உலக அறிவியல் அறிஞர் G.D. நாயுடு அவர்களால் ஒலிப்பதிவு செய்யப்பெற்று அச்சு வடிவம் பெற்றது. திருக்குறள்பற்றி அனைத்து செய்திகளையும் சுருக்கமாக அறிந்து கொள்வதற்கேற்ற கையேடு.

அண்ணல் சுவை படப் பேசுவதில் வல்லவராதலால், நுண்ணிய கருத்துகளுக்கு அழகிய வடிவம் தந்திருக்கும் நேர்த்தியையும் வினா விடை புகுத்தி கேட்போருக்கு விருந்து அளித்தலையும் நூலெங்கும் குமிழியிடுவதைக் காணலாம். உவமைகள் எல்லாவற்றிற்கும் கதை வடிவம் தந்திருப்பது அண்ணலாரின் தனிப்பெருமை. இதை இந்நூலில் காணலாம். நகையாசையைப்பற்றிப் பேசுவோர்போல் தொடங்கி கண்ணுக்கு அணிகலமாகும் கண்ணோட்டத்தைப் பற்றிக் கூறும் இடம் (பக் 41) நயம் செறிந்தது. 'வள்ளுவர் ஒரு சூதாடி'

என்று தொடங்கி மாணவர்களின் சீட்டாட்டத்தைக் கடிந்து, ஒன்றெய்தி நூறு இழக்கும் சூதர் பெற்ற ஒன்று 'சூதர்' என்ற பட்டமே என விரித்துரைத்து பரிமேலழகரின் உரை பொருத்தமின்மையைக் காட்டுந்திறன் அற்புதம்.

மாணவர்கட்கு 'துப்பாக்கிக்' குறளையும், 'கிராப்புக் குறளை'யும் (பக். 58) 'திருடர் செய்தி'யைக் கூறும் பகுதியும் (பக். 60), போன்ற இடங்கள் கேட்போருக்கு நகைச்சுவை விருந்தாக அமைகின்றது. பேச்சு ஒலி நாடாவில் ஏறி, பின்னர் அச்சேறியதால் நூலைப் படிக்கும் போது அண்ணலின் பேச்சை நேரில் செவி மடுப்பதுபோல் உள்ளது. உயிரோட்டமுள்ள பேச்சு.

(3) **திருக்குறள் கட்டுரைகள்:** இதில் பதினொரு கட்டுரைகள் அடக்கம். இதில் நாம் காண்பது, "திருக்குறளே அண்ணல் வலம் வரும் கோவில்; திருவள்ளுவரே அவர் வழிபடும் தெய்வம். வள்ளுவர் வகுத்த நெறியே அண்ணல் கடைப்பிடிக்கும் நெறி. திருக்குறள் கருத்துகளே அவர் 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை''' இவையே பதினொரு கட்டுரைகளாக ஒரு பதிகம் போல் (பலன் கூறும் பாடல் உட்பட) அமைந்து நூல் வடிவமாக இலங்குகின்றது. இஃது அண்ணலாரின் அறுபதாம் ஆண்டு விழா நினைவு வெளியீடு (1958). இக்கட்டுரைகளில் என்னை மிகக் கவர்ந்தது 'பீலி பெய் சாகாடு' (7வது கட்டுரை) என்பது. காரணம், வாழ்க்கையநுபவங்கள் பல செறிந்திருப்பதால்.

(4) **திருக்குறளின் செயல்திறன்:** இருப்பூர்தி கால அட்டவணை வழிப்பயணத்திற்கு துணை நிற்பதுபோல் திருக்குறள் வாழ்க்கைப் பயணத்திற்கு உதவும் முறையைக் காட்டுவது. திருக்குறளில் செயல்திறனுக்கு 12 தலைப்புகள் இருப்பனவாகக் காட்டுவார்.

கால்பகுதியில்: ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை ஊக்கம் உடைமை என மூன்று.

அரைப்பகுதியில்: தெரிந்து செயல் வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என மூன்று.

முக்கால் பகுதியில்: வலியறிந்து செய்தல், காலம் அறிந்து செய்தல், இடன் அறிந்து செய்தல் என மூன்று.

முழுப்பகுதியில்: வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல் வகை என மூன்று.

திருக்குறளில் எந்தப் பொருளுக்கும் இந்தத் துணைத் தலைப்புகள் இல்லை. இதிலிருந்து மக்களாய்ப் பிறந்தவர்க்குப் பெரிதும் வேண்டப் பெறுவது செய்திறனே என்று அறிய முடிகின்றது.

*(5)* **வள்ளுவர் உள்ளம்:** இது திருச்சி பொன்மலை திருக்குறள் கழகத்தில் 'தமிழ்த்திருநாள்' கூட்டத்தில் அண்ணல் நிகழ்த்திய சொற்பொழிவு; நூல் வடிவம் பெற்றது இது. 'உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்' (596) என்பதுவே 'வள்ளுவர் உள்ளம்'. இந்த உள்ளத்தில் நாடுபற்றிய உள்ளம், வாழ்வுபற்றிய உள்ளம், நடைபோடும் உள்ளம், தந்தை உள்ளம், துறவியுள்ளம், ஒழுக்க உள்ளம், அன்பு உள்ளம், அருள் உள்ளம், இரக்க உள்ளம், அரச உள்ளம், பிச்சைக்கார உள்ளம், விருந்துள்ளம், வேடன் உள்ளம், உண்மை உள்ளம், சூதுள்ளம், குடிகாரர் உள்ளம், காதல் உள்ளம், பகை உள்ளம், நட்புள்ளம், வியப்புள்ளம், கேடுள்ளம், ஆராய்ச்சியுள்ளம், மக்கள் உள்ளம், ஆண்மை உள்ளம், பெண்மை உள்ளம் என்று பல உள்ளங்கள் அடங்கியிருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார் அண்ணல்.

இவை தவிர இந்நூலில் வறுமை உள்ளம், நோய் உள்ளம் என்ற உள்ளங்களும் அடங்கியுள்ளன. ஒருவருடைய உயர்வு அவருடைய உள்ளத்தனையது என்பது வள்ளுவர் பெருமான் நமக்குக் காட்டும் உண்மை.

*3.* **சிலப்பதிகாரம்:** 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியார் போற்றிய சிலம்பைப் பற்றிய அண்ணலாரின் படைப்பு '**இளங்கோவும் சிலம்பும்**' என்பது. அவதாரத்தில் வாமனத்திலிருந்து திரிவிக்கிரமம் வளர்ந்ததாக வரலாறு. ஆனால் இங்கு திரிவிக்கிரமத்திலிருந்து வாமனம்

தோன்றியுள்ளது. இளங்கோ அடிகளின் சிலம்பு இந்நூலாகச் சுருங்கி அனைத்துச் செய்திகளையும் அடக்கிக் கொண்டுள்ளது.

இந்நூல் இளங்கோ அடிகள், காப்பியத்தில் ஒரு பார்வை, காப்பியச் சுவை என்று மூன்று தலைப்புகளாக நடை பெறுகின்றன. திருக்குறளைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

திணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பணையளவு காட்டும் படித்தால்[14]

என்று கூறும் கருத்து நம் அண்ணலின் நூலுக்கு நூற்றுக்கு நூறு ஒக்கும். தவிர, அண்ணல் சிலம்பை திறனாய்வு நோக்கிலும் காண்கின்றார். சில கருத்துகள்:

(1) கண்ணகியின் பெயர் 'கண்ணழகி' என்றிருக்க வேண்டும். இதன் சுருங்கிய வடிவமே கண்ணகி என்பது.

(2) தமிழகத்தில் இன்று கிடைக்கின்ற பழமையான இலக்கண இலக்கிய நூல்கள் மூன்று. அவை தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம். மூன்றும் முதல் நூல்கள்.

(3) தமிழ் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ர பெயரை முதன் முதலில் சூட்டிய பெருமை இளங்கோஅடிகளுக்கு உரியது. 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை' என்பது அவர் திருவாக்கு.

(4) இளங்கோ அடிகள் கண்ணகியைக் குலமகளாகவும் மாதவியைக் கலை மகளாகவும் (விலை மகள் அல்ல) காட்டி கற்பின் திறத்தில் இருவரையும் ஒன்றாகவே வைத்து எண்ணியவர்.

(5) சீத்தலைச் சாத்தனார் சங்கப் புலவர். சீத்தலை என்ற ஊரினைச் சார்ந்தவர். கூல வாணிகன் சாத்தனார் என்பவர் மதுரையைச் சார்ந்தவர். இளங்கோஅடிகட்குத் துணை புரிந்தவர். இருவரும் ஒருவர் அல்லர்.

14. திருவள்ளுவமாலை-5 (கபிலர்)

(6) "கோவலனை விட்டுத் தனித்திருந்தபோது மங்கல அணியைத் தவிர கண்ணகி பிற அணிகளை அணியா திருந்தாள்" என்பது இளங்கோ அடிகளின் கூற்று. இது தாலி என்பது அண்ணலாரின் கருத்து.

(7) ஓவியத்துள் ஓர் ஓவியம் காட்டிய பெரும் புலவர் (பக். 30)

(8) அக்காலத்தில் மதுரை மாநகரில் சான்றோர் ஒருவர் கூட இல்லை. (பக். 39)

(9) வரந்தரு காதையில் "பரிவும் இடுக்கணும்' என்று தொடங்கி, 'அல்லவை கடிமின்' என முடியும் பத்து அடிகளில் உள்ள அறிவுரைகள் உலக மக்கள் அனைவரையும் நோக்கிக் கூறியவை.

4. **திருவருட்பா:** பாரினில் பரந்த நோக்கமுள்ள வள்ளலார் பேரிலும் அவர்தம் படைப்பான திருவருட்பா பேரிலும் பரந்த நோக்கமுள்ள அண்ணல் விசுவநாதத்திற்கு ஈடுபாடு இருந்தது வியப்பில்லை. 1980ஆம் ஆண்டு சனவரி 9, 10 நாட்களில் அண்ணல் விசுவநாதம் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளே '**வள்ளலாரும் அருட்பாவும்**' என்ற நூல் வடிவம் பெற்றுள்ளன. இந்நூல் இராமலிங்க அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்புகளும் அவர்தம் திருவருட்பா பற்றிய குறிப்புகளும் அடங்கியது. இக்குறிப்புகளை விரித்து எழுதினால் அது விரிந்த பெரு நூலாகத் திகழும். ஆக இக்கூறிய நூல்களனைத்தும் திருச்சி வணிகர் திலகத்தின் இயற்றமிழ்க் காதலுக்கு எடுத்துக்காட்டு களாக அமைகின்றன.

**இசைத்தமிழ்:** இசைத்தமிழ் முத்தமிழில் ஒன்று. இது தமிழகத்தின் சொந்த சொத்து. இசைத்தமிழ், தமிழர், தமிழகம் தோன்றிய காலம் தொட்டே தோன்றி உலகத்தின் தொன்மையான தொன்றாகக் காட்சி அளிக்கின்றது.

தமிழ்ச் சான்றோர்கள் ஒழுக்கத்தை உயர்ந்த ஒன்றாக்கினார்கள். இலக்கியத்தை அகம், புறம் என இரண்டாக்கினார்கள். தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாக்கினார்கள். காற்றைக் கோடை, கொண்டல், வாடை, தென்றல் என நான்காக்கியும், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக்கியும், சுவையை இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உப்பு, உவர்ப்பு என ஆறாக்கியும், இசையைக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழாக்கியும் பாகுபடுத்திக் கண்டனர். உலகில் எந்த நாட்டினரும், எந்த மொழியினரும், எந்த அறிஞரும், ஆறாவது நிலத்தையும், ஏழாவது சுவையையும், எட்டாவது இசையையும் இன்னும் கண்டாரில்லை. இசையின் ஒலிச் சுருக்கமாக ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனக் குறித்தனர். இசையைச் சங்கீதம் எனவும், பண்ணை இராகம் எனவும், அலகைச் சுரம் எனவும் மாற்றித் தமிழிசையையே கர்நாடக இசை எனக் கூறி அது தமிழிசைக்கு வேறானது என்றும் கூறிக் கொண்டுள்ளனர். கர்நாடக இசை என்பது தமிழிசை என்பதும் ஒன்றே; வேறல்ல. கர்நாடக இசை என்பதிலும் தவறில்லை. கர்நாடகம் என்பது பழமை என்பதையும், கர்நாடக இசை என்பது பழமையான இசை என்பதையுமே சுட்டும்.

சிலப்பதிகாரம் மூன்றாவது காதையாகிய அரங்கேற்று காதையில் இளங்கோ அடிகள் இசை நுணுக்கத்தை, அமைப்பை, அழகை, இலக்கணத்தை மிக விரிவாகக் காட்டியுள்ளார். இதுவே 1800 ஆண்டுகளுக்கு முந்தியது. அதில் காணப்படும் மேற்கோள்களாகக் காட்டப் பெறுகின்ற இசை நுணுக்க நூல்கள் எத்தனை ஆயிரம் ஆண்டுகட்கு முந்தியனவோ யார் அறிவார்? அந்நூல்களின் பெயர்கள் 1. பெருநாரை, 2. பெருங்குருகு, 3. பஞ்சபாரதீயம், 4. இசை நுணுக்கம் என்பன. இவற்றில் ஒன்று கூட இன்றில்லை. அனைத்தும் காலத்தால் அழிந்தன; கரையான்களால் தின்னப் பெற்றன. பகைவர்களால் எரிக்கப் பெற்றன. ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் அள்ளிப்

போடப் பெற்றன. இன்று கிடைப்பவை பஞ்ச மரபும் சிலப்பதிகாரமுமே.

## 2. இசைத்தமிழ்க் காதல்:

நம் அண்ணல் இசைத் தமிழ்க்காதலர். திருவனந்தபுரம் தி. இலக்குமணப் பிள்ளையிடம் இசையறிவு பெற்றவர். இதனால் நல்ல இசைப்புலமை ஏற்பட்டது. தமிழ் நாட்டில் தமிழ் இசை இயக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. தமிழிசைப் பெருமை குறித்தும் தமிழிசை இலக்கியம் குறித்தும் பல கூட்டங்களில் நன்கு விளக்கிக் கூறி எதிரிகளின் உளுத்த வாதங்களை அடக்கியவர்; சான்றுகளுடன் விளக்கி உண்மை நிலையை நிறுவிக்காட்டியவர்.

நம் அண்ணலால் இசை இயக்கம் பற்றிப் பல மாதங்கள், பல ஊர்களில், பல்வேறு மாநாடுகளில் பல நூறு சொற்பொழிவுகள் செய்து மக்களை விழிப்படையச் செய்தவர். இவற்றுள் குறிப்பிடத்தக்கது இவர் நடத்திய தமிழிசை மாநாடு. இது இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் முன்னிலையில் வியக்கத்தக்க முறையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழ் நாட்டிலுள்ள இசைவாணர்கள் அனைவருமே பங்கு கொண்டு சிறப்புச் செய்தனர். ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து அரிய சொற்பொழிவு செய்தார்.

அடுத்து, மதுரையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாடு குறிப்பிடத்தக்கது. இம்மாநாட்டில் 'இசை' 'நடிப்பு' என்ற தலைப்புகளில் உருக்கமான பொழிவுகள் நிகழ்த்தினார் நம் கலைமாமணி. இம்மொழிவுகள் மாநாட்டு மலரிலும் வெளி வந்துள்ளன.

கும்பகோணம் மாநாட்டில் அவ்வூர் (வழக்கறிஞர் எல். ஆராவமுத ஐயங்கார் நடத்தியது) திருச்சி இசைமாமணி விசுவநாதம் ஒன்றரை மணி நேரம் மிக உருக்கமான அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். தமிழிசைக்கு ஆதரவாகப் போராடிய கல்கி (10-5-1953) இதழில் நம் அண்ணலின்

படத்தைப் போட்டு அழகிய சிறு குறிப்புடன் வெளியிடப் பெற்றிருந்தது.

இவர்தம் இசைப்புலமைக்குச் சான்று இவர்தம் 'இசைச்சிறப்பு' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரையாகும்.[15] இதையே விரித்து அடிக்குறிப்புகளுடன் எழுதினால் பல்கலைக்கழக எம்.லிட் அல்லது எம்.ஃபில் பட்டத்திற்குத் தகுதியுடையதாகும். இசைபற்றிய பல்வேறு நுணுக்கச் செய்திகள் அடங்கிய கட்டுரையாகும் இது.

## 3. நாடகத்தமிழ்க் காதல்

நாடகத் தமிழிலும் நம் அண்ணலுக்குக் காதல் உண்டு. இவர் இயற்றமிழைப் பலாப்பழத்துக்கும் இசைத்தமிழை மாம்பழத்துக்கும், நாடகத் தமிழை வாழைப்பழத்துக்கும் ஒப்பிட்டுப் பேசி மூன்றின் பெருமையையும் முப்பழத்தின் பெருமையோடு ஒப்பிடுவார்.

நாடகம் என்பதற்கு உள்ளத்தில் உணர்ச்சி தூண்டுவது என்று பொருள்படும். நாம் ஒரே இடத்தில் இருந்துகொண்டு காடு, மலை, நாடு, நகர், ஆறு, அரண்மனை அனைத்தையும் ஒரே இடத்தில் பார்த்தும், பலவகையான வேடங்களைத் தாங்கிய பல்வேறு மக்களின் போக்கு, குணம், செயல் அனைத்தையும் ஒரே நேரத்தில் கண்டும் கேட்டும் உணர்ச்சி பெறுகின்ற ஒரே கலைக்கூடம் நாடகம் என்பது.

நாடகக் கலை ஓர் உயர்ந்த கலை. பல மாதங்கள் பல மேடைகளில் பேசி மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கின்ற கருத்துகளை ஒரே நாளில் ஒரே நாடகத்தின் மூலம் பதிய வைத்து விட முடியும். அவ்வாறே பல ஆண்டுகள் படித்து அறியக்கூடியவற்றை, பல திங்கள் கேட்டு அறியக் கூடியவற்றை ஒரு நாளில் ஒரே நாடகத்தைப் பார்த்து அறிய முடியும்.

நடிப்பது என்பது 'போலி'; அஃதாவது உண்மை யல்லாதது. நடிப்பு அனைத்தும் நடிப்பாகி விடாது. நடிப்பில்

15. தமிழின் சிறப்பு என்ற நூலில் பக் 79-90

ஒரு துடிப்பு காணப் பெறுவதே நடிப்பாகும். அந்நடிப்பும் ஆரவாரத்தில் தோன்றாமல் அமைதியில் தோன்றியதாக வேண்டும். அதை உணர்ச்சியற்ற நடிக.ரிடத்தில் ஒருபோதும் காண முடியாது. வயிற்றில் துணியைக் கட்டிக் கொண்டு பிள்ளைத்தாட்சி வேடம் போட்டுக்கொண்டு திருச்சி மணிக் கூண்டருகில் பட்டப் பகல் 12 மணிக்கு சித்திரை மாதத்து வெய்யிலில் கொதிக்கும் தரையில் மகப்பேறு பெறும் நிலையில் மயக்கமிட்டு கிடக்கும் நிலை, அருகில் மூன்று குழந்தைகள், அடுத்துக் கணவனது கவலை கொண்ட முகம் - பெருங்கூட்டம், காசுக் குவியல் - இந்தக் காட்சி சிறந்த நாடகக் காட்சி என்று கூறுவார்[16]. "இது நடிப்பு; இவள்தான் நடிகை!" என்பது அண்ணல் தரும் சான்றிதழ்!

'தமிழின் சிறப்பு' என்ற நூலில் 'நாடகச் சிறப்பு' என்ற கட்டுரை நம் அண்ணலின் நாடகத் தமிழ்பற்றிய அறிவுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இவர்தம் 'தமிழ்ச் செல்வம்'[17] என்ற நாடக நூல் மற்றோர் எடுத்துக்காட்டு. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியாரின் அணிந்துரையைக் கொண்டது. புகழ் பெற்ற நாடகக் கலைஞர்களாகிய டி.கே.எஸ் சகோதரர்கள் இதனை நடித்து நாடெங்கும் பரப்பினர். டில்லி, சென்னை, திருச்சி, மைசூர் வானொலிகள் நடித்து ஒலி பரப்பி நாடறியச் செய்தன.

இங்ஙனம் பல்வேறு வகையில் தமிழ்த் தொண்டு புரிந்த திருச்சி விசுவநாதத்துக்கு திருச்சி தமிழ்ச் சங்கம் 1957இல் "முத்தமிழ்க்காவலர்" என்ற விருது வழங்கிச் சிறப்பித்தது. இப்பெயரே அவர் இயற்பெயராகவும் நிலைத்து விட்டது "விசுவநாதமே முத்தமிழ்க் காவலர்; முத்தமிழ்க் காவலரே விசுவநாதம்" என்ற மரபும் நிலைத்து விட்டது.

16. தமிழின் சிறப்பு என்ற நூலில் நாடகச் சிறப்பு என்ற கட்டுரையில் பக் 95-96
17. இது பாரி நிலைய வெளியீடு. இதன் 9 ஆம் பதிப்பு 1982ல் வெளி வந்தது (முதற்பதிப்பு 1955)

3

# வணிகர் திலகம்

**கலைமாமணி** *கி.ஆ.பெ. விசுவநாதம் வறுமையிலும் செம்மாந்து நின்றவர். செல்வம் மேலோங்கிய நிலையிலும் செருக்கின்றி வாழ்ந்தவர். அவர்தம் சீரிய வாழ்க்கை வணிகர் குலத்திற்கே[1] கலங்கரை விளக்கமாக - துருவ மீனாக - நின்று நிலவுகின்றது. இப்பெரியாருக்குத் துணையாக நின்றவை மூன்று; 1. நாணயம் - பணம். 2. நாணயம் - சொன்னபடி இருப்பதும் நடப்பதும். 3. நாணயம் - 'நா நயம்'. இவற்றை இக்கட்டுரையில் விளக்குவோம்.*

**வணிகர்:** *வணிகர் என்பவர் யார்? கி.ஆ.பெ.வி அவர்களின் கருத்துப்படி மக்களுள் அதிகத்திறமைசாலிகளாக இருப்பவர்கள் வணிகர்களே. இதற்குக் காரணம் என்ன? அவர் கூறுவார்: ஏழைகளிடத்தும் செல்வர்களிடத்தும், அரசாங்கத் திடத்தும் பொதுமக்களிடத்தும், கிழவர்களிடத்தும், இளைஞர்களிடத்தும், குழந்தைகளிடத்தும், ஆண்களிடத்தும், பெண்களிடத்தும், நல்லவர்களிடத்தும், பொல்லாதவர் களிடத்தும், படித்தவர்களிடத்தும், பாமரர்களிடத்தும், அறிந்தவர்களிடத்தும், அறியாதவர்களிடத்தும் பழகுவதற்கு*

1. 'வணிகர் - வணிகம்' என்பன நல்ல தமிழ்ச் சொற்கள். 'வாணிகம்' என்ற சொல் வள்ளுவரால் கையாளப் பெறுகின்றது. வணிகர் செய்யும் தொழில் 'வாணிகம்' வசுதேவர் மகன் வாசுதேவன் என்பது போல. சிறிய வாணிகத்தை 'வியாபாரம்' என்ற சொல்லாலும் பெரிய வாணிகத்தை 'வர்த்தகம்' என்ற சொல்லாலும் குறிப்பது நடைமுறை. 'வாணிகர்' சங்கப் புலவர்களுள் ஒருவர் கூலவாணிகம் சாத்தனார். எனினும், வணிகர் - வாணிகம் என்பவற்றையே நாம் கையாளுகின்றோம்.

வாய்ப்புகள் பெறுவதனாலேயாகும். இந்தப் பல்வேறு அநுவபங்கள் - பட்டறிவு - அவர்களைத் திறமைசாலிகளாக்கு கின்றன.[2]

**வாணிகம்:** எது வாணிகம்? கி.ஆ.பெ.வி கூறுவார்: பொருள்களைக் கிடைக்கும் இடங்களில் வாங்கி கிடைக்காத இடங்களில் விற்பதும், விளையுமிடங்களில் வாங்கி விளையாத இடங்களில் விற்பதும், உற்பத்தி செய்யும் இடங்களில் வாங்கி உற்பத்தி செய்யாத இடங்களில் விற்பதும், கிடைக்கும் காலங்களில் வாங்கி கிடைக்காத காலங்களில் விற்பதும் **வாணிகம்**. மேலும் உழவர்கட்கும் தொழிலாளி கட்கும் பொதுமக்களுக்கும் ஒரு பாலமாய் அமைவதும் வாணிகம் ஆகும். இதனைச் செய்யும் வணிகர்கட்கு '**ஊதியம்**' அடைய உரிமை உண்டு. அஃது ஓர் அளவுக்கு உட்பட்டிருக்கும் '**இலாபம்**' என்று பெயர் பெறும். அளவுக்கும் மீறினால் அது '**கொள்ளை**' என்றாகிவிடும்![3]

**வணிகச் சின்னம்:** வணிகரின் சின்னமாக இருப்பது **தராசு**.[4] சான்றோர்கட்கு அறம் சொல்ல வந்த வள்ளுவப் பெருந்தகை வணிகப் பெருமக்கள் அன்றாடம் கையாளுகின்ற தராசைச் சுட்டிக்காட்டி அதன் நடுமுள் எப்படி இரு பக்கமும் சாய்ந்து விடாமல் நிற்கின்றதோ, அப்படியே சான்றோர்கள் தங்கள் உள்ளத்தை நடுநிலைமை பிறழாமல் வைத்திருத்தல் வேண்டும் எனச் சாற்றுகின்றார்.

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி [118]**

என்பது அவர்தம் திருவாக்கு. இஃது எவ்வளவு உயர்ந்த இடம் என்பதை ஒவ்வொரு வாணிகரும் எண்ணிப் பார்த்து இறும்பூது அடையலாம்.

2. எது வியாபாரம்? எவர் வியாபாரி? – பக். 5
3. மேற்படி நூல் பக். 1,2
4. நீதித் துறைக்கும் இதுவே சின்னமாகும்.

வாணிகம் செய்யும் அன்பர்களுக்கு வள்ளுவர் பெருமான் காட்டும் ஒரு புதிய வழியை நமக்குக் காட்டுவதை கி.ஆ.பெ.வி. வணிகர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். எல்லா வாணிகமும் வாணிகமல்ல; அஃது ஓர் உயர்ந்த முறையில் அமைய வேண்டும். எப்படி? வணிகத் தொழில் புரிகின்றவர்கள் பிறர் பொருளையும் தம் பொருள் போல் கருதிச் செய்ய வேண்டும். நூலாசிரியர்கள் தம் நூல்களைத் தம் செலவில் அச்சிட்டு அவற்றையும் பொட்டலங் களாகப் பாதுகாப்பு முறையில் தருபவற்றைப் புத்தக வணிகர்கள் காப்பாற்ற வேண்டும் என்ற குறிப்பும் இதில் அடங்கியுள்ளது.

> வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோற் செயின் [120]

என்ற பொய்யாமொழியில் இக்கருத்து அடங்கியிருத்தலைக் கண்டு மகிழலாம்.

நாணயம்-பணம்: ஒரு வாணிகத்திற்குப் பொருள் தேவை; அதாவது மூலதனம் இன்றியமையாதது. 'முதல் இல்லாதோர்க்கு ஊதியம் இல்லை' என்பது ஒரு பொன் மொழி. கி.ஆ.பெ.வி கருத்துப்படி முதல் வைத்துத் தொழில் செய்பவன்தான் முதலாளி. கடன் வாங்கித் தொழில் செய்பவன் முதலாளி ஆகான். வேண்டுமானால் 'கடனாளி' என்று திருநாமம் சூட்டலாம். கடன் வாங்கி வாணிகம் செய்பவன் வெற்றி பெற முடியாது. வாணிகத்தில் வரும் 'இலாபம்' அனைத்தையும் வட்டி விழுங்கி விடும். 'யானை அசைந்து தின்னும்; வட்டி அசையாமல் தின்னும்' என்பது நம் ஆன்றோர் கண்ட பழமொழி. "காசுக்கு எட்டு சட்டி வாங்கி ஒரு சட்டியை எட்டுக் காசு வீதம் விற்றாலும் வட்டிக்குக் கட்டாது" என்பது மற்றொரு பழமொழி.

இன்னொரு கருத்தையும் கி.ஆ.பெ.வி. விளக்கத்துடன் காட்டுவார். ஆட்டுச் சண்டை, மாட்டுச் சண்டை, கோழிச் சண்டை ஆகியவற்றைப் பார்ப்பதில் மனிதனுக்கு மட்டற்ற

மகிழ்ச்சி என்பதை நாம் அறிவோம். அதிலும் யானைப் போரைப் பார்ப்பதால் அவன் அடையும் மகிழ்ச்சிப் பெருக்குக்கு அளவே இல்லை. இதில் யானை தன் பக்கம் திரும்பினால் தீங்கு விளையுமே என்ற அச்சமும் நெஞ்சைக் கிள்ளும். ஆனால் குன்றின்மீது ஏறி நின்று அப்போர்க் காட்சியைக் காண்பதில் அவனுக்கு அச்சம் ஏற்படாது. அஃது எப்படிப் பட்டது என்பதைப் பொய்யாமொழியார் அடியிற் கண்டவாறு விளக்குவார்.

அதிக முதல் போட்டுத் தொழில் செய்யும் ஒரு வணிகன், தன் வாணிகத்தை எவ்வித இழப்புமின்றி வெற்றியோடு செய்து மகிழ்ச்சி அடைகின்றானோ அது போன்று யானைப் போர்க் காட்சியைக் கண்டவனும் மகிழ்ச்சி அடைவான்.

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை [758]**

என்பது பொய்யாமொழி. இதனை ஒவ்வொரு வணிகரும் தம் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்வதொன்றாகும்.

**பொருள் செயல் முறை:** வாணிகத்தில் பொருள் செயல் வகையையும் சுட்டியுரைக்கின்றார் இந்தக் கலைமாமணி. அவர் தரும் எச்சரிக்கை: எப்படியும் தொழில் செய்யலாம், எந்த வகையிலும் பொருள் சேர்க்கலாம் என்பது வணிகமுறை அல்ல. தீமையான செயல்களை நீக்கி, நல்ல வழிகளைக் கையாண்டு நேர்மையான முறைகளில் பொருள் சேர்ப்பதே 'சிறந்த வாணிகம்' ஆகும். அஃது ஒன்றுதான் அறமும் இன்பமும் கலந்த மகிழ்ச்சியை நல்கும்.

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள் [154]**

என்ற குறளின் மூலம் இக்கருத்தை வெளியிடுகின்றார் அச் செந்நாப்புலவர்.

**தொழிலில் வெற்றிபெற:** ஒரு வணிகன் தன் தொழிலில் மேம்பாடு அடைந்து வெற்றி பெறத் தேவையானவை என்னென்ன என்பது ஒரு வினா. 'பொருள்' என்பர் சிலர்;

'அநுபவம்' என்பர் சிலர்; 'நண்பர்கள்' என்பர் சிலர்; 'குடும்பம்' என்பர் சிலர்' 'அரசு உதவி' என்பர் சிலர்; 'நல்ல விளைவு காலம்' என்பர் சிலர்; 'நல்ல பஞ்ச காலம்' என்பர் சிலர். வள்ளுவர் பெருமான் இவை அனைத்தையும் ஒப்பவில்லை. அவனுக்கு இன்றியமையாது வேண்டப் பெறுவது 'மன உறுதி' ஒன்றே என்பது அப்பெருந்தகையின் கருத்து.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற [661]**

என்பது அவர்தம் மறைமொழி. 'ஒரு தொழிலினிடத்துத் திண்மை என்று சொல்லப் பெறுவது ஒருவனது உள்ளத்து உறுதியேயாகும்; மற்றையவை யாவும் இதற்கு அடுத்தபடியே யாகும்' என்பது இதன் பொருள். இதனையும் வணிகன் வழி காட்டும் ஒளி விளக்காகக் கொள்ளவேண்டும்.

**நாணயம் - சொன்னபடி இருப்பதும் நடப்பதும்:** வாணிகத்தில் முதலுக்கு அடுத்தபடியாக வேண்டப் பெறுவது இது. ஒரு வாணிக நடவடிக்கையில் 30 நாட்கள் கெடு என்றால், 28, 29ஆம் நாளில் கொடுப்பவன் நாணயமுள்ளவன். கெடு தாண்டினால் நாணயம் காற்றில் பறந்து விடும். ஒரு மூட்டையைக் காட்டி 'இந்த மூட்டை 30 கிலோ இருக்கும்' என்று சொன்னால், ஒரு துணி சுருளைக் (Roll) காட்டி, 'இந்தச் சுருளில் 50 மீட்டர் துணி இருக்கும்' என்று சொன்னால், சொன்னபடி இருக்கவேண்டும். இருந்தால்தான் நாணயம். குறைந்தால் நாணயம் பறந்து விடும். நாடார் பெருமக்களின் வாணிகத்தில் இந்த நாணயம் கெடாதிருப்பதைக் கண்டுள்ளேன்.

தம் தந்தையார் பெரியண்ண பிள்ளை இருக்கும்போதே விசுவநாதத்தின் சொந்தப் பொறுப்பிலேயே வாணிகம் நடைபெற்று வந்தது. தந்தையிடமிருந்து புகையிலைத் தொழில் நுட்பத்தையும் நாணயத்தையும் மிக உன்னிப்பாகக் கவனித்து அவரைப்போல் தம்மையும் தகுதியுடையவராக ஆக்கிக் கொண்டார் அண்ணல் விசுவநாதம்.

**தந்தையார் இறந்தபின்:** தந்தையார் திருநாடு அலங்கரித்த போது கி.ஆ.பெ.வி.யின் வயது முப்பது. வாணிக நிலை மன நிறைவு தருவதாக இல்லை. தொழிலில் ஏற்றமும் இறக்கமும் ஏற்படுவது இயல்பு. "ஆறுகிடும் மேடும் மடுவும் ஆம் செல்வம்"[5] என்பது ஔவை மூதாட்டியாரின் திருவாக்கு. குடியிருக்க அரைவீடும், சோற்றுக்கு ஒரு ஏக்கர் நிலமும்தான் இருந்தன. வேறு சொத்து, ரொக்கம் எதுவும் இல்லை. வாணிகத்தில் இவர்கட்கு வரவேண்டிய நிலுவை ஏழாயிரமும், இவர்கள் கொடுக்க வேண்டிய கடன் ஏழாயிரமும் இருந்தன. வரவேண்டிய நிலுவை ஏழாயிரத்தில் ரூபாய் நான்காயிரம் பிநாங்கு, சிங்கப்பூரிலும், கொடுக்க வேண்டிய கடனில் திருச்சிராப்பள்ளியில் ஒரு சேட்டிடம் மூன்றாயிரமும் ஆக இருந்தன. எப்படிக் கடன் கட்டுவது? எப்படிச் சம்பாதிப்பது? என்று கி.ஆ.பெ.விக்கு ஒன்றும் புரியவில்லை. கதி கலங்கிப் போனார்.

சிந்தித்தார் விசுவநாதம். ஒரு யோசனை தோன்றியது. தாம் கோலாலம்பூரில் உள்ள ஒரு நகரத்தார் கடைக்கு மூன்றாவது ஆளாக மூன்றாண்டுக்குச் சேர்ந்து ரூ 3000 சம்பளம் பேசி, வெளிநாட்டிற்கு வேலை செய்வது என்றும், மூன்றாவது ஆண்டு அந்த சேட்டுக்குப் பணம் கொடுத்து விடுவது என்றும் ஒரு முடிவுக்கு வந்தார்.

புறப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக சேட்டுக் கடைக்குச் சென்று தம் முடிவைத் தெரிவித்தார் விசுவநாதம். சேட்டு யோசனையின் பேரில் உள்ளூர் வேலை சரிப்பட்டு வராது என்றும், தாம் வெளியூருக்கு ஓடி விட்டதாகக் கருதக் கூடாது என்றும், தம் சொந்த வீடு ரூ. 5000 பெறும் என்றும், அதற்குரிய பத்திரத்தை வைத்துக் கொள்ளுமாறும் கூறினார். தாம் தம் வணிகர்களிடம் கடனைத் தண்டப் பார்ப்பதாகவும் அப்படி வசூலானால் அங்கிருந்தபடியே தொகையை அனுப்பி வைப்பதாகவும், திரும்பியவுடன் பத்திரத்தைத் திரும்பப்

5. நல்வழி – 32

பெற்றுக் கொள்வதாகவும் கூறி பத்திரத்தை அவரிடம் ஒப்படைத்தார்.

சிறிது நேரம் சேட்டு அங்கிருந்த மேலாள், நடு ஆள், கடை ஆள் ஆகிய நால்வரும் கலந்து பேசினர். இறுதியாக சிரித்துக் கொண்டு பத்திரத்தை வாங்க மறுத்து, "உங்களிடம் நம்பிக்கையுண்டு. பணம் வசூலாகி விடும். வெற்றியுடன் திரும்புங்கள். இந்தியாவில் தொழில் செய்யலாம். நாங்களும் உதவுவோம்" என்று கூறி அனுப்பினார்கள். நாணயத்தின் அற்புதத்தைக் கண்டார். இந்தப் பயணத்தில் கோலாலம்பூரில் இரண்டு கடைகளில் ரூ. 725/-, ரூ. 470/-ம் தந்து இரண்டு மூட்டை புகையிலைக்கு ஆர்டர் தந்தனர். அங்ஙனமே சிங்கப்பூரிலும் இரண்டு கடைகளில் ரூ. 690/- ரூ. 430/- வரலாயின. அதோடு சில ஆர்டர்களும் கிடைத்தன. இத்தொகைகள் உண்டியல் மூலம் சேட்டுக்கு அனுப்பு வைக்கப் பெற்றன. கோலாலம்பூர் ஒரு சீனன் கடையில் "உயர்ந்த சரக்கு - அதிக விலை" என்ற தத்துவத்தை விவரமாக அறிந்து கொண்டார்.

சிங்கப்பூரில் தங்கியிருந்தபோது ஒரு கடையில் மூன்றாம் தர புகையிலை விற்பதைக் கண்டார். அவரிடம் பேசி "உயர்ந்த சரக்கு - அதிக விலை" தத்துவத்தை விளக்கி அதிக ஆர்டர்கள் பலரிடமிருந்து பெற்றார். பின்னர் இந்தியா திரும்பித் தம் தொழிலைத் தொடங்கினார்.

இவருடைய 'உயர்ந்த சரக்கு - அதிகவிலை தத்துவம்' பெரிய கோம்பையில்[6] செயற்பட்ட விதம் அற்புதமானது. இவ்வூர் மணியக்காரர் ஒரு பெரிய நிலக்கிழார். இவரிடம் நல்ல புகையிலை இருப்பதாகக் கேள்வியுற்ற விசுவநாதம் சுமார் ஏழு கல் தொலைவு நடந்து சென்று அவரைச் சந்தித்தார். மலையடிவாரத்தில் ஆட்டுப் பண்ணையில் கிடைக்கும் ஆட்டுப் புளுக்கை போட்டு விளைய வைத்ததால்

6. இந்த ஊர் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் தம்பம்பட்டிக்கு மேற்கே கொல்லிமலை அடிவாரத்தில் உள்ளது.

புகையிலைகள் நீண்டும், செழித்தும் கருநிறத்தையும், மினு மினுப்பையும், விராகன் புள்ளிகளையும் நல்ல குணத்தையும் பெற்றிருந்தது. நூறு கட்டுகளின் விலை, சொல்வது ரூ 95/- என்றும் தருவது ரூ 90/- என்றும் முடிவாகக் கூறினார். புகையிலை அதிக ஈரமாக இருப்பதால் ஒரு வாரம் கழித்து வருவதாகவும் ஒவ்வொரு கட்டும் 40 பதம் எடையுள்ளதாகக் கூறி, பதினைந்தாம் நாள் 700 கட்டுகளையும் இலாபக் கட்டு 14ஐயும் ரூ 95/ வீதம் தந்து சரக்கைப் பெற்றுக் கொண்டார். அன்று முதல் கோம்பையார் விசுவநாதத்தின் நிரந்தர வாடிக்கையாளரானார். வேறு எவர் வந்தாலும் சரக்கைக் காட்டுவதில்லை.

பிநாங்கு வாணிகம் சற்று வேறுபட்டது. ''இந்தக் கப்பலில் அனுப்பிய இரண்டு மூட்டை புகையிலை வந்து சேர்ந்தது. இந்த ஆர்டருக்கு இரண்டு மூட்டை நல்ல சரக்காக அனுப்புங்கள்'' என்று எழுதியிருந்தார் பிநாங்கு வணிகர். விசுவநாதம் ''அதைவிட நல்ல சரக்கு இல்லை. ஆதலால் அனுப்பவில்லை என்று எழுத, அவர் அலறி அடித்துக் கொண்டு, ''என்னை மன்னியுங்கள். கணக்கப் பிள்ளை புதியவர்; எல்லோருக்கும் எழுதுவதுபோல் எழுதி விட்டார். நான் அவரைக் கண்டித்து விட்டேன். இனி நானே கடிதம் எழுதுவேன். கப்பல் தோறும் தவறாமல் புகையிலையை அனுப்பிக் கொண்டிருங்கள்'' என்று எழுதி விட்டார். இதில் விசவநாதத்தின் கொள்கை எவ்வளவு ஆழமாகச் செயற்பட்டது என்பதைக் காணலாம்.

இங்ஙனம் விசுவநாதம் காலத்தில் உள்ளூர் வாணிகமும், இலங்கை, பர்மா, ஐக்கிய மலாய் நாடு, சிங்கப்பூர், ஜாவா, பிஜித் தீவு முதலிய பல்வேறு நாடுகளில் வெளிநாட்டு வாணிகமும் தந்தையார் காலத்தில் நடைபெற்றதை விட மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

**விசுவநாதத்தின் புகழ்:** விசுவநாதத்தின் சிறந்த வாணிகமுறை செயற்பாட்டினால் அவர்தம் புகழ் ஓங்கியது.

(1) சென்னை மாநில தென்னிந்திய வர்த்தக சங்கத்தில் சாதாரண உறுப்பினர், நிர்வாக உறுப்பினர் ஆனார். இதில்

அயராது உழைத்ததனால் சிறந்த தொழில் வல்லுநரானார். முன்னணியிலிருந்த வணிகர்களின் மதிப்புக்கும் உரியவரானார்.

(2) திருச்சியில் பீடி, மூக்குப்பொடி, புகையிலை, சுருட்டு வணிகர்களின் குறைகளைப் போக்கித் 'திருச்சி புகையிலை வணிகர்கள் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை முதன் முதலாகத் தோற்றுவித்தார். அதனை உடனே பதிவு செய்து அதன் மூலம் போராடிப் பலருக்கு நன்மைகளைத் தேடித் தந்தார்.[7]

(3) புகையிலை கொள்முதல், விற்பனை, இருப்பு முதலியவை பற்றியும், கொடுக்கல் வாங்கல், பயிர்த் தொழில், குடிக்கூலி, குடும்ப வரவு செலவு பற்றியும் இவர் கையாலேயே பல்லாண்டுகளாகக் குறிப்பும் பேரேடும் எழுதப் பெற்று வந்தன.

மற்றவருக்கு ஆறு நாள் பிடிக்கும் விற்பனை வரி, வருமான வரிகளை அரை மணி நேரத்திலேயே தணிக்கை செய்து உரிய அதிகாரிகளும் மலைக்கும் வண்ணம் மிகத் தெளிவாக விளக்கிக் கூறி ஒப்புதல் பெற்று விடுவார்.[8]

(4) இராமநாதபுரம் பக்கிரிமைதீன் ராவுத்தர் அவர்கட்கு எழுதிய பதினொரு வணிகக் கடிதங்களும் இன்றைக்கும் வாணிகத்துறை மாணவர்கட்கு அரிய கருவூலமாகத் திகழ்கின்றன.[9]

இன்றியமையாதவை: வணிகர்கட்கு இன்றியமையாதன வாக மூன்றினைக் குறிப்பிடுவார் அண்ணல் விசுவநாதம். அவை:

(1) *சிக்கனம்:* வணிகர்கட்கு சிக்கனம் மிகவும் இன்றியமையாதது என்பதை வற்புறுத்துவார். சிக்கனம்

---

7. திரு வி.க. புலவராக இருந்து தொழிலாளர்கள் உள்ளத்தைக் கவர்ந்து அவர்களின் தலைவரானார். அண்ணல் விசுவநாதம் தொழில் துறையினின்றும் புலவர் உலகத்திற்கு வந்து பெரும்புகழ் பெற்றார். விநோதமான ஒற்றுமை

8. திருச்சி விசுவநாதம் - பக் 20

9. எது வியாபாரம்? எவர் வியாபாரி? பக். 22-24

(Frugality) வேறு. கருமித்தனம் (Miserlines) வேறு. சிலர் சிக்கனத்தைக் கருமித்தனம் என்று தவறாகக் கொள்வர். இரண்டிற்கும் உள்ள இடைவெளியைத் தெளிவாக சில எடுத்துக்காட்டுகளால் விளக்குவர். சுறுசுறுப்புக்கும் படபடப்புக்கும் உள்ள இடைவெளி, பொறுமைக்கும் அமைதிக்கும் உள்ள இடைவெளி, வீரத்திற்கும் போக்கிரித் தனத்திற்கும் உள்ள இடைவெளி, அன்பாய் இருப்பதற்கும் அடிமையாய் இருப்பதற்கும் உள்ள இடைவெளி சிக்கனத்திற்கும் கருமித்தனத்திற்கும் உண்டு.

சிக்கனக் கொள்கைக்கும் ஓர் இலக்கணம் கூட உண்டு. அது: 'தேவைக்கு மேல் செலவு செய்வது பகட்டு (டம்பம்); அது தேவையில்லாதது. தேவையின் அளவு செலவிடுவதுதான் சிக்கனம். இது விரும்பத் தக்கது. தேவைக்கும் செலவு செய்யாதது கருமித்தனம். இது வெறுக்கத்தக்கது, இவற்றை எடுத்துக்காட்டுகள் கொண்டும் விளக்குவார்.

ஐந்து மைல் தொலைவு செல்வதற்கு மகிழ்வுந்தை நாடக் கூடாது. முப்பது நாற்பது கையைக் கடிக்கும். அது ஊதாரித்தனம் - டம்பம்; அதிகச் செலவு. ரூ 1.25 செலவில் பேருந்தில் ஏறி இறங்கி அலுவலை முடித்துக் கொள்ளலாம். இதுதான் சிக்கனம். இதைத்தான் கொடுப்பானேன் என்று மூன்று காசுக்குப் பட்டாணிக் கடலை வாங்கி கொறித்துக் கொண்டு செல்கின்றானே அதுதான் கருமித்தனம். இஃது உடலுக்கும் சிரமம். இதனால் செலவிடும் காலத்தைப் பயனுள்ள வேறு அலுவலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு வணிகருக்கு முன்னிருக்கும் தொலைபேசி அவன் வருவாயைப் பாழாக்கும் கருவியாக அமையக் கூடாது. தேவையான பொழுது மட்டிலும் பயன்படுத்தித் தொலைபேசிச் செலவைக் குறைத்தாகவேண்டும். குறைக்கும் அளவுக்கு நல்லது. நாளைக்குத் தொலைபேசியில் அனுப்புகிற செய்தியை இன்றைக்கு அஞ்சலில் தெரிவித்தால் ஒரு ரூபாய் செலவோடு போய்விடும். பேசுகிற பேச்சு சுருக்கமாகவும்

தெளிவாகவும் இருந்தால் தொலைபேசிச் செலவைக் குறைக்க வழி வகுக்கும்.

(2) சேமிப்பு: வங்கியில் சேமிப்புக் கணக்கு திறந்து அதில் சிறுகச் சிறுகப் போட்டு வைக்கலாம். கணிசமாகத் தொகை பெருகியதும் அதனைப் பங்குச் சந்தையில் சரியான பங்குகளைத் தேர்ந்தெடுத்து வாங்கலாம். தக்க தருணத்தில் விலை ஏறும் போது விற்கலாம். விற்ற பணத்தில் ஒரு பகுதியைக் கொண்டு நிலம் வாங்கலாம்; அதன் விலை ஏறிக் கொண்டும் வருமானத்தைத் தந்து கொண்டும் இருக்கும். ஒருவருக்குச் சேமிப்பு எண்ணம் வந்துவிட்டால் அது தானாக வேலை செய்யத் தொடங்கும். புதிய புதிய எண்ணங்கள் தோன்றும்.[10]

நான் காரைக்குடியில் வாழ்ந்தபோது (1950-66) ஜோதிமணி என்ற ஒரு நாடார் சிறுவன் - 10, 12 வயதுள்ளவன். பழைய செய்தித்தாள் வாணிகம். விலை குறைவான காலம். மிதி வண்டியில் சதா சுற்றிக் கொண்டு செய்தித் தாள் வாங்குவான்; பழைய தாளுக்குக் காசும் தருவான்; பேரீச்சம்பழமும் தருவான். அவனது சுறுசுறுப்பான பண்பு என் கவனத்தை ஈர்த்தது. அடிக்கடிப் பேச்சு கொடுப்பேன். நாளொன்றுக்குப் பத்து ரூபாய் கிடைக்கும் என்றும் அதில் நான்கில் ஒரு பகுதி (ரூ 2.50) சேமிப்பதாகவும் கூறுவான். 1966 முதல் திருப்பதி சென்று விட்டேன். 1970இல் காரைக்குடி வர நேர்ந்தபோது ஒரு சிறு பெட்டிக்கடை முதலாளி. அத்தொழிலில் கிடைக்கும் வருமானத்திலும் சேமித்துக் கொண்டு பெட்டிக்கடை பெரிய கடையாயிற்று. மாணவர்கட்கு வேண்டிய பொருள்களனைத்தையும் விற்கத் தொடங்கினார். கடைக்கு முன் சதா மாணவர்கள் கூட்டம். உதவியாள் கூட இல்லாமல் தொழில் நடைபெறுகின்றது. கழுத்தில் தங்கச்சங்கிலி; அரைக் கை சட்டை அணி செய்யும் திருமேனி. 1965இல் ஒரு தடவையும் அதற்குப் பின்னர் பல

---

10. நாடார் சமூகத்தினருக்கு இது இயல்பான பண்பு. ஆண்களும் பெண்களும் இப்பண்புடையவர்கள்.

தடவைகளிலும் அவரைப் பார்த்து மகிழ்வேன். அவருடைய கடை கொப்புடையம்மன் சந்நிதியருகில் உள்ளது. நான் பார்க்கும் போதெல்லாம், "தம்பி ஜோதிமணி, நீ மிகவும் புத்திசாலி; உன்னுடைய புத்திசாலித்தனத்தால், உன் தொழில் வளர்கின்றது." என்பேன். அவர், "ஐயா, என்னால் ஒன்றும் இல்லை. எல்லாம் அந்த அம்பாள் அருள்" என்று அம்பாள் சந்நிதி பக்கம் கை நீட்டிக் கூறுவார். "பெருக்கத்து வேண்டும் பணிதல்" (963) என்ற வாய்மொழியின்பொருளை அவர்பால் கண்டேன். இவர்தம் உயர்வு சேமிப்பால் வந்தது.

*(3)* **பாதுகாப்பு:** ஒரு வணிகர் சிக்கனத்தையும் சேமிப்பையும் கடைப்பிடித்தால் மட்டும் போதாது. சேமித்த பணத்தைப் பாதுகாக்கவும் வழி காணல் வேண்டும். ஒருவருக்குப் பொருள் வந்து சேர்வது திடீரென்று வந்து விடாது. சிறுகச் சிறுகச் சேர்ந்தபின் பெருஞ் செல்வமாக வந்து காட்சியளிக்கும். ஆனால் போகும்போது சிறுகச் சிறுகப் போகாது; ஒரேயடியாகத் திடீரென்று தொலைந்து போய் விடும். இதனைத் திருவள்ளுவர்,

> கூத்தாட்டு அவைகுழாத்து அற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அதுவிளிந்து அற்று [332]

என்று கூறுவர். ஒரு நாடக அரங்கிற்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து காட்சி தொடங்கும்வரை பெருங் கூட்டமாகக் காட்சியளிக்கும். காட்சி முடிந்ததும் அக்கூட்டம் ஒரேயடியாகக் கலைந்து போகும். இது போன்றதுதான் ஒருவருக்குச் செல்வம் போவதும் வருவதுமாக அமையும். இங்ஙனம் ஒருவருக்குச் செல்வம் மெதுவாக வருவதை குறளின் முதலடியில் நீண்ட சீர்களால் குறிக்கின்றார் ஆசிரியர். செல்வம் திடீரென்று போவதை இரண்டாம் அடியில் சிறு சீர்களால் குறிக்கின்றார்.[11]

பல ஆண்டுகள் சேர்த்த செல்வத்தைப் பாதுகாக்கத் தெரியாமல் இழந்து விட்டவர் பலர். இவர்களில்

11. இந்த உரை ரசிகமணி டி.கே.சி. சொன்னது.

பெரும்பாலோர் உலகம் இன்னதென தெரியாதவர். உலகம் இன்னதென்று நன்கறிந்த தரகர்களின் வஞ்சகச் சொற்களில் - தந்திரச் சொற்களில் — ஏமாந்து விடுவது இயல்பேயாகும். அண்மையில் அதிக வட்டி தருவதாக (30- 40 சதவிகிதம்) விளம்பரம் செய்த நிறுவனங்களில் பணத்தைப் போட்டு ஏமாந்த கூட்டங்களை நாம் கண்டோம். இவர்கள் யாவரும் 'ஆக்கம் கருதி முதல் இழந்தவர்கள்' (குறள் - 463) சுமார் முப்பது நிறுவனங்கள் இவ்வாறு செய்து வழக்கில் மாட்டிக் கொண்டுள்ளன என்பதையும் நாம் அறிவோம்.

வணிகர்களாகவோ தொழிலதிபர்களாகவோ இருப்பவர்கள் தம்மிடமுள்ள தொகை முழுவதையும் தொழிலில் போட்டு விடாமல் அத்தொகையைப் பத்துப் பங்குகளாகப் பிரித்து ஐந்து பங்குகளைத் தொழிலில் முடக்கலாம். இரண்டு பங்குகளை வீடுகளிலும், ஒரு பங்கினை வங்கியிலும், ஒரு பங்கினை ஆலைப் பங்கிலும், அரைப் பங்கினைத் தங்கத்திலும், அரைப் பங்கினை ரொக்கமாகவும் வைத்திருக்க வேண்டும் என்று யோசனை கூறுவார் அண்ணல் விசுவநாதம்.

நம்மிடமுள்ள பங்குகள் அனைத்தையும் ஒரே துறையில் போட்டு விடாமல் வங்கிப் பங்கு, நூல் பங்கு, துணிப் பங்கு, தோட்டப் பங்கு, இயந்திரப் பங்கு ஆகிய பல துறைப் பங்குகளாகப் பார்த்துப் போடுவது சிறப்பாகும் என்று மேலும் விளக்குவர். இம்முறை ஏமாற்றுபவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதுமில்லாமல் அடிக்கடி சட்டத்தை மாற்றும் அரசாங்கத்திடமிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். மேலும், இதனால் ஒரு நன்மையும் உண்டு. ஒரு துறையில் இழப்பு ஏற்பட்டாலும் மற்றொரு துறை நம்மை உயர்த்திக் கொடுக்கும். எந்த முறையில் பார்த்தாலும் இதை விடச் சிறந்த பாதுகாப்புக் கலை இப்போது இல்லை. இங்ஙனம் அண்ணல் கூறும் அறிவுரை எல்லோராலும் பின்பற்றக் கூடியது.

அறச் செயல்கள்: பாதுகாக்கும் செல்வத்தை அறச் செயல்களில் ஈடுபடுத்தியும் ஆக வேண்டும். 'செல்வத்தின் பயனே ஈதல்' என்பது சான்றோர் மொழி. இன்பங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தது.ஈத்துவக்கும் இன்பம்.[12] அது தனக்கே உரிய செல்வத்தை இல்லாத ஏழை மக்களுக்கு வழங்கி, பெற்றுக் கொண்ட மக்களின் முகம் மலர்ச்சியடைவதைக் கண்டு மகிழ்ச்சியடையும் இன்பம்.

வணிகர்கள் வாணிகம் செய்யத் தொடங்கும் முதல் நாளிலேயே 'சாமி வரவு' என்றும், 'மகமை வரவு' என்றும் ரூ 101, அல்லது ரூ 51/ அல்லது ரூ 11/ வரவு வைத்துதான் தமிழகத்தில் தொழிலைத் தொடங்குவது வழக்கமாக இருந்து வருகின்றது. அந்த மகமைக் கணக்கில் பிறரிடம் வாங்குகின்ற மகமை மட்டும் அல்லாமல் தன்னுடைய இலாபத்திலும் ஒரு பங்கை மகமைக் கணக்கில் வரவு வைத்துப் பல அறச் செயல்களுக்கு வழங்கியாக வேண்டும். இம்முறை வணிகனை மட்டும் அல்ல, அவன் வாணிகத்தையும் உயர்த்தி வைக்கும்.[13]

இவண் கூறப்பெற்ற கருத்துகள் யாவும் அண்ணல் விசுவநாதத்தினுடையவை. எல்லோருக்கும் பயன்படுபவை. இவற்றைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு - குறிப்பாக வணிகப் பெருமக்களுக்கு வழங்கிய கி.ஆ.பெ.வி. அவர்களை வணிகர் திலகம்' என்று கூறுவது எல்லா வகையிலும் பொருந்தும், இல்லையா?

12. இதனை அடியேன் வள்ளல் அழகப்பரிடம் கண்டேன்; மகிழ்ந்தேன்.

13. நாடார் பெருமக்களின் - வணிகர்களின் - மகமைக் கணக்கில் வரும் வருமானத்தால் பல உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் நடைபெறுவனவாகச் சொல்லப் பெறுகின்றது.

4

# சித்தாந்த வித்தகர்

தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதுஒன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்
யான்இதற்கு இலனொர்கைம் மாறே[1]

என்ற திருவாசகப் பாடலுடன் இந்த இயல் தொடங்குகின்றது. சிறந்த புகழ் பெற்ற சைவக் குடும்பத்தில் பிறந்தவர். இல்லத்தின் பெயர் 'மணிவாசகத் தமிழகம்' என்பது. இதனால் மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர் என்பது தெளிவாகின்றது. இங்குக் குறிப்பிட்ட மணிவாசகரின் மணியான இப்பாடலில் மணிவாசகப் பெருமான் இறைவனுடன் ஒரு வாணிகம் செய்கின்றார். வாணிகம் சாதாரணமான பண்டமாற்றுதான். இதிலும் மணிவாசகருக்குக் கிடைத்த இலாபம் 'ஆனந்தம்' என்று பெருமானே குறிப்பிடுகின்றார். எம்பெருமானை நோக்கி ''யாது நீ பெற்றாய்?'' என்ற வினாவை எழுப்புகின்றார்? பாடலில் எம் பெருமானின் மறுமொழி இல்லாததால் அவர்

1. திருவா. கோயில் திருப்பதிகம் - 10

பெற்ற இலாபம் நமக்குத் தெரியவில்லை. எம்பெருமானிடம் மணிவாசகப் பெருமான் வாணிகம் நடத்துவதால் "வணிகர் திலகமாகிய" அண்ணல் விசுவநாதம் ட ற்றிய நூலில் வாணிகம் பற்றிய பாடல் இடம் பெறுகின்றது.

'இடைப்பிறவரலாக' இருந்த இது திருவாய் மொழியிலுள்ள ஒரு பாசுரத்தைச் சிந்திக்கவைக்கின்றது.

'வாரிக் கொண்டு உன்னை
விழுங்குவன் காணில்' என்று
ஆர்வுற்ற என்னை
யொழிய–என் னில்முன்னம்
பாரித்து தான்என்னை
முற்றப் பருகினான்
கார்ஒக்கும் காட்கரை
அப்பன் கடியனே.[2]

என்பது பாசுரம். இதில் இறைவனும் ஆழ்வாரும் (நம்மாழ்வார்) சடுகுடு விளையாடுபவர்கள்போல் ஒருவருக்கொருவர் எதிரெதிரே நின்று கொண்டு ஒருவரை யொருவர் விழுங்க வேண்டும் என்று பாரித்த வண்ணம் இருக்கின்றனர். 'உன்னைக் காணில் வாரிக் கொண்டு விழுங்குவேன்' என்று ஆழ்வார் ஆசைப்பட்டிருந்தார். ஆனால் தமக்கு முன்னே நெடுநாளாக எம்பெருமான் தன் விஷயத்தில் இங்ஙனம் பாரித்திருந்து தன் மனோரதம் தலைக்கட்டப் பெற்றான்; அஃதாவது எம்பெருமான் தன்னை முற்றப் பருகி விட்டான் என்கின்றார் ஆழ்வார்.

முன்னைய பாசுரங்களின் எம்பெருமான் தன்னை உண்டதை 'என் உயிர் உண்ட மாயன்', 'என்னுயிர் தான் உண்டான்', 'என்னை முற்றவும்தான் உண்டான்' என்ற தொடர்களால் ஆழ்வார் எம்பெருமான் தம்மை உண்ட

2. திருவாய் 9.6:10 திருக்காட் கரை என்னும் திவ்விய தேசம் பற்றிய பாசுரம். இத்தலம் கேரள மாநிலத்தில் 'எர்ணாகுளம்' என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 10 கல் தொலைவில் உள்ளது.

படியைச் சொன்னார். உண்டவனுக்குத் தண்ணீர் வேண்டுமல்லவா? அதை இப்பாசுரத்தில் சொல்லுகின்றார் — 'தான் என்னை முற்றப் பருகினான்' என்று. இவருடைய 'உண்ணும் சோறு பருகுநீர்' அவன்; அவனுடைய 'உண்ணும் சோறு பருகும் நீர் இவர்' என்பதை அறிந்து மகிழ்கின்றோம். மேலும் "ஈசுவர இலாபம் சேதநனுக்கா? 'சேதந இலாபம் ஈசுவரனுக்கா?" என்ற வினா அடியவர்களிடம் எழுவது உண்டு. சேதந இலாபம் ஈசுவரனுக்கே' என்பது முடிந்த முடிபாகக் கொள்வர். "இதனாலன்றோ எம்பெருமான் 108 திவ்விய தேசங்களில் 'மகாத்மா' ஒருவனை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றான்." என்பதாக வைணவத்தில் ஒரு கொள்கை உண்டு. இத்துடன் இது நிற்க.

*சைவப்பற்று:* அண்ணல் விசுவநாதத்தின் குடும்பம் சைவ சமயத்தைச் சார்ந்தது. ஆதலால் அண்ணல் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டது வியப்பொன்றும் இல்லை. மேலும் அவரது தமிழ் நூலாராய்ச்சி சைவப் பெரியோர்களின் கூட்டுறவை நாடிச் செல்ல வாய்ப்பினை நல்கியது. இதனால் அவருக்கு திருசிரபுரம் சைவ சித்தாந்த சபையின்[3] தொடர்பு இருந்து வந்தது. சில காலம் அங்கு அச்சபையின் துணைச் செயலாளராக இருந்து பணி புரிந்துள்ளார். அண்ணலின் சைவப் பற்றும் தமிழ்க் காதலும் அவர்தம் இளமைப் பருவத்தில் ஒன்றையொன்று தழுவி வளர்ந்தமையால் தமிழ்நாடு முழுவதும் அவரது புகழ் பரவத் தொடங்கியது. இதனால் தமிழ் நாடெங்கும் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்களும் சைவ சித்தாந்த சபைகளும் அண்ணலை வருந்தி அழைத்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தன. நான் காரைக்குடியில் பணியாற்றிய காலத்தில் (1950-60) செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள பல உயர் நிலைப் பள்ளி ஆண்டு விழாக்களில் அண்ணலும் அடியேனும் ஒரே மேடையில் சந்தித்ததுண்டு.

3. திருச்சி மலைக்கோட்டைத் தெருவில் உள்ளது. நான் திருச்சியில் புனித சூசையப்பர் கல்லூரியில் படித்தபொழுது (1934-39) அங்கு நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன். அப்போது அண்ணலைச் சில சமயம் பார்த்ததுண்டு.

நெல்லை மாவட்டம் ஒட்டப்பிடாரம் சித்தி விநாயகர் சபை ஆண்டு விழாவில் நிகழ்த்திய முதல் பேச்சுபற்றிப் பிறிதோர் இடத்தில் குறிப்பிடப் பெற்றது. அந்நாள் தொட்டு அவரது நாவன்மையைத் தமிழ்நாடு முழுவதும் அறிய வாய்ப்பு உண்டாயிற்று. தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை[4] முதலிய பல சைவ சபைகளிலும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்ற பல தமிழ்ச் சங்கங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் அண்ணல் விசுவநாதம். இவர்தம் பேச்சை சைவப் பெரு மக்களும் தமிழறிஞர்களும் மிகவும் பாராட்டி மகிழ்ந்தனர். சைவக் கூட்டங்களின் தொடர்பு மிக மிக சைவக் கூட்டங்களில் பேசும் வாய்ப்புகளும் பெருகின. இவர்தம் சைவ சமயப் பேருரைகள் சைவப் பெருமக்களால் மிகவும் பாராட்டப் பெற்றன. இவ்வாறு இவர் சைவப் பேருரைகளால் புகழோங்கி யிருந்த காலத்தில், பஞ்சாட்சரபுரம் மறைத்திருவாளர் வாலயானந்த சுவாமிகளிடம் சிவதீட்சை பெற்று சைவப் பெரியார்களுள் ஒருவராகத் திகழ்ந்தார் அண்ணல்.

இதன் பிறகு அண்ணல் பல்லாவரம் மறைமலை அடிகளாரைச் சைவத்திற்கும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்களைத் தமிழுக்கும் பேராசிரியர்களாகக் கொண்டு பெரு மதிப்புப் பெற்று வந்தார். இவருடைய சைவச் சொற்பொழிவுகளைப் பற்றி விவரமான குறிப்புகள் எவையும் இவர்தம் நூல்களில் காணப் பெறவில்லை. வேறு சிலரும் அத்தகைய குறிப்புகளைக் காட்டவில்லை.

**திருவாசகம்:** ஆதலால் அவர்தம் சொற்பொழிவுகளில் எத்தகைய பாடல்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று கற்பனையில் கண்டு சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன். இல்லத்திற்கே '**மணிவாசகர் தமிழ் அகம்**' என்று திருநாமம் சூட்டியிருப்பதனால் அவருக்குத் திருவாசகத்தில் அதிக ஈடுபாடு மிக்கிருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். எங்காவது ஒரு பேச்சிலாவது,

4. இந்த சபை ஆண்டுவிழா மலருக்கு நான் கட்டுரை வழங்கியுள்ளேன்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே–எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

என்ற பாடலைக் குறிப்பிட்டு திருவாசகத்தின் சிறப்பினை விளக்கி இருக்க வேண்டும்.

திருவாசகத்தைக் குறள், மறைமுடிவு (உபநிடதம்), மூவர் தமிழ் (தேவாரம்), முனிமொழி (திருமூலர் திருமந்திரம்) இவற்றுடன் ஒப்பிட்டு இவை யாவும் ஒருவாசகமே என்று ஔவைப் பாட்டியின் வாக்காக வரும்,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்[5]

என்ற பாடலை எந்தச் சொற்பொழிவிலும் மேற்கோளாக வாவது காட்டியிருக்க வேண்டும்.

திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். திருவாசகம் பற்றிய பேச்சுகளில்,

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்து கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே[6]

5. நல்வழி – 40
6. திருவாசகம் – திருச்சதகம் – 1

சிந்தனைநின் தனதாக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே வினையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமினித் தனிய னேற்கே[7]

என்ற பாடல்கள் இவர்தம் திருவாயினின்று கிளம்பிக் கேட்போர் உள்ளத்தை உருக்கி இருக்கவேண்டும்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று தமிழகத்தில் நெடுங்காலம் வழங்கி வரும் பழமொழியை அண்ணல் நினைவு கூர்ந்து சிவனடியார் கூட்டத்தில் எடுத்துக் காட்டியிருத்தல் வேண்டும். இது தவிர அருளாளர்கள் அநுபவித்து தம் அநுபவத்தைப் பாடல்களாக வெளிப்படுத்தியவற்றையும் மக்கள்முன் வைத்து அவர்களை அநுபவிக்கச் செய்திருத்தல் வேண்டும்.

திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுவர் அன்றி
மன்பதை யுலகில் மற்றையர் இலரே.[8]

என்ற துறைமங்கலம் சிவப்பிரகாசர் அடிகளின் பாடலையும்,

வான்கலந்த மாணிக்க
வாசக!நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே

7. மேலது – 26
8. நால்வர் நான்மணிமாலை – 4

தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனிதீஞ் சுவைகலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவப்பால் இனிப்பதுவே.[9]

என்ற வள்ளல் இராமலிங்க அடிகளாரின் திருப்பாடலையும் அவையினருக்கு எடுத்துக்காட்டி அவர்களை பக்திக் கடலில் மிதக்கச் செய்திருத்தல்வேண்டும். 'சொல்லின் செல்வர்' இதனைச் செய்யாமலா இருந்திருப்பார்?

சில சமயங்களில் இவர்தம் பேச்சு உச்ச நிலையில் களை தட்டியிருக்கும் போது,

தனியனேன் பெரும்பிறவி பெளவத்தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு என்றுஎன்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.[10]

என்ற பாடலை அவையின் முன் வைத்து அவர்களை பக்திக் கொடுமுடிக்கு இட்டுச் சென்றிருத்தல் கூடும். நேர்மைக்கும் நீதிக்கும் ஒழுக்கத்திற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நம் அண்ணல் பக்திக் காதலை நுவலும் — அதே சமயத்தில் தத்துவக் கருத்தையும் உள்ளுறையாகக் கொண்டும் —திகழ்கின்ற திருக் கோவையாரையும் மறந்திருக்க முடியாது. அதன் பெருமை யைப் புகலும்,

ஆரணம் காண்என்பர் அந்தணர்;
யோகியர் ஆகமத்தின்

9. திருவருட் பா - ஆளுடைய அடிகள் அருள்மாலை - 7
10. திருவா - திருச்சதகம் - 21

காரணம் காண்என்பர்; காமுகர்
காமநன்னூல் என்பர்;
ஓரணம் கான்என்பர்; எண்ணர்
எழுத்தென்பர்; இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே.[11]

என்ற பாடலைப் பல கூட்டங்களில் எடுத்துக்காட்டிக் கேட்போரை மகிழ்வித்திருக்கலாம். 'காமுகன் காம நன்னூல் என்பர்' என்ற அடிகளை எடுத்துக்காட்டி அது பக்திக் காதலைக் குறிப்பதாகவும், மேலும் அது சீவான்மா - பரமான்மா தொடர்பைத் தெரிவிப்பதாகவும் விளக்கம் தந்து கேட்போரின் ஐயத்தை அகற்றியிருப்பர். திருக்கோவையாரில் இன்னொரு நயமான பாடல்:

சிறைவான் புனல்தில்லை சிற்றம்பலத்தும்
என்சிந்தை உள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ?
இறைவா! தடவரைத்தோட்கு என்கொலாம்
புகுந்து எய்தியதே.[12]

என்பது ஒரு பாடல். 'பாங்கனை வினாதல்' என்ற துறையில் அமைந்தது. தமிழில் அகத்துறையில் அமைந்த பாடல்களின் சிறப்பையும் (இயற்றமிழ்), ஏழிசையில் அமைந்த பாடல்களின் (இசைத்தமிழ்) சிறப்பையும் ஒருங்கே சிறப்பிப்பதாக அமைந்தது இப்பாடல்.

களவில் சந்தித்த தலைவன் அவளையே நினைந்து நைகின்றான். பார்க்கும் வாய்ப்பில்லாமல், உண்ணும்

11. திருக்கோவை - நூற்சிறப்பு
12. மேலது - 20

உணவின் அளவு குறைகின்றது. உடலும் இளைத்து வாடிய நிலையில் காணப்படுகின்றது. இந்நிலை அவன் நண்பன் தலைவனைச் சந்திக்கின்றான். அவனை நோக்கி, "ஆருயிர் நண்பா, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இறைவனே தலைவனாக இருந்து சங்கப் புலவர்களுடன் ஒண் தீந்தமிழை ஆய்ந்ததாகச் சொல்லுவார்கள். 'இறையனார் களவியல்' அவர் செய்த அகத்துறை இலக்கணம் அல்லவா? அகத்துறைப்பாடல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தும், ஏழிசையில் அமைந்த பாடல்களில் ஆழங்கால் பட்டு அநுபவித்தும் உணவை மறந்து விட்டாயோ? இங்ஙனம் உன் தோள்கள் மெலிவுற்று வாடியிருப்பதற்குக் காரணம் என்னவோ?" என்று வினவுகின்றான்.

தமிழின் பெருமையை உணர்த்தும் இப்பாடலுடன் இன்னொரு பாடலையும் அண்ணல் அவையின் முன் வைத்து பக்தியின் கொடுமுடிக்கு சைவ அடியார்களை இட்டுச் சென்றிருக்கலாம்.

ஆனந்த வெள்ளத்து அழுந்தும்ஓர்
 ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடைத் திளைத்தால்
 ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழலோன்
 அருள்பெற்று அவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது
 முற்றாதுஇவ் அணிநலமே.[13]

என்பது. தலைவன் தலைவியரின் கலவி இன்பத்தைக் கூறுவதாக இருந்தாலும், சிவனடியார்கள் தில்லையம்பலவன் திருவடிகளின் அருளைப் பெற்றவரின் பேரின்பம்போல் என்று உவமை கூறி விளக்குவது அற்புதம். உவமிக்கப்படும் பொருளை விட உவமப் பொருள் சிறந்திருக்க வேண்டும்

13. திருக்கோவை - 307

என்பது இலக்கணவிதி. ஈண்டு பேரின்பம் சிற்றின்பத்திற்கு உவமையாக அமைந்துள்ளது. சிவானந்த இன்பத்தின் பெருமையை உணர்த்துவதால் இப்பாடல் அண்ணலாரின் சைவப் பேருரையில் இடம் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருத இடம் தருகின்றது.

**மூவர்தமிழ்:** சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்பவரின் தேவாரத் தமிழ்ப்பாடல்கள் அண்ணலாரின் பொழிவில் இன்றியமையாது இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்பது ஒரு தலை. சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடக் கருதுகின்றேன்.

**சம்பந்தர்:** இந்தக் காழிப்பிள்ளையார் தேவாரத் தொகுப்பில் முதல் இடம் பெறுகின்றார். சம்பந்தப் பெருமான் தம் செயலால் 'தான்' என்னும் உயிர் முனைப்பு அடங்கப் பெற்றவர். உயிர்க்குயிராய்த் திகழும் சிவபெருமானின் வழி வாய்ந்த செம்புலச் செல்வர். ஆகவே, அப்பெருமான் அருளிய திருப்பாசுரங்கள் சிவபெருமான் அருளிச் செய்த மறைமொழி களாகவே கொண்டு போற்றத்தக்கவை என்று போற்றுவர் பெரியோர். காழிப் பிள்ளையாரே,

மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த்தானம்
நிலையினான் 'எனதுரை தனதுரை' யாக
நீறணிந் தேறுகந் தேறியநிமலன்[14]

என வரும் இலம்பயம் கோட்டூர்த் திருப்பதிகத்தால் தாம் பாடிய திருப்பாடல்கள் யாவும் இறைவன் தன்னவையாகக் கொண்ட குறிப்பு அறியப் பெறுகின்றது. இதனை நம் அண்ணல் தெளிவாக அறிந்திருத்தல் கூடும். இவர்தம் படைப்புகளால் அறியக் கூடவில்லை. எனினும், கற்பனையால் ஒன்றிரண்டு காட்டுவேன்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந் திட்டுஐம்மேல் உந்தி

14. சம்பந்தர் தேவாரம் - 1.76:1

அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே.[15]

என்ற பாடல் சிவனடியார்கள், புலவர்கள் இவர்கள் நாவில் நடனம் ஆடிக் கொண்டிருக்கும் பாடல்.

பிள்ளையாரின் திருநீற்றுப் பதிகமும் ஐந்தெழுத்துப் பதிகமும் அடியார்களின் கனவிலும் நினைக்கத் தக்கவையாகத் திகழ்கின்றன.

மந்திர மாவது நீறு;
வானவர் மேலது நீறு;
சுந்தர மாவது நீறு;
துதிக்கப் படுவது நீறு;
தந்திர மாவது நீறு;
சமயத்தி லுள்ளது நீறு
செந்துயர் வாயுமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே[16]

என்ற முதற்பாடலையுடைய பாடல்கள் அனைத்தும்;

துஞ்சலும் துஞ்சல்
இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து
நினைமின் நாதொறும்;
வஞ்சக மற்றடி
வாழ்த்தவந்த கூற்று

15. சம்.தே. 1.130;
16. மேலது 2.66 :1

டு.5.

அஞ்ச உதைத்தன
அஞ்செ ழுத்துமே[17]

என்ற முதற்பாடலையுடைய பாடல்கள் அனைத்தும் அண்ணலார் சமயச் சொற்பொழிவுகளில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**நாவுக்கரசர்:** நாவுக்கரசரின் வாழ்வு நலவாழ்வு, அற்புதத் திருவாழ்வு. தமிழோடு இசைபாடிச் சிவானந்தத்தை அநுபவித்த பெருவாழ்வு. தொண்டு நெறியே இவர் கடைப்பிடித்த நெறி. இவர் வாழ்விலும் பாடல்களிலும் ஈடுபட்ட அண்ணல் விசுவநாதத்திற்கு இவர்தம் வாழ்வும் நெறியும் வழிகாட்டி இருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. அடியார்க்குத் தொண்டு பட்டு, மனிதரில் தலையாய அப் பெருமக்களை வாழ்த்தி வணங்கப் போற்றுதலே மகிழ்வளிக்கும் என்பதனைத் தெளிந்தவரல்லவா வாகீசர்? இதனை,

**வானந் துளங்கிலென்? மண்கம்ப**
**மாகில்என்? மால்வரையும்**
**தானந் துளங்கித் தலைதடு**
**மாறில்என்? தண்கடலுள்**
**மீனம் படில்என்? விரிசுடர்**
**வீழில்என்? வேலைநஞ்சு**
**ஊணம் ஒன்றில்லா ஒருவனுக்கு**
**ஆட்பட்ட உத்தமர்க்கே**[18]

என்ற திருவிருத்தப் பாடலால் காட்டுவர்.

நாவுக்கரசர் பெருமானும் ஐந்தெழுத்தின் பெருமையை வெளிப்படையாகவே கூறியுள்ளார். **சொற்றுணை வேதியன்** *(4.11)* என்ற பதிகத்தின் 'நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே *(2)*, 'நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே' *(3)*, 'நடுக்கத்தைக்

17. மேலது 3.22:1
18. அப்பர் தேவாரம் 4.112 : 8

கெடுப்பது நமச்சிவாயவே' (4), நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே' (5) என்றெல்லாம் பன்னியுரைக்கின்றார், முத்தாய்ப்பாக,

நாப்பிணை தழுவிய
நமச்சி வாயப்பத்[து]
ஏத்தவல் லார்தமக்[கு]
இடுக்கண் இல்லையே [10]

என்று கூறிமுடிப்பர். கற்றுணைப் பூட்டி இவரைக் கடலிற் பாய்ச்சியபோது நற்றுணையாக நின்றது இந்த ஐந்தெழுத்து மந்திரந்தானே! திருக்குறுந் தொகைப்பதிகம் ஒன்றில் (5. 90)

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே [2]

என்று ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பை மிகவும் தெளிவாக்குவர். 'நல்லக விளக்கு நமச்சிவாய மந்திரம்' என்பது இவர் காட்டும் மதி விளக்கு. சிவகதி காட்டும் விளக்கும் இதுதான். இதனால்தான்,

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையும் கருத்துடையேன்;
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன்; உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நமவென்று நீறுஅணிந்தேன்;
தருவாய் சிவகதிநீ பாதிரிப்
புலியூர் அரனே.[19]

என்ற திருவிருத்தத்தால் தமக்குச் சிவகதி வரலாற்றை அருளுமாறு திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானை

19. அப்.தே. 5.90 : 2

வேண்டுகின்றார். இவற்றையெல்லாம் அண்ணல் விசுவநாதம் இளமையில் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

திருநீறும் அக்க மணியும் பூண்டு சிவபெருமானை இடையறாது போற்றும் மெய்யடியார்களைச் சிவபெருமானாகவே மதித்து, அன்னவர் பிறந்த குலம் முதலியவற்றைக் கருதாமல், வழிபடும் அன்புடையார் திருஉள்ளத்திலே காண்டற்கரிய பெருமானைக் கண்டு மகிழலாம் என்பது அப்பர் பெருமானின் திருவருளநுபவமாகும்.

சிவகதியாகிய நற்பயிர் விளைவதற்கு மக்கள் கடைப் பிடிக்க வேண்டும் முறைகளை,

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையுமன்றே.[20]

என்ற திருநேரிசையில் உருக்கமாக விரித்துக் கூறிய முறையையும் அண்ணல் விசுவநாதம் நன்கு அறிவர். நாவுக்கரசர் தொண்டு புரிவதில் சிறந்த உழவராகத் திகழ்ந்தவர் என்பதையும் உழவாரப் படையைத் தாங்கிக் கொண்டிருப்பவர் என்பதையும் யாவரும் அறிவர்.

திருநீறும் அக்கமணியும் பூண்டு சிவபெருமானை இடையறாது போற்றும் மெய்யடியார்களைச் சிவபெருமானாகவே மதித்து, அன்னவர் பிறந்த ஞலம் முதலியவற்றைக் கருதாமல், வழிபடும் அன்புடையார் திருவுள்ளத்திலே காண்டற்கறிய பெருமானைக் கண்டு மகிழலாம் என்பது அப்பர் பெருமானின் திருவருளமுதமாகும்.

20. மேலது 4.76 : 2

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீரும் சந்தனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறன்நினைந்தங்கு உவந்துநோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே[21]

என்பது கன்றாப்பூர்த் திருத்தாண்டகம். இதில் அந்த உண்மையைத் தெளிவாகக் காணலாம். கன்றாப்பூர் நடுதறி - கன்றாப்பூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். இக்கருத்தினை,

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே[22]

என்ற பொதுத் தாண்டவத்தால் நிலை நாட்டுவர். இதனையும் திருச்சி கலைமாமணி நன்கு அறியும்.

இன்னும்,

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்;
ஒப்புடையன் அல்லன்; ஒருருவன் அல்லன்;
ஓர்ஊரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி;,

21. மேலது 6.61 : 3. இவர் சைவப் பணி புரிந்த போது 'நெற்றியில் நீறும், கழுத்தில் மணிமாலையும்' அணிந்த நிலையைத் திரு வி.க. கண்டார் (திருச்சி விசுவநாதம் - பக். 128)
22. அப்.தே. 6.95 : 10

அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.[23]

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.[24]

*என்ற பாடல்களும்,*

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள் தன்னாமம் கேட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.[25]

*என்ற அகத்துறைப் பாடலும் புலவர்கள் நாவில் அடிக்கடி வழிவதை நாம் அறிவோம். இறுதியில் குறிப்பிட்ட பாடல் கல்கியின் புதினத்திலும் இடம் பெற்று விட்டது. இவற்றை யெல்லாம் அண்ணல் விசுவநாதம் அடிக்கடித் தம் சொற்பொழிவுகளில் கையாண்டிருத்தல் வேண்டும்.*

23. அப்தே. 6.97 : 10
24. மேலது 6.99 : 1
25. மேலது 6.25 : 7

சுந்தரமூர்த்தி: இவரது வாழ்வு தனிச்சிறப்புடையது. இறைவனே தோழராக நின்று இவர்தம் வாழ்க்கையில் நேராகப் பங்கு கொண்ட நிகழ்ச்சிகள் மிக்க சிறப்புடையவை. சம்பந்தர், அப்பர் இவர்கள் வாழ்ந்து நூறாண்டுக்குப் பின் தோன்றியவர். இல்லறத்திலிருந்து கொண்டே தவநெறியைக் கடைப்பிடித்தவர். பரு உடலுடன் பரலோகம் சென்றவர். இவரது ஒரு மணத்தைக் கெடுத்த இறைவன், பின்னர் இவருக்கு இருமணங்களை முன்னின்று நடத்தி வைத்தார்.

அருளாசிரியர்கள்: இவருக்கு முன்னிருந்த சம்பந்தர், அப்பர் ஆகிய இருவரையும் போற்றி மகிழ்ந்தவர்.

நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்லியன் மனத்தைக் கசிவித்துக் கழலடி
காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவலம் தனில்வந்து கண்டேனே.[26]

என்ற திருப்பாடலில் கண்டு மகிழலாம்.

ஐந்தெழுத்தின் பெருமை: ஏனைய இருவரைப் போலவே இவரும் 'நமசிவாய'ப் பதிகம் பாடியவர். 'தாம் இறைவனை ஒருகால் மறக்கினும் தமது நா என்றும் சொல்லிக் கொண்டே இருக்கும்' என்பதை ஒரு பதிகத்தில் பாசுரந்தோறும் பாடி மகிழ்ந்தவர்.

மற்று பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்;
பெற்ற லும்பெறந் தேணி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்;

26. சுந்த. தே. 7.67 : 5

கற்றவர்தொழு தேத்தும் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.[27]

என்பது பாண்டிக்கொடுமுடி பற்றிய முதற்பாடல். பாடல் தோறும் 'சொல்லு நா நமச்சிவாயவே' என்ற தொடர் மீண்டும் மீண்டும் வருவதைக் காணலாம். இப்பதிகத்தில் நம் அண்ணல் ஆழங்கால் பட்டிருத்தல் வேண்டும்.

**அடியவர்க்கடியன்:** இறைவன் அடியெடுத்துக் கொடுக்க *'திருத்தொண்டத் தொகை' (7.89)* பாடியருளினார் சுந்தரமூர்த்தி. திருவாரூர் திருக்கோயில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் அடியார்கள் எல்லார்க்கும் தனித்தனியே 'அடியேன்' எனப் பணிமொழி பகர்ந்து பாடுகின்றார். (11 பாடல்கள்)

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன்;
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்;
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்;
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்;
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்;
விரிபொழில்சூழ் குன்றையார் விறல்மிண்டர்க் கடியேன்;
அல்லிமென் முல்லையடந்தார் அடர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே[28]

என்பது முதற்பாடல். இப்பதிகம் தோன்றிய வரலாறு முதல் அனைத்தையும் அறிவார் விசுவநாதம். இதிலிருந்து தோன்றியது நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி (வழிநூல்) தோன்றியதென்றும், இதிலிருந்து சேக்கிழாரின் பெரியபுராணம் தோன்றியதென்றும் (சார்புநூல்) நம் அண்ணல் நன்கு அறிவர்.

27. சுந்.தே. 7.48 : 1 28.7.39:1

புலவர்க்கு அறவுரை: திருப்புகலூர்[29] பதிகம் புலவர்க்கு அறவுரையாக அமைந்தது. இது எழுந்த வரலாற்றை நம் அண்ணல் நன்கு அறிவார்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர் காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லை யே.[39]

என்பது முதற்பாடல். சைவப் பெருமக்களிடம் புகழ் பெற்ற பதிகம் இது.

சுந்தரரின் சிற்றம்பலவன் வழிபாடு: நம்பியாரூர் சிற்றம்பலவனைத் திருக்களிற்றுப் படியின் மருங்கே நின்று வீழ்ந்து வணங்கியதைச் சேக்கிழார் பெருமான் அற்புதமான பாடல் ஒன்றால் குறிப்பிடுவார்.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையன் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.[31]

29. திருப்புகலூர் - அப்பர் பெருமான் முத்தி பெற்ற தலம். நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து நான்கு கல் தொலைவிலுள்ளது (நான் திருப்பதியிருந்த போது வழிபட்ட தலம்)
30. அப்.தே. 7.34: 1
31. பெ.பு. தடுத்தாட் கொண்ட - 106

என்று காட்டுவர். இதன் விளக்கம் அருமையாகக் காட்டப் பெற்றுள்ளது.[31]

***சித்தாந்தக் கருத்துகள்:*** அண்ணல் விசுவநாதம் தம் சைவப் பேருரைகளில் சித்தாந்தக் கருத்துகளாகிய பதிபசு பாசம் பற்றியும், இறைவனின் ஐந்து தொழில்கள், தீட்சை வகைகள், முத்தியடைய மேற்கொள்ள வேண்டிய சாதனங்கள், முத்தி வகைகள் முதலிய பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இப்படியெல்லாம் அண்ணல் உரைகள் ஆற்றியிருத்தல் வேண்டும் என்று கற்பனையில் காண்கின்றேன். ஆதலால் அப்பெருந்தகையைச் '***சித்தாந்த வித்தகர்***' என்று சொல்லி மகிழலாமல்லவா?

31. தம்பிரான் தோழர் - பக் 44-46

# 5

# சொல்லின் செல்வர்

"சொல்லின் செல்வன்". இப்பெயர் இராமனால் அநுமனுக்குச் சூட்டப் பெற்ற சிறப்புப் பெயர். சபரி காட்டிய நெறியைக் கடைப்பிடித்து இராம லக்குமணர் சுக்கிரிவன் வாழும் வரையை அடைகின்றனர். இவர்களைக் கண்ட சுக்கிரீவன் 'இவர்கள் பகைவர்' எனக் கருதி வெருவி ஓடி ஒருமலை முழஞ்சினில் புகுந்து ஒளிந்து கொள்ளுகின்றான். அநுமன் அவர்களைக்கண்டு, நீள கெடிது நோக்கி பலவாறு சிந்தித்து "அருமருந்து அனைய ஒரு பொருள் தோற்றவர் அதனைத் தேடி வருபவர்போல் காணப்படுகின்றனர்" என்று தெரிந்து தெளிகின்றான்.

அநுமன் ஒருமாணி வங்கொண்டு அவர்களைக் குறுகி "கவ்வை இன்று ஆக நும் வரவு" என்று அவர்களை வரவேற்க, கருணையோனும் "வெவ்வழி நீங்கியோய்! நீ யார்?" வினவு கின்றான். அதற்கு மாருதி சுருக்கமாகக் கூறுவது: "போற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அநுமன். இம்மலை இருந்து வாழும் எரிகதிர் பரிசிச் செம்மலுக்கு ஏவல் செய்வேன் "நும் வரவு நோக்கி விம்மலுற்று அனையான் ஏவ வினவியவந்தேன்"[1] என்பது. இவனுடைய உரையில் கவர்ச்சி யுற்று, இராகவன் தன் இளவலிடம் கூறுவான்;

1. கிட்கிந்: அநுமப் படலம் – 15-16

''இல்லாத உலகத்து எங்கும்
 ஈங்கு இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும், வேதக்
 கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே?
 யார்கொல் இச் சொல்லின் செல்வன்.[2]

என்று. அநுமனது கவர்ச்சிகரமான தோற்றம், அவன் பேச்சில் கண்ட நளினம், பேசிய இன்முகம் இவற்றால் ஈர்க்கப்பெற்ற காகுத்தன் அநுமனுக்குச்

''சொல்லின் செல்வன்''

என்ற பெயர் சூட்டுகின்றான்.

அநுமனது தோற்றம் சக்கரவர்த்தித் திருமகனை ஈர்த்தது போல், அண்ணல் விசுவநாதத்தின் தோற்றம் அவரைக் கண்டார் அனைவரையும் ஈர்க்கும் என்று சொல்லலாம். 1934இல் திருச்சியில் யான் அவரைத் தெப்பகுளம் பிஷப் ஹீபர் கல்லூரியில் நாவலர் வேங்கடசாமி நாட்டார் அய்யாவுடன் கண்டபோது[3] என் மனத்தில் பதிந்த தோற்றத்தை அப்படியே தருகின்றேன். ''நெடியோன்போல் கம்பீரமான தோற்றம்; சுமார் ஆறடி உயரம்; பொன்னிறத் திருமேனி. ஒழுங்காக வாரி விடப்பெற்ற கிராப்புத் தலைமுடி. அவரது நெடிய உருவத்திற்கு அழகு தருவது போல பொன்னிறமாக மின்னும் மூக்குக் கண்ணாடி. மெல்லிய மஸ்லீன் ஆடையால் கீழ்ப்பாச்சு கட்டிய நிலை; நீண்ட சொக்காய்; அதன் மேலே நீண்ட சால்வை; இவர்தாம் நான் கண்ட அண்ணல் விசுவநாதம்''. அக்காலத்தில், ஃபாதர் லாரன்ஸ் சுந்தரம் செகப்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்தைப் பாடமாக நடத்திக் கொண்டிருந்தார். அந்நாடகத்தில் மானசீகமாக அந்தோணியை

2. மேலது - செய். 20

3. அப்போது நான் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் பயின்ற காலம். எனக்கு அகவை 18; அண்ணலுக்கு வயது 35.

அண்ணல் விசுவநாதம் நினைவுறுத்திய காட்சி இன்றளவும் மனத்தில் பசுமையாக உள்ளது.

**சொல்லும் பொருளும்:** ஒருவரது பேச்சில் அல்லது சொற்பொழிவில் சொல்லும் அதன் பொருளும் பொருத்தமாக அமைந்து, ஆற்றொழுக்காகக் கருத்துகளை விளங்கும் பாங்கில் நடைபெற வேண்டும். அப்படிச் சென்றால்தான் பேசுவோர், உரை ஆற்றுவோர் வெற்றிநடை போடுகின்றார் எனக் கருதலாம். மாறாக பொருளின்றிச் சொல்லடுக்குகள் மட்டிலும் இருப்பின் அப்பேச்சு வெறும் வானவேடிக்கையாக முடிந்து விடும்; வெற்றுரையாகக் காட்சியளிக்கும்.

**குபீல் சுந்தரேசன்:** நான் முசிறியில் உயர்நிலைப் பள்ளியில் (1931-34) பயின்றபொழுது ஆங்கிலத்தைக் கையாளும அருமையைக் காட்டுவதற்கு திருச்சியில் அக்காலத்தில் ஆங்கிலப் பேச்சில் புகழ்பெற்ற குபீல் சுந்தரேசனை வருவித்து உரையாற்றும் ஏற்பாடு நடைபெற்றது. அவர் வந்து உரையாற்றினார். வெறும் இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் என்றவாறு பேச்சு அமைந்திருந்தது. உயர்நிலைப் பள்ளியில் எங்களுக்கிருந்த எங்கள் ஆங்கில அறிவைக்கொண்டு பெரும்பாலான சொற்களுக்குப் பொருள் தெரியாதநிலை. ஈ நுழைவதும் தெரியாது வாயைப் பிளந்து கொண்டு வாளா கேட்டுக் கொண்டு மகிழ்ந்தோம். சிவகாசி ஊசிப் பட்டாசு சரம் தொடர்ந்து வெடித்தது போன்ற அநுபவம் பெற்றோம்.

**சொற்பொழிவுப் பயிற்சி:** நான் துறையூரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபோது சுய மரியாதை இயக்கம் பல இடங்களில் உயர்நிலைப்பள்ளி மேல் வகுப்பு மாணாக்களில் பள்ளிக்கொருவராகத் தேர்ந்தெடுத்து பல இடங்களில் பயிற்சி முகாம் அமைத்து பயிற்சி தந்து கொண்டிருந்தது. து.மா. பெரியசாமி என்ற மாணவனைக் கரூர் முகாமிற்கு அனுப்பி வைத்தேன். அறிஞர் அண்ணா பொருள் பொதிந்த அடுக்குத் தொடர்கள் அமைந்து பேசினதுபோல் மாணாக்கர்கட்குப் பயிற்சி அளிக்கப் பெற்றது. இந்தப் புது

நடையில் கட்டுரைகள், பேச்சுகள் அமைந்த 'திராவிட நாடு' என்ற வார இதழ் இப்பயிற்சி பெறுப வர்களின் பேச்சுக்கு மேலும் துணையாக இருந்தது. அக்காலத்தில் எங்குப் பார்த்தாலும் இந்த இளைஞர்கள் அடுக்கு மொழியில் பேசி வந்ததைக் காண முடிந்தது. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி, மூத்த குடி' என்றோ, 'அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைத் தாய் மொழியாகக்' கொண்டோ, 'முத்தமிழ் வளர்த்த சங்ககாலம் தொட்டு' என்றோ பேச்சுகள் தொடங்கும். அடுக்கு மொழிகளில் அரசியல் போக்கில், நடைமுறை அரசியலில் கருத்துகளைக் கொண்டு பேச்சு அமையும். கருத்தைப் பற்றிச் சிந்தனை இருக்காது. பட்டத்து நூல் விடுகிற மாதிரி பேச்சு போய்க் கொண்டிருக்கும். இன்னொரு வியப்பு என்னவென்றால், சீர்திருத்தத் திருமணத்திலும், கட்சிக்காரர் ஒருவர் இறந்து விட்டால் இழவு வாசலிலும் வேறுபாடு கருதாது ஒரே பாணியில் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்! நான் இவற்றை வியப்புடன் கேட்டுக் கொண்டிருப்பேன். அண்ணல் விசுவநாதம் அவர்கள் இவற்றையெல்லாம் நன்கு அறிவார்.

**விசுவநாதம்:** நான் அவரை அறிமுகப்படுத்திக் கொண்ட காலம் அவர் நன்கு முதிர்ந்த தெளிவான நிலைகளில் பேசிக் கொண்டிருந்த காலம். பெரும்பாலும் பிஷப் ஹீபர் கல்லூரி வளாகத்தில் ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார் இவர்களோடு இருந்து பேசியவற்றைக் கேட்டு மகிழ்ந்தகாலம். காரைக்குடியில் பணியாற்றிய காலத்திலும் (1950-60) செட்டிநாட்டுப் பகுதிகளில் கல்லூரி, பள்ளி ஆண்டு விழாக்களிலும், தமிழ்த் திருமண நிகழ்ச்சிகளிலும் இவர் பேச்சைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு. சில சமயம் நானும் அந் நிகழ்ச்சிகளில் பேசியதுண்டு. கவிதைகளில் கவிஞன் எங்ஙனம் சொற்களைக் கையாளுவானோ அங்ஙனம் இவர் பேச்சில் சொற்களைக் கையாளுவார். இப்படிச் சொற்கள் தாமாக வந்து இவர்தம் பேச்சில் புகுந்து ஏவல் கேட்டு நிற்கும் என்று சொல்லி வைக்கலாம்.

இச்சமயத்தில் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வரலாற்றில் படித்த ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது.

'எனைவைத்தி எனை வைத்தி' யெனப் பதங்கள்
இடையிடை நின்று இரந்து வேண்ட
'இனி வைப்பாம் இனிவைப்பாம்' பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற ஒருகடிகைக் களவில்கவித்
தொடைதொடுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தர வள்
ளலைப் போல்வர் புவியில் யாரே.[4]

என்ற பாடல் பிள்ளையவர்களின் நண்பர் இராமசாமி அய்யர் அவருடைய கவிதை இயற்றும் திறனைக் குறித்துப் பாடியது. அகராதியிலுள்ள சொற்கள் எல்லாம் பலவரிசைகளில் நின்று கொண்டு 'என்னை உங்கள் கவிதையில் வையுங்கள்; என்னை உங்கள் கவிதையில் வையுங்கள்' என்று வேண்டி நிற்கின்றனவாம். பிள்ளையவர்கள் அவர்களை அமைதியாக இருக்குமாறு கூறி, 'இனி வைப்போம்; இனி வைப்போம்' என்று சமாதானம் செய்வாராம். திரிசிரபுரத்தைச் சார்ந்த பிள்ளை யவர்கள் கவிதையில் வல்லுநர்.

நம் அண்ணல் விசுவநாதமும் திரிசிரபுரத்தைச் சார்ந்தவரே. இவர் உரைநடைச் செல்வர். இவர் பேசும் போதே அகராதிச் சொற்கள் அவர் ஏற்கெனவே அறிவுறுத்தியவாறு தத்தமக்கு வரையறுக்கப் பெற்ற இடங்களில் புகுந்து கொண்டு அண்ணலாரின் பேச்சை அழகு செய்து பொலிவினை ஊட்டும் என்றும் சொல்லி வைக்கலாம். ஆலைகளில் நூல் இயல்பாக வருவதுபோல் இவர் பேச்சும் ஆற்றொழுக்காக இவர்தம் திருவாயினின்று வெளிவரும். இவர்தம் சொல்வளத்தையும் சொல்லும் வன்மையையும் புலப்படுத்தி நிற்கும்.

4. உ.வே.சா: மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (இரண்டாம் பாகம்)-ப.255

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. [645]

என்ற வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டவாறு சொற்கள் இவர் பேச்சில் ஒழுங்கு பெற அமைந்து அப்பேச்சு 'கேட்டார் பிணிக்கும் தகையவாய்' (643) அமைந்து பேசுவோருக்குப் புகழ் ஈட்டித் தரும். இங்ஙனம் நம் அண்ணல் பேச்சுக் கலையின் கொடுமுடியில் நின்றவர். அவர் மறைந்து விட்டாலும் அவர்தம் திருமுகம் நம் மனக் கண்ணில் நிற்க, அவர்தம் பேச்சு நம் மனக்காதில் ஒலித்துக் கொண்டுள்ளது.

தமிழ்ப்பற்று: இளமையில் அவருக்கு உண்டான 'தமிழ் பற்று' சைவச் சான்றோர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைத் தந்தது. இதன் காரணமாக அவர் உள்ளத்தில் தமிழில் நன்றாகப் பேசவும் தெளிவாக எழுதவும் வேண்டும் என்ற உந்தல் (Drive) எழுந்தது. திருவாளர் உ.க. பஞ்சரத்தினம் பிள்ளை என்ற பெரியாரைப் பேச்சுக்கு ஒரு குறிக்கோள் மனிதராகக் கொண்டார். திரிசிரபுரம் சைவப் பேரவையின் மூலமாகப் பேச்சுப் பயிற்சியை முறையாகப் பெற்றார். ''உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்''[5] என்ற வள்ளுவம் அவருக்கு ஞான விளக்காக ஒளிகாட்டிக் கொணடிருந்தது. இது காறும் தம் பேச்சாற்றலை அறைக்குள்ளேயே காட்டிக் கொண்டிருந்த அண்ணல் அம்பலத்தில் ஆற்றலைக் காட்ட வேண்டிய வாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்!

'பெரியாரைத் துணைக்கோடல்'[6] என்பது அவர்தம் மற்றொரு குறிக்கோள். இந்த அதிகாரத்திலுள்ள அனைத்துக் குறள் மணிகளும் அவர் உள்மனத்தில் இடைவிடாது ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்; இறையருளால் அந்த வாய்ப்பும் தானாக வந்தது.

5. குறள் - 596
6. மேலது - அதி.45

**கன்னிப்பேச்சு:** நெல்லை மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் (1921) சித்தி விநாயகர் சபை ஆண்டு விழாவில் பேசும் வாய்ப்பு வந்து சேர்ந்தது. பெருங்கவிஞர் வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தலைமையில் 'அன்பு-மனத்தின் வன்மை' என்ற பொருள் பற்றிப் பேசும்படி அவையினர் கேட்டுக் கொண்டனர். இதுவே அண்ணல் முதல் முதலாக மேடை ஏறிப் பேசிய பேச்சு. இதே மேடையில் கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை, கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார் போன்ற பெரியோர்களும் பேசினர். பெரும்புலிகளுடன் ஒரு சிங்கக்குட்டி இருக்கும் வாய்ப்பு. விசுவநாதம் தமது 22-வது அகவையில் மிகத் துடிப்புடனும் ஆர்வத்துடனும் பேசிய பேச்சு பெரியார்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர்கள் யாவரும் எதிர்காலத்தில் அடல் ஏறுபோல் பேச்சில் திகழ்வார் என்று வாழ்த்தினர்.[7]

இதன் பிறகு அண்ணலுக்கு எத்தனையோ வாய்ப்புகள் வந்து சேர்ந்தன. அவருடைய தியாக வாழ்க்கையும் தொண்டுள்ளமும் அவருக்குப் பலபல பெருமைகளைத் தேடித் தந்தன. இலக்கியம், இசை, நாடகம், அரசியல், சமூகம், சீர்திருத்தம், கல்வி, வாணிகம், தொழிலாளர், ஆராய்ச்சி, மேடை, வானொலி நிலையம் ஆகிய பன்னிரு துறைகளிலும் அவருடைய பலநூறு பேச்சுகள் பல்லாண்டுகளாக நடைபெற்று வந்துள்ளன. அவற்றுள் சில பிரிவுகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் பெரும் புகழைத் தேடித் தந்தன என்பதைச் சுருக்கமாகக் காண்போம்.

**சீர்திருத்தத்துறை:** சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவையனைத்தும் நீக்கப்பெற வேண்டும் என்பது பற்றிப் பல இடங்களில் நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

**(அ) சாதிவேற்றுமை:** சைவம் மற்றும் பழமைக் கருத்துகளில் பெரு நம்பிக்கைக் கொண்ட பெருங் குடும்பத்தில்

7. திருச்சி விசுவநாதம் - பக். 125

6.6

தோன்றிய அண்ணல் விசுவநாதம், இளமை முதற் கொண்டே சாதி வேற்றுமையை ஓம்புவதில்லை. பார்ப்பார், பறையர் முதலிய பாகுபாட்டை அடியோடு வெறுத்தவர் அண்ணல் விசுவநாதம். 'சாதி' என்ற சொல் தமிழில் உண்டு; தொல்காப்பியத்தில் அது காணப்பெறு கின்றது. ஆயினும் அச்சொல் ஓரிடத்திலாயினும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப் பெறவில்லை. அது நீரில் வாழும் உயிர்களையே குறிக்கின்றது.[8] இன்று 'சாதி' என்னும் சொல் பிறப்பிலே வேற்றுமை உண்டு என்பதைக் குறிப்பதாகும். பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. தொழில் ஒழுக்கம், கல்வியறிவு திறமை என்ற இவற்றின் காரணமாகவே வகுப்புப் பிரிவுகள் தோன்றின. நாளடைவில் மக்கள் செய்யும் தொழில்களில் சிறுமை பெருமை பாராட்டத் தொடங்கினர். இவையே உயர்வு தாழ்வுகளுக்கு உறைவிடமாயின. வடமொழியிலுள்ள வேத-உபநிடத- சுமிருதிகளும் இவ்வுண்மையையே ஒப்புக் கொள்ளுகின்றன.[9]

தமிழ்நாட்டில் குலங்கள் அடிப்படையில் மக்களைப் பிரித்து வைத்தனர் என்ற கொள்கையும் உண்டு. சாதி, குலம் போன்ற சொற்கள் கிட்டத்தட்ட ஒரு பொருளையே குறிப்பவை. 'நால்வகைச் சாதிகள் இந்நாட்டினில் நாட்டினீர்' என்ற கபிலரகவலைச் சான்றாக்க கொண்டு வேண்டாதார்மீது வீண்பழி சுமத்துவது அறிவுடைமைக்கு உகந்ததன்று.

---

8. நீர் வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய - மரபியல் - நூற். 44.
நீர் வாழ் சாதியுள்-நந்தும் நாகே' - மேலது, நூற். 64
சாதி - ஜாதி. ஜம் - பிறப்பு, ஜனித்தல், பிறத்தல், ஜன்மம் - பிறப்பு. முதன்முதலில் அறிவியலில் கலைச்சொற்களை உருவாக்கும்போது Hydrogen என்பதற்கு 'அப்ஜனகம்' என்று மொழி பெயர்த்தனர். Hydro - water. gen-generated. அப்பு - நீர். ஜனகம் - பிறந்தது. பின்னர் இது 'நீர்வளி' என மொழி பெயர்க்கப்பெற்றது. இவையாவும் நடைமுறைக்கு உகந்ததல்ல. பொருளிலிருந்து தோன்றும் பொருள்கட்குப் (Derivatives) பெயரிடும்போது சரிவருவதில்லை. ஆகவே, 'ஹைட்ரோஜன்' என்றே சொற்பெயர்ப்பு செய்து கொள்வது உகந்தது.
9. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - பக் 410 - 411

இன்றுள்ளதுபோல் அன்றும் சாதிப்பிரிவு பொருளாதார அடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். காலப் போக்கில் அது தொடர்பற்று வெவ்வேறு குலமெனக் கருதும் நிலை வந்து விட்டது. ஒவ்வொருவரும் பேதைமையால் 'குலப்புராணம்' பாடும் இயல்புடையவராக மாறிவிட்டனர். எனவே, சாதிப்பிரிவிற்கு எந்த ஒருவகுப்பாரும் பொறுப்பல்லர் என்றே தோன்றுகின்றது, எப்படியிருப்பினும் சாதி வேற்றுமையை அடியோடு வெறுத்தார் நம் அண்ணல். தம் சொற்பொழிவு களில் இதனை வெறுத்தே வந்தார்.

நம் நாட்டில் நடைபெறும் கலகங்களுக்கும் குழப்பங் களுக்கும் சாதிமுறையே பெரிதும் காரணமாக இருந்து வருகின்றது. அண்மையில் பீகார் மாநிலத்திலும் தமிழகத்தில் தென்பகுதியிலும், கோவையிலும் சாதி வேற்றுமைக் கொடுமையால் நேரிட்ட கலகங்களையும் கொலைகளையும் கண்டு சான்றோர்கள் தலை குனிந்தனர். அண்ணல்கூறுவார். ''சமூகம் என்னும் நிலத்தில் சாதி என்னும் விதையூன்றி, வெறுப்பு என்னும் நீர் பாய்ச்சி வேற்றுமை செடி வளர்த்து, பொறாமை பூத்து, கலகம் காய்த்து, அடிதடி பழுக்க வைக்கின்றோம்'' என்று. மேலும் அண்ணல் ''சாதி வேற்றுமை, நாட்டு வேற்றுமையை விட, சமய வேற்றுமையை விட, மொழி வேற்றுமையை விட, நிற வேற்றுமை்மை விட, மிகப் பெரிதாக மதிக்கப்பெற்று வருகின்றது'' என்று பேசுவார்.

நகைச்சுவைமிக்க நம் அண்ணல், ''தீண்டாமை, கொள்ளாமை, கொடுக்காமை, உண்ணாமை, தின்னாமை, எண்ணாமை, இரங்காமை, பொறாமை முதலிய எத்தனையோ ஆமைகள் சாதி முறைச் சேற்றில் வாழ்கின்றன. இந்த ஆமைகள் யாவும் உணராமைக் கிணற்றிலுள்ள அறியாமையின் குட்டிகள் ஆகும்'' என்று பல ஆமைகளைக் குறிப்பிட்டுச் சாதியால் ஏற்படும் வேற்றுமைகளைப் போக்க வேண்டும் என்பார். பாவேந்தர் 'ஆமை' என்ற சொல்லை வைத்துக் கொண்டு ஒரு கவிதையில் விளையாடுவதை இச்சமயத்தில் நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம்.

(ஆ) மூடப்பழக்கங்கள்: எங்குப் பேசினாலும், எதைப் பற்றிப் பேசினாலும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சமூகத்தில் புகுந்துள்ள குருட்டுப் பழக்கவழக்கங்களையும் மூடத் தனங்களையும் சாடுவதில் நம் அண்ணல் தவறுவதில்லை. சாதியற்ற-ஏற்றத்தாழ்வற்ற-சமய பேதமற்ற சமுதாயம் இந்நாட்டில் ஏற்பட வேண்டுமென்று பாடுபடும் நோக்கத்தைக் கொண்டது தன்மான இயக்கம். இந்த இயக்கத்தில் கலந்து கொண்டு இவர் பேசிய பேச்சுகள் எண்ணற்றவை. காரண காரியத் தொடர்பற்ற எதையும் இவர் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு சமயம் அவர் சொன்னது: "கடவுளாயிருந்தாலும் கருதிப் பார்; காந்தியாயிருந்தாலும் அலசிப்பார் என்று கூறுவதோடு நின்று விடாதே. பெரியரா யிருந்தாலும் சிந்தித்துப் பார் என்று கூறு; இன்றேல், பகுத்தறிவை விட்டு விலகி விடுவோம்" என்பதாக. கடவுள், சமயம், புராணம் இவற்றைப் பற்றிக் கூறும் கருத்துகள் யாவும் பகுத்தறிவு உலையில் புடம் போட்டவையாக இருக்கும்.

உடன்கட்டை ஏறலைச் சட்டபூர்வமாகத் தடுத்து நிறுத்தப் போராடிய இராஜராம் மோகன்ராயின் சீர்திருத்தத் தொண்டைப் பாராட்டும் முகத்தான் திருச்சியில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார். அப்போது, பிறந்த தம் ஆண் குழந்தைக்கு '**இராஜாராம்**' என்று திருநாமம் சூட்டி மகிழ்ந்தார்.

இவருடைய சீர்திருத்தக் கொள்கை விநோதமானது. ஒரு தனிப் போக்குடையது. ஓமியோபதி மருத்துவம் போன்றது! மாற்றாரை நேரடியாகக் குறை கூறாமல் வேடிக்கையாக உண்மையை உளங்கொள்ளும் வகையில் விளக்கும் போக்குடையவர். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருவேன்.

(1) 'திருக்கழுக்குன்றத்தில்' மலைமீது நாள்தோறும் இரண்டு கழுகுகள் காசியிலிருந்து உணவு எடுத்துக் கொள்ள வருவதாக வைதிகர்கள் கதை கட்டியிருக்கும் போக்கிற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு ஒரு காரியம் செய்தார் தம் வீட்டில். நாடோறும் தம் வீட்டு மாடியில் குறிப்பிட்ட காலை நேரத்தில்

காக்கைக்கு உணவூட்டி வருகின்றார். இதை இவர் நகைச் சுவையாக 'காக்கைக் குன்றம்' என்று வழங்குவார். மேற்கொண்ட பணியைத் தொடர்ந்து செய்து, பழக்கத்தால் எதுவும் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ள வரும் என்ற உண்மையை நாடறியச் செய்து வந்த நாநயம் படைத்த வித்தகர் இவர்.

இதனை உளவியலார் 'ஆக்கநிலை மறிவினை' (Conditioned reflex) என்று வழங்குவர். கற்றலில் (learning) இதனை ஒரு வழியாகவும் கொள்வர். பாவ்லோவ் (Pavlov) என்ற இரஷ்ய அறிஞரும் வாட்சன் (Watson) என்ற அமெரிக்க அறிஞரும் கற்றல் அனைத்தும் மறிவினைச் செயல்களே (Reflex action) என்றனர். நாயின் வாயில் உணவு சேர்ந்தவுடன் உமிழ் நீர் ஊறுதல் இயற்கை மறிவினையாகும். உணவிடும் போதெல்லாம் ஒரு மணியோசையை எழுப்பி வந்தால் உணவிடுதலும் மணியோசையும் இயைபு பெற்று தூண்டலின் துலங்கலாகி (stimulus-response) விடுகின்றது. உணவின்றி மணியோசையை எழுப்பினாலும் நாயின் வாயில் உமிழ்நீர் ஊறுகின்றது. இதையே கற்றலின் மறிவினை அல்லது ஆக்கநிலை மறிவினை என்பர் உளவியலார்.[10] இதுவே கழுகு களுக்கும் காக்கைகளுக்கும் பொருந்தும்.

(2) "மேல்நாட்டில் பெண்கள் விண்விமானிகளாக இவ் உலகத்தை வலம் வருகின்றனர். நம்நாட்டுப் பெண்களும் அவர்கட்குச் சளைத்தவர்கள் அல்லர். எதில்? அரசமரத்தைச் சுற்றுவதில்" (சுற்றியவுடன் அடி வயிற்றைத் தடவிப் பார்ப்பர் சூல் கொண்டு விட்டோமோ என்று பார்க்க) இவ்வாறு சிரிக்கச் சிரிக்கப் பேசி அறியாமையைப் போக்குவர்.

(3) பார்ப்பனர்கட்குத்தான் நாட்டுப்பற்று உண்டு; மற்றவர்கட்கு அஃது இல்லை என்று கூறுவது பெரும் பிழையாகும் என்று கூறிய அண்ணல் மேலும், "இந்திய

10. கல்வி உளவியல் கோட்பாடுகள் - பக் 209

வரலாற்றையே எடுத்துப் பாருங்கள். எத்தனையோ முறை படையெடுத்து வந்தவர்களை எல்லாம் கைலாகு கொடுத்து வரவேற்று அவர்கட்கு இந்நாட்டைக் காட்டிக் கொடுத்த வஞ்சகர்க்கும் தேசபக்திக்கும் உள்ள சம்பந்தம் ஏகாதசிக்கும் இன்னாசிமுத்துவுக்கும் உள்ள சம்பந்தமாக இருக்கும். அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும் உள்ள சம்பந்தமாக இருக்கும்'' என்று ஒருமுறை விளாசி காட்டியது இவர்தம் சொல்லாற்றலை விளக்கும்.

(4) அரசியல் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரைக் குழம்பிற்குக் கறிவேப்பிலையைப் பயன்படுத்திக் கொண்டு பிறகு தூக்கி எறிந்து விடுகின்றனர் என்று ஓர் எடுத்துக்காட்டால் விளக்கியது இவர் தம் நா நயத்திற்குச் சான்றாக நிற்கும்.

(5) இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலங்களில் இராஜாஜி தமது பேச்சுக்களில் அத்தைப் பாட்டிக் குட்டிக்கதைகளையும் எளிய எடுத்துக்காட்டுகளையும் கூறி மக்களை மயக்குவதுண்டு. இவற்றை நம் அண்ணல் அவர்மீதே திருப்பிவிட்டு அவர் வாயை அடக்குவது விசித்திரமானது.

(அ) ஒரு சமயம் இந்தியின் இன்றியமையை வற்புறுத்த இராஜாஜி 'தமிழ் இட்லி போன்றது; அதற்கு இன்றியமையாத சட்னி போன்றது இந்தி' என்று குறிப்பிட்டுப் பொது மக்களை ஏமாற்றப் பார்த்தார். நம் அண்ணல் உடனே சொன்னார்: ''இராஜாஜி தமிழை இட்லிக்கு ஒப்பிட்டதை அப்படியே ஒப்புக் கொள்வோம். வெறும் இட்லியை சட்னி இல்லாமல் உண்ண முடியும். இட்லி இல்லாமல் சட்னியை உண்ண முடியாது. ஆகவே, தமிழே சரியாகத் தெரியாதவர்கட்குத் தமிழ்தான் முதலில் கற்றுக் கொடுக்கப் பெறுதல் வேண்டும்; அதை விட்டுவிட்டு இட்லி இல்லாத வெறும் சட்னியை (இந்தியை) கொண்டு வருவதில் பயன் ஏதும் இல்லை'' என்று பதில் கொடுத்து இராஜாஜியின் உவமையை உருக்குலைத்து உதறினார்.

(ஆ) பிறிதொரு சமயம் அமைச்சர் இராஜாஜி ''தமிழ் வேட்டி போன்றது; இந்தி சட்டை போன்றது'' என்று உவமை கூறி இந்தியின் இன்றியமையாமையை வற்புறுத்தினார்.

உடனே அண்ணல், ''தமிழ் வேட்டி போன்று மிகவும் இன்றியமையாததுதான். அதை அவர்கள் வைத்துக் காப்பாற்றி னாலே அஃது அவர்களது மானத்தைக் காப்பாற்றும். அதை விட்டு, அவர்கள் இந்தி எனும் சொக்காயை மட்டும் அணிந்து தமிழ் வேட்டி இல்லாமல் இருப்பார்களேயானால் அதைவிட அவமானம் வேறு ஒன்றும் இல்லை'' என்று சாணக்கியரையும் வெல்லும் சாணக்கிய முறையில் பதில் கூறி வாயடைத்து அந்த உவமையையும் சிதறடித்தார்.

இவற்றால் அண்ணலின் பேச்சுதிறமையை நன்கு அறியலாம். சாதுர்யமாகப் பேசும் போக்கையும் உணரலாம்.

இங்ஙனம் தந்தை பெரியாருக்குத் தோள் கொடுத்து தன் மான இயக்கத்தைப் பரப்புவதற்கு ஒல்லும் வகையெல்லாம் உதவிய அன்பர்கள் அண்ணல் விசுவநாதம் குறிப்பிடத்தக்கவர். தந்தை பெரியாருடனும் தனியாகவும் தமிழகம் முழுவதும் வலம் வந்து தன்மானக் கருத்துகள் மக்கள் மனத்தில் ஊன்றும் வண்ணம் நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள் செய்து வந்ததை தமிழகம் போற்றி வருகின்றது. அவர்தம் வேடிக்கை யான குட்டிக்கதைகளும் காரணகாரியத் தொடர்புடன் விளக்கும் முறைகளும், நகைச்சுவைப் பாணியும் மக்கள் உள் மனத்தில் நெடு நாட்களாகப் படிந்து கிடந்த குருட்டு நம்பிக்கைகளும் மூட பழக்கவழக்கங்களும் படிப்படியாக மறைந்து வரலாயின.

அண்ணல் விசுவநாதத்தின் சொற்பொழிவுகளால் தமிழிலேயே அறிஞர்களைக் கொண்டு தமிழிலேயே திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. தொண்டு கிழங்கள் பொருந்தாமணம் செய்து கொள்வது அடாதது என்ற உணர்ச்சி பரவியது. கைம்பெண்கள் மணம் செய்து கொள்வது வழக்கிற்கு வந்தது; எண்ணற்ற கைம்மை மணங்கள் நடைபெறலாயின. சாதிப் பிரிவுகளும் கொடுமைகளும் ஒழிய வேண்டும் என்ற நல்லுணர்வு பட்டி தொட்டியெல்லாம் பரவிக் கொள்ளத் தொடங்கியது. பகுத்தறிவு ஒளி தமிழ் நாடெங்கும் வீசத் தொடங்கியது. சாதிக்

கோட்டைகள் சரியத் தொடங்கின. தன்மானச் சூறாவளி பழமையை அடியோடு தகர்த்தது. வைதிகம் பகுத்தறிவால் வீழ்ந்தது. இப்படி அண்ணல் சொற்பொழிவுகள் அவனிக்கு நலம் பயந்தன.[11]

**பேச்சு மேடையில் மாற்றம்:** அண்ணல் விசுவநாதம் பேச்சுத் துறையில் இறங்கியதால் தமிழ் பேச்சு நடையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.[12] மறைமலையடிகள், பண்டிதமணி, நாவலர் வேங்கடசாமி நாட்டார் போன்ற பெரும்புலவர்களின் பேச்சு நடைப்பாணி அண்ணலின் பேச்சு நடையில் இளகியது; எளிதாகவும் கவர்ச்சியுடையதாகவும் மாறியது. புலவர்கட்கே உரிய பேச்சு நடையைத் தமிழ் ஆர்வலர்கட்கும் உரியதாக அமைந்தது. தன்மான இயக்கத்தின் சிந்தனை, பேச்சு, தமிழ் இவையனைத்தும் அண்ணலின் நுழைவிற்குப் பிறகு சீர்திருந்தியது. கொச்சையற்ற அழகு தமிழால், ஆணித் தரமான பேச்சாய், மாற்றார் மனத்தையும் மாற்றக்கூடிய ஆற்றலுடைய தாய், மாறியது. பண்டிதத் தமிழுக்கும் பாமரத் தமிழுக்கும் இடைப்பட்டதான தமிழ்நடை பிறப்பதற்கு அண்ணலின் பங்கு அளப்பரியது; வரலாற்றுப் புகழ் பெற்றது.

**பாராட்டுரைகள்:** அண்ணல் விசுவநாதத்தின் பேச்சாற்றலை வியந்து பாராட்டுரைகள் குவிந்தன. நில்கண் பெருமாள், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, நாவலர் நெடுஞ்செழியன், மு. அண்ணல், திரு.கோ. நாவலர், ச. சோமசுந்தர பாரதியார் போன்ற பேச்சாளப் பெருமக்கள் பாராட்டியுள்ளனர்.[13] இருவர் புகழுரைகளை மட்டிலும் ஈண்டு தருகின்றேன்.

"கேட்டவர் பிணிக்கும் தகையராய், கேளாரும் வேட்ப மொழியும் இந்நாவலர் பிறவியில் பேச்சாளி; சிறந்த எழுத்தாளர். நகைச்சுவை மிளிர ஆழ்ந்த கருத்துகளைக் கேட்பவர் அகத்தூன்றப் பேசி, இன்பமும் பயனும்

11. திருச்சி விசுவநாதம் - பக் 90

12. அண்ணா பேச்சு நடையில் அடுக்குமொழி நடை மக்கள் மனத்தைக் கவர்ந்ததை ஈண்டு நினைவு கூர்தல்தகும்.

13. திருச்சி விசுவநாதம் - பக் 131 - 133

ஒருங்கெய்த வைக்கும் திறம் நிறைந்தவர். பொருளற்ற சொல்லடுக்கும் புலவர் அல்லர். இகலாது வெல்லும் சொல்வல்ல வித்தகர். எளிமையும் இனிமையும் மிளிர வைக்கும் சொல்லின் செல்வர்'' என்பது பசுமலை பாரதியாரின் பாராட்டு.

''இவருக்கு நன்றாகப் பேசத் தெரிகின்றதற்குரிய காரணங்கள் பலவற்றுள் பேசாமல் இருக்கவும் தெரியும்'' என்பது திருச்சி புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் எம். ரம்போலோ மகரனேஸின் புகழ் மாலை.

# 6

# இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்

**அண்ணல்** விசுவநாதத்திற்குத் தமிழ் மொழியின்மீது அடங்காக் காதல் உண்டு. எந்த வழியிலாயினும் அதற்கு ஊறு விளையும் அறிகுறிகள் தென்பட்டாலும் அண்ணல் வீறு கொண்டு எழுவார். இந்தித் திணிப்பு தமிழுக்குக் கேடு விளைவிக்கும் என்பதை நீள நினைந்து பார்த்தவர் திருச்சி தந்த செம்மல் விசுவநாதம்.

**திருச்சிக்குப் பெருமை:** தமிழ் என்றால் மதுரை நினைவுக்கு வரும். காரணம், தமிழை வளர்த்த சங்கங்கள் இருந்தமையால்; கவியரங்கேறிய அரசர்கள் செங்கோ லோச்சியதால். இவை போன்றவற்றால், பலர் செய்த சாதனையால், மதுரைக்குப் புகழ் வந்தது.

திருச்சிக்குப் பெருமை வந்தது இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதன்முதலாகத் தொடங்கப் பெற்றதால்; அதுவும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் முன்னின்று தொடங்கியதால். '**தமிழுக்கு ஆபத்து**' என்ற குறிப்பு தெரிந்தாலே முதன்முதலாகச் சீறி எழுபவர் முத்தமிழ்க் காவலரே. இந்தியைக் கட்டாய பாடமாகத் திணிக்க அரசு முயன்றபோது அதனைத் தகர்த்தெறியும் போராட்டம் மூன்று கட்டங்களில் நடைபெற்றதாகக் கருதலாம்.

## முதல் கட்டம்

1937-இல் காங்கிரசு முதன்முறையாக அரசாங்கத்தை ஏற்று நடத்த முன் வந்ததும், இந்தியைக் கட்டாய பாடமாக்கத்

திட்டமிட்டதேயாகும். வடநாட்டுக் காங்கிரசுக்காரர்களைத் திருப்திபடுத்துவதற்காகவே "முதற்கோணலில்" இறங்கினார்கள். முதற்கோணல் முற்றும் கோணலாகும் என்று அவர்கள் குறைமதிக்கு எட்டவில்லை.

எவரேனும் தமிழ்மொழிக்கு ஊறு செய்யத் துணிந்தால் தமிழர்கள் அதனைப் பொறுத்துக் கொள்ளார். "தமிழை இகழ்ந்தவரை எம் தாய் தடுத்தபோதிலும் விடோம்" என்ற சூளுரையை மேற்கொள்ளத் தயங்கார். இந்த அழியா உணர்ச்சி வெள்ளத்தை முதலமைச்சராகப் பதவியிலிருந்த இராஜாஜி இந்தியைக் கட்டாய பாடமாக்கத் திட்டமிட்டபோது தமிழகம் முழுவதும் கிளர்ந்தெழுந்தது. தங்களிடையே இருந்த சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, கட்சி வேற்றுமை இவற்றை மறந்து தமிழைப் பாதுகாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

**1. தமிழ் மாநாடு:** இதனைச் சரியாக நடத்தத் திருச்சி விசவநாதம் மேற்கொண்ட அரும்பாடுபாட்டைப் பொன்னெழுத்துகளால்தான் பொறிக்க வேண்டும். சென்னை மாநிலத் தமிழர் மாநாடு 26-12-1937இல்[1] கூடியது. கி.ஆ.பெ. விசுவநாதம் செயலராகச் செயற்பட்டார். சென்னை மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும், மும்பை, பர்மா, பிநாங்கு, இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் தமிழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

பசுமலை பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் மாநாட்டுத் தலைமை ஏற்று மிகச் சிறப்பாக நடத்தித் தந்தார். இம்மாநாட்டில்,

(அ) தமிழ்நாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், தமிழ் வளர்ச்சிக்காகத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் பெற வேண்டும்[2] என்றும், இந்தியைக் கட்டாய

1. அப்போது நான் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் பி.எஸ்சி வகுப்பு மாணவன். மாநாட்டை நேரில் கண்டு மகிழ்ந்தவன்.

2. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சர் ஆட்சியில் தஞ்சையில் இது அமைக்கப்பெற்றது இது தவிர கோவையில் பாரதியார் பெயரால் ஒரு பல்கலைக் கழகமும் திருச்சியில் பாரதிதாசன் பெயரால் ஒரு பல்கலைக் கழகமும் தொடங்கப் பெற்றன.

பாடமாக்குவதை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

(ஆ) இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பாசறை அமைக்கப்பெற்றதும் கொடிமரம் நாட்டப்பெற்றதும் திருச்சியில்தான்.

(இ) இந்த வரலாற்றைக் கருத்தில் கொண்டு 'தமிழன் தொடுத்த போர்' என்னும் நூல் வெளிவந்ததற்குக் காரணமாக இருந்தது திருச்சியே.

(ஈ) 'திரும்பிப் பார் திருச்சியை' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா மூலம் 'விடுதலையில்' ஒரு தலையங்கம் பிறந்து தமிழ்ப் பகைவரை எச்சரித்தது.

2. **தமிழர் பெரும்படை:** 1938 ஆகஸ்டு முதல் நாளன்று தமிழர் படை ஒன்று அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் தலைமையில் திருச்சி மாவட்டத்தைக் கடந்து செங்கற்பட்டு மாவட்டத்தைத் தாண்டி செப்டம்பர் 11இல் (42 நாட்களில்) 577 மைல்கள் கால்நடையாகச் சென்னை வந்தடைந்தது. இதற்கும் முதலமைச்சர் அசைந்தார் இலர். 21-4-1938-ம் நாள் ஆணைப்படி தமிழகத்தில் 60, ஆந்திரத்தில் 54, கன்னட நாட்டில் 4, கேரளத்தில் 7 ஆக 125 பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் பயிலும் மாணவர்கள்மீது இந்தி திணிக்கப் பெற்றது.

இந்த அடாத ஆணையைக் கண்டு கல்வி நிபுணர்கள் பேராசிரியர்கள், நடுநிலையாளர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் கண்டனக் குரல்கள் எழுப்பினர். இதற்கும் இராஜாஜி அடங்கினாரிலர்.

3. **சென்னை மாநில இந்தி எதிர்ப்பு உரிமை ஆணையம்:** (The Anti-Hindi High Command): இப்பெயரால் நிறுவனம் ஒன்று நிறுவப்பெற்றது. இதில் தமிழ்ப் புலவர்கள், தன்மான இயக்கத்தினர், நீதிக்கட்சியினர், துறவிகள் (மடாதிபதிகள்) ஆகியோர் அடங்குவர். இதன் தலைவர் **திரு.ச.சோமசுந்தர பாரதியார்;** செயலர் **கி.ஆ.பெ.வி.** இதன் செயற்பாட்டால்

முத்தமிழ்க் காவலர் அவர்களை இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர் என்று தமிழகம் முழுவதும் அறியச் செய்தது.

தமிழகம் முழுவதும் தம் சொந்தப் பணத்தைச் செலவு செய்து பம்பரம்போல் சுற்றிச் சுழன்று 100க்கும் மேற்பட்ட கிளைச் சங்கங்களை நிறுவி ஆங்காங்கே சொற்பொழிவுகள் செய்து வந்தார். இந்தி எதிர்ப்பு பிரசாரத்தின் போது மட்டும் 314 ஊர்களில் 430 நாள்களில் 617 சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இது முத்தமிழ்க் காவலரின் மாபெருந் தொண்டு அல்லவா? தூத்துக்குடியில் மட்டிலும் ஒரே நாளில் ஏழு பொழிவுகள் ஏழிடங்களில் நிகழ்த்திய பெருமை இவருக்கு உண்டு. நல்ல உடல்நிலையையுடைய இப்பெரு மகனாருக்கு தமிழ்ப் பற்றும் இந்தியை ஒழிக்க வேண்டுமென்ற பேரார்வமும் அவருக்கு வேண்டிய ஆற்றலை நல்கின.

4. **தியாக மூர்த்திகள்:** சென்னையில் இராஜாஜியின் இல்லத்தின் முன்பு மறியலும் இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பு இந்தி எதிர்ப்புப் பிரசாரமும் செய்யப் புற்றீசல்கள் போல் தமிழர் கிளம்பினர். இவற்றில் கைதாகிச் சிறை சென்றவர்களின் தொகை தலைவர் பெரியார், சர்வாதிகள், தொண்டர்கள் உட்பட மொத்தம் 1271. இவர்களில் ஆண்கள் 1166. பெண்கள் 73. இவர்களுடன் சென்ற குழந்தைகள் 32. இந்நிலையில் கி.ஆ.பெ.வி அவர்கள் பல ஊர்கள் சுற்றுப்பயணம் செய்து உணர்ச்சி மிக்க சொற்பொழிவுகளாற்றி இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற ஆக்க வேலைகள் செய்து வந்தார்.

மறைமலையடிகளால் முதன் முதலாக எழுப்பப் பெற்ற '**தமிழ்நாடு தமிழருக்கே**' என்ற உரிமை முழக்கத்துடன் தமிழ்க் கொடி ஏந்திச் சிறைசென்ற **தாளமுத்துவும் நடராசனும்** தம் இன்னுயிரைக் களபலியாகக் கொடுத்தனர். இதனால் அறப் போராட்டம் முற்றிலும் தீவிரமாக நடைபெறத் தொடங்கியது.

5. **அரசியலில் மாற்றம்:** 31-12-1939இல் காஞ்சிப் பாசறையில் இந்தி எதிர்ப்பு வலுவடைந்தது. இரண்டாம்

உலகப் பெரும் போர் காரணமாக காங்கிரசுக்கும் வெள்ளை யாட்சியினருக்கும் கருத்து வேற்றுமை எழவே காங்கிரசு அமைச்சரவை வெளியேறியது. ஆளுநர் ஆட்சியில் இந்தியைக் கட்டாய பாடத்திலிருந்து விருப்பப் பாடமாக இறக்க இசைவு தெரிவித்தனர்.

**போராட்டத்தில் அண்ணலாரின் பங்கு:** அண்ணலாரின் பங்கு மிகப் பெரியது. இந்தி ஆதரவுக்காக ஒரு சமயம் இராஜாஜி திருச்சி வந்தபோதும், சேலம், தருமபுரியிலும் நம் அண்ணல் நேருக்கு நேர்ந்து வினாக்கணைகளை விடுத்துத் திணற அடித்த செய்திகள் வரலாற்றில் இடம் பெற வேண்டியவை.

(அ) திருநெல்வேலி நக்ரத்திலும், அந்நகர சந்திப் பிள்ளையார் முக்கிலும், எட்டயபுரத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் அண்ணலாருக்குக் கிடைத்த வெகுமதி கல்லடிகள். இவற்றையும் பொறுத்துக் கொண்டு அண்ணலார் தமது கடமைகளை உறுதியுடனும் சலியாமலும் ஆற்றி வந்தார்.

(ஆ) கட்சி வேலையில் முழுக்கமுழுக்க ஈடுபட்டதால், சொந்தத் தொழிலைக் கவனிக்க முடியவில்லை. தமது மகன் இராசரத்தினம் மறைந்ததையும் அதிகமாகப் பொருட்படுத் தாமல் இயக்கப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததை எவரும் மறக்கவில்லை. சுற்றுப்பயணச் செலவும் காலாவதியான புரோநோட்டுகளின் தொகையும், வாணிக நட்டமும் சேர்ந்து ரூ. 12,000/- வரை இழப்பு நேரிட்டமை பலருக்குத் தெரியாது; அவருடன் நெருங்கிய பழகிய ஒரு சிலரே அறிவர்.

(இ) இந்தி எதிர்ப்புக் காலத்தில் அவர் திரட்டிய நிதிக்கும் ஆகிய செலவிற்கும் வைத்திருந்த தனிக் கணக்குப் புத்தகத்தைக் கண்டு வியந்து போற்றாதவர்களே இலர். பெறும் பணத்தை விழுங்கி ஏப்பமிடுவார் பெருகியுள்ள காலத்தில் இங்ஙனம் ஒரு நேர்மையும் ஒழுங்குமுள்ள அண்ணலாரைக் காணும்போது வள்ளுவர் வழியில் நடந்த ஒருவருக்கு எடுத்துக் காட்டாகின்றார்.

## இரண்டாவது கட்டம்

பெரியாரும் தளபதி அண்ணாவும் சிறையிலிருந்தபோது இந்தி எதிர்ப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி வைத்த பெருமை தோழர் பாண்டியனுக்கும் அண்ணல் கி.ஆ.பெ. விக்குமே உண்டு.

**நினைவில் உள்ள பொழிவுகள்:** கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் இரண்டு விதமான பொழிவுகள் நடைபெற்றன. சுய மரியாதை உலகிற்குக் கிடைத்த இரண்டு காளைகளில் ஒன்று அண்ணல் விசுவநாதம்; மற்றொன்று அறிஞர் அண்ணா. இந்த இரண்டு காளைகளையும் தந்தை பெரியார் தமது இரண்டு செல்லப் பிள்ளைகளாகக் கருதி மகிழ்ந்தார். பெரியார் சிறைபுகுந்த அன்று சென்னைக் கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் அண்ணல் பேசின பேச்சு கேட்டோர் அனைவரையும் கண்கலங்க வைத்தது.

(1) அறிஞர் அண்ணாவின் பேச்சு கங்கையாற்று வெள்ளம் போல் பேராவேசத்துடன் மக்களை அடைந்தது.

(2) முத்தமிழ்க் காவலரின் பேச்சு யமுனையாற்றின் பெருக்கு போல் நிதானமாக நடைபெற்று வந்தது.

இந்த இருவேறு சொற்பொழிவுகளும் மக்களுக்கு மாறி மாறிக் கிடைத்து வந்தன; தமிழுணர்ச்சியும் தமிழ்ப்பற்றும் அவர்களிடையே கிளர்ந்தெழுந்தன. இந்தித் திணிப்புக்கு ஏற்பட்ட பலத்த எதிர்ப்பின் நாடியறிந்த வெள்ளையர் ஆட்சி 21-2-1940இல் கட்டாய இந்தித் திட்டத்தைக் கை நழுவி விட்டுவிட்டது.

**நாட்டு விடுதலைக்குப்பின்:** காங்கிரசு அமைச்சரவை சென்னை மாநிலத்தில் ஏற்பட்டதும் கல்வி முறைபற்றிய ஆராய நிறுவப்பெற்ற நிபுணர்குழு "இந்திப் படிப்பைக் கட்டாயமாக்கக் கூடாது" என்ற பரிந்துரையையும் புறக்கணித்து செயற்படத் தொடங்கியது. 'புல்டோசர்' போல், — ஓமந்தூர் இராமாரெட்டியாரின் அமைச்சரவை 20-6-1948இல் இந்தித் திணிப்புபற்றிய அரசாணையைப் பிறப்பித்தது.

பதுங்கியிருந்த புலி பத்தாண்டுக்குப் பிறகு மறுபடியும் பாயத் தொடங்கியது. இதன் விளைவுகள்.''

(1) 17-4-1948 அன்று சென்னை புனித மேரி மண்டபத்தில் இந்தி எதிர்ப்பாளர் மாநாடு நடைபெற்றது. மறைமலையடிகள் மாநாட்டுத் தலைவர். இவர்தான் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அதனைத் தொடங்கி வைத்துத் தலைமை பூண்டனர். அதில் ஒதுங்கி நின்ற திரு.வி.க, ம.பொ.சி., நாரண துரைக் கண்ணன், டி. செங்கல்வராயன் போன்றோர் இதில் பங்கு கொண்டனர்; அரசை வன்மையாகக் கண்டித்தனர். தந்தை பெரியார் அறிஞர் அண்ணா அருணகிரி அடிகள் ஆகியோர் மீண்டும் அறப் போராட்டம் தொடங்க வேண்டும் என்று அறைகூவல் விட்டனர்.

(2) இதன் விளைவாக 15-9-1948 முதல் நாடு முழுவதும் 300க்கு மேற்பட்ட ஊர்களிலுள்ள பள்ளிகள் முன்பு தொண்டர்கள் மறியல் போரை 100 நாட்கள் வரை தொடர்ந்து நடத்தினர். 144 தடையுத்தரவுகள் மீறினர். நான் தலைமையாசிரியனாக இருந்த பள்ளி முன்பும் இம்மறியல் போராட்டம் நடைபெற்றது. நான் தடுத்து நிறுத்தவில்லை. ஏன் தெரியுமா? பள்ளியில் இந்தி கற்பிக்கவில்லை. தவிர, ஆசிரியராக இருக்கும்வரை அரசியலில் பங்குகொள்ளலாகாது என்ற கொள்கையுடையவன்.[3] இதனால் பல்வேறு மொட்டைக் கடிதங்கள் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பப் பெற்றன. மறுமொழி கேட்டு அவை எனக்கு வந்தன. நான் ''மறியலை நான் நடத்தவில்லை; தூண்டவும் இல்லை. பள்ளியிலும் இந்திக் கற்பிக்கவும் இல்லை. இதனைத் தடுத்து நிறுத்துவது காவலர் பணி'' என்று மறுமொழி தந்து வாளா இருந்து விட்டேன். சட்டத்தின்படி நடப்பவனாதலால் எந்த அதிகாரத்துக்கும் பணிய வேண்டியதில்லை. இதனைப் பெரியார் எனக்கு 1944இல் தந்த அறிவுரை.

(3) இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டமும் அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியும் 1949இல் வெற்றியைத் தந்தன.

3. அப்படி இருந்தாலும் நானும் ஒரு தமிழன். தலைமை ஆசிரியர்களில் முதன்முதலாக 'வித்துவான்' பட்டம் பெற்றவன். உணர்ச்சி இருந்தது; காட்டிக் கொள்ளவில்லை.

கல்வி அமைச்சராக இருந்த திரு தி.சு. அவினாசிலிங்கம் தம் பதவியைத் துறந்தார். கட்டாய இந்தி திட்டமும் கைவிடப் பெற்றது. தமிழ் மக்கள் திரும்பவும் அமைதி பெற்றனர்.

## மூன்றாவது கட்டம்

இந்தக் கட்டத்தில் இந்தித் திணிப்புத் திட்டம் பல்வேறு மாற்றங்களை அடைந்தது.

**(1) இந்தியில் மாற்றங்கள்:** பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் '**இந்துஸ்தானி**' என்ற கலப்பு மொழி பயன்படும் என்று காந்தியடிகள் கருதினார். ஆனால் அவர் காலத்திற்குள் இந்தியாவிலுள்ள உருது பாரசீகச் சொற்கள் அகற்றப்பெற்றும், தூய வடமொழிச் (சமஸ்கிருதம்) சொற்கள் கொண்ட 'இந்தி'யாகவும் உருமாற்றம் செய்யப் பெற்றும் இந்தி வெறியர்கள் 'நயா இந்துஸ்தானி' என்ற புதிய பெயர் இட்டனர். கி.ஆ.பெ.வி. மொழியில் கூறினால் 'சமஸ்கிருதத்தின் வாலறுக்கப் பெற்ற நரிதான்' என்பது. விளைவுகள்:

(அ) ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமையைப் பெருக்கியது. மொழிப் பிணக்குகளை ஏற்படுத்தியது. இந்தப் புதிய மொழியின் தனித் தகுதியாவன:

(i) இந்திய மக்களின் தொகை என்றால் இந்தி பேசுவோரின் தொகை 13.3 கோடி.

(ii) இவர்கள் ஒரே வகையான இந்தியைப் பேசுபவர்கள் அல்லர்; இந்தியில் 96 வகைகளுக்கு மேல் உள்ளன.

(iii) இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று மாற்றமும் முரண்பாடுகளும் கொண்டவை, ஒரு பகுதியினர் பேசும் இந்தி பிறிதொரு பகுதியினருக்குப் புரிவதில்லை.

(iv) பிகாரி, மைதிலி, அவதி, மானக சந்திஷ், கர்கி, போஜ்புரி, மேல் இந்தி, கீழ் இந்தி, கரிபோகி எனப் பல பிரிவுகள் இந்தியில் உண்டு.

(v) கரிபோலி பிரிவு டில்லி வட்டாரத்தில் பேசப் பெறுகின்றது. இதனையே இந்திய நாட்டின் ஆட்சி மொழியாக்கப் பெரு முயற்சி செய்யப் பெற்றது.

(ஆ) 'இந்துஸ்தானி'-'நயா இந்துஸ்தானி' ஆகிய வற்றால் ஒற்றுமையை உண்டாக்க முடியவில்லை.

(இ) இந்து-முஸ்லீம் ஒற்றுமையைப் பலப்படுத்த முடிய வில்லை.

(ஈ) எண்ணிக்கை குறைந்த இதனை எண்ணிக்கை மிக்கவர் மீது திணிக்கவே துணிந்தனர்.

(2) கொள்கை மாற்றங்கள்: ஆட்சி மாறமாற ஆட்சி மொழிக் கொள்கையும் மாறி மாறி வந்தது.

(அ) இந்தியை விரும்பிக் கற்றுக்கொள்ளலாம் என்று கூறியவர்கள் பின்னர் இந்தியைக் கட்டாய பாடமாக்கினர்.

(ஆ) பின்னர் ஆங்கிலத்திற்கு இணையாக்கினர்.

(இ) அடுத்து ஆங்கிலத்தைக் கீழே இறக்கி விட்டு அவ்விடத்தில் இந்தியை அரியணையில் ஏற்றத் திட்டமிட்டனர்.

இதனைக் கோணல் முறையில் செயற்படுத்தினர். பள்ளியில் இந்தி, மைல் கற்களில் இந்தி, இருப்பூர்தி அஞ்சல் நிலையங்களில் இந்தி, தந்தியில் இந்தி, ஆட்சி மொழியில் இந்தி எனப் படிப்படியாக 'எங்கும் இந்தி, எதிலும் இந்தி' என்ர நிலைக்கு அரசு கொண்டு வந்துவிட்டது.

3.எதிர்ப்புகள், கிளர்ச்சிகள்: தமிழர்கட்கு இதனைப் பார்த்துக் கொண்டு வாளா இருக்க முடியவில்லை.

(அ) 1952 ஆகஸ்டு முதல் இருப்பூர்தி அஞ்சல் நிலையப் பெயர்ப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துகளைத் தார் கொண்டு அழிக்கும் இயக்கம் தொடங்கப்பெற்றது.

(ஆ) 1953, 1954 ஆம் ஆண்டுகளில் (ஆகஸ்டு மாதம்) இத்திட்டம் தீவிரப் படுத்தப் பெற்றது.

இந்திமொழி பேசுவோர் தொகை பலத்தைக் காட்டியும், நாடாளுமன்றத்தில் 'பெரும்பான்மை' என்னும் அசுர பலத்தைக் காட்டியும் அரசின் பிடிவாதம் தொடர்ந்தது.

உலகமுழுவதும் ஆங்கில மொழிமூலம் தொடர்பு கொள்ள வாய்ப்பிருந்தும் இந்தி பொதுமொழி என்னும் குறுகிய கண்ணோட்டத்தில் உலாவர முன் வந்துள்ள இந்தி ஆதிக்கவாதிகளைப் பற்றி கி.ஆ.பெ.வி. அவர்கள் வேடிக்கை யாகவும் கருத்தோடும் கூறியது: "பெரிய பூனைக்கு ஒரு துளை செய்த பிறகு குட்டிப் பூனைக்காக வேறு ஒரு சிறுதுளை செய்வது முட்டாள்தனம்; பெரிய சந்து வழியாகவே குட்டிப் பூனையும் வெளியேற முடியும். எனவே இரண்டு துளைகள் செய்தது வீண் வேலை"[4] என்பதாக.

4. புதியதிட்டம்: "தமிழ்நாட்டுக்கு ஆட்சி மொழியாக இருக்க தமிழ் ஒன்றே போதும்; வெளித்தொடர்புகட்கு ஆங்கிலம் போதும்" என்று தீர்மானித்துக் கையெழுத்து இட்ட வர்களில் அறிஞர் அண்ணாவும் அருமை இராஜாஜியும் அடங்குவர். கி.ஆ.பெ.வி இதில் கருத்து வேறுபாடு கொண்டார். அவர் மறையும் வரை இக்கருத்து வேறுபாடு மாறவில்லை.

(அ) தமிழ் அன்பர்களும், இந்தி எதிர்ப்பு இயக்கத் தினரும் அவ்வியக்கத்தின் முன்னோடிகளான திராவிடக் கழகம் தி.மு.க. ஆகியோரும் அவ்வப் போது நடத்தி வந்த மறியல் போராட்டம் இந்திச் சொற்களை அழித்தல் போன்ற முறைகள் இந்தி ஏகாதிபத்தியவாதிகட்குச் செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலாயிற்று.

(ஆ) "மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் மாற்று மொழியாக விளங்கும். இதுபற்றிய முடிவு இந்தி பேசும் மக்களுக்கு விடமாட்டேன்; இந்தி பேசாத மக்களுக்கே

4. பூகவர் விசையை உலகுக்கு உணர்த்திய சர். ஐசக் நியூட்டனுக்குப் பூனை வளர்ப்பது ஒரு விருப்பத் தொழில். அவர் தாயும் குட்டியும் வெளியேற இரண்டு துளைகள் செய்ததாக அவர் வாழ்க்கை வரலாறு கூறும்.

விடுவேன்'' என்று இந்திய முதல்வர் சவகர்லால் நேரு அளித்த உறுதி மொழியை அவரைச் சார்ந்தோரே மதித்ததாகத் தெரிய வில்லை. ஒரு பக்கம் திணியோம் என்று கூறிக் கொண்டே மறுபக்கம் அதனை வலிந்து திணிக்கும் செயலில் இறங்கி விட்டனர்.

*(இ)* இவற்றின் எதிரொலி நேரு தென்னகத்திற்கு வரும் பொழுது மீனம்பாக்கம் விமான நிலையத்தின் முன்பும் இராஜாஜி மண்டபத்தின் முன்பும் கறுப்புக் கொடிகாட்டி கண்டனக்குரல் எழுப்பினர். இதனால் அடிதடிக்குள்ளாகி அவதியுற்றதே பலன்.

*(ஈ)* இதன் பின் 27-4-1960முதல் இந்திய குடியரசு த் தலைவராக இருந்த திரு பாபு இராஜேந்திர பிரசாத் 26-1-65 முதல் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக விளங்கும் என்று அறிவிப்பு செய்தார். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினது போலாயிற்று தலைமைப் பொறுப்பிலிருந்தவர்களின் வாக்குறுதிகள் காற்றில் பறந்தன.

*(உ)* ஆகவே 6-8-60இல் தமிழகம் எங்கும் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி காட்டப் பெறும் என்று கோடம் பாக்கத்தில் தி.மு.க கூட்டிய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தீர்மானிக்கப் பெற்றது.[5] இதனை அறிந்த குடியரசுத் தலைவர் ஐதராபாத்துக்கு வருகை புரிந்து பேசும்போது ''இந்தி பேசா மக்களின் இடர்கள் உணர்ச்சிகள் புறக்கணிக்கப் படமாட்டா என்று உறுதியாக நம்புகிறேன்'' என்ற வாக்கு தந்தார்.

**5. ஆங்கிலத்தின் தடுமாற்ற நிலை:** இந்தி பேசாத மக்களுக்கு ஓரளவு உதவியாக இருந்த ஆங்கிலம் 1959-இல் ஆட்சி மொழியிலிருந்து மாற்று மொழியாகவும் (Alternate Language) பிறகு துணை மொழியாகவும் (Associate Language) படிப்படியாகவும் கீழிறக்கப்பட்டது. வேண்டுமானால்

5. இக்காலத்தில் நான் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணியேற்றுக் கொண்டபடியால் தமிழகத்தில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை நேரில் அறியக் கூடவில்லை. என் முழுக் கவனமும் தெலுங்கர்களை நயந்து கொண்டு தமிழ் வளர்ச்சியிலே சென்றது.

இணைமொழியாக வைத்துக் கொள்ளப்படும் என்றும் வேண்டா வெறுப்பான நிலைக்கு வந்தது.

**6. இந்தி ஆட்சி மொழியாகும் நாள்:** இந்தித் திணிப்பால் ஏற்படும் தீமைகளை அவ்வப்போது மக்களுக்கு எடுத்துக் கூறி எழுச்சி கொள்ளச் செய்துவரும் அமைப்புகளும் இயக்கங்களும் கட்சிகளும் சட்டப்படி 26-1-65க்குப் பிறகு இந்தி ஆட்சி மொழியாகும் எனும் அவலநிலை ஏற்படுவதைக் கண்டு பதைபதைத்தன.

(அ) தி.மு.க. சென்னையில் கூட்டிய (ஜூன் 8, 9, 10-1962-இல்) இந்தி எதிர்ப்பு மாநாட்டில் "இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள மொழிப்பிரிவின் 17வது பகுதியை வெளிப்படையாக அறிவித்துவிட்டு பொதுக்கூட்டத்தில் கொளுத்துவேன்" என்று அறிஞர் அண்ணா அறிவித்தார்.

(ஆ) இதனை 17-4-63ல் சென்னை மெரீனா கடற்கரையில் தாமே நடத்த இருப்பதாகவும் குறிப்பிட்டார். அதனை நடத்த விடாமல் மாநில அரசு (முதல்வர் மீ. பக்தவத்சலம்) தடுத்தது. அவர் வரும் வழியில் கைது செய்ய ஏற்பாடு செய்தார். குதிரைப் படையை ஏவி கூட்டத்தைக் கலைத்தார்.[6]

---

6. காங்கிரசு கட்சியே தமிழுக்கு விரோதமாகச் செயற்பட்டது. ஆங்கில ஆட்சியில் இழைக்கப் பெற்ற பல்வேறு துன்பங்களைவிட தமிழ்ப்பற்றி - காங்கிரசு இழைத்த கொடுமைகள் அதிகம். 'பயணத்திற்குப் பயன்படாத சிண்டி பந்தயக் குதிரைகளும் இந்தியத் தலைவர்களும் ஓர் இனமே' என்று ஒப்பிட்டுக் கூறும் கவிஞர் வாலி,

இவர்கள்-
நிஜக்குதிரைகளல்ல!
மைய
அரசின்
நையாண்டி
மேளத்திற்கேற்ப...
பொது நடனம்
புரியும் -
பொய்க்கால்
குதிரைகள்! (போ.குதி.பக் 155)

என்று வருணிப்பார். வடநாட்டு காங்கிரசுக்காரர்கள் முகச்சுழிப்பிற்கேற்ப ஆட்டம் போடுவர் மாநிலக் காங்கிரசு ஆட்சியாளர். காந்தியடிகள் கூறியவாறு விடுதலை பெற்றதும் காங்கிரசு கட்சியைக் கலைத்திருந்தால் இத்தகைய தாறுமாறான ஆட்சிக்கே இடம் இருந்திருக்காது. இரண்டாவது தேர்தலிலேயே சென்னை மாநிலத்தில் 'பெரும்பான்மை' இராததால் அரசு அமைக்க முடியாமல் (1952) அரசியல் சாணக்கியர் இராஜாஜியின் காலைப் பிடிக்க வேண்டியதாயிற்று!

(இ) தமிழுக்காகப் பலர் தீக்குளித்தனர்; மூட்டைப் பூச்சி மருந்து உண்டு உயிர் துறந்தனர். இந்தக் கிளர்ச்சியில் மாணவர் படையும் பங்கு கொண்டது.

(ஈ) இந்தி அரியணையில் ஏறும் நாளான (26-1-65)ஐ துக்க நாளாகக் அனுசரிக்கும்படி தி.மு.க மக்களைக் கேட்டுக் கொண்டது. இதில் 923 பேர் கைதானதில் மாணவர் 124 பேர்.

(உ) 'தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக்குழு' கூடி (8-2-65) 9-10-65இல் அஞ்சல் நிலையங்கள் முன்பு மாணவர்களை நேரடியாக மறியல் செய்யும்படி பணித்தது.

(ஊ) 11-10-65 அன்று தமிழ்நாடு முழுவதும் இருப்பூர்திகள் நிறுத்தப்பெற்றன.

(எ) ஆங்காங்கே கறுப்புக்கொடி ஏற்றுதல், வாகனங்களை நிறுத்திச் சுவரொட்டிகளை ஒட்டுதல், இந்தி எழுத்துகளை அழித்தல், இந்திநூல்களை எரித்தல், 144 தடையுத்தரவை மீறுதல்-இவை நாடெங்கும் இயல்பான நிகழ்ச்சிகளாகி விட்டன.

(ஏ) இந்தித் திரைப்படங்களைத் தமிழகமெங்கும் காட்ட முடியாத நிலையை மாணவர்கள் உண்டாக்கி விட்டனர். அவர்கள் ஆங்காங்கே கைது செய்யப் பெற்றுக் கொடுமைகளுக்குள்ளாயினர். இதனால் கிளர்ச்சி மேலும் வலுத்தது.

(ஐ) திரு. லால் பகதூர் சாஸ்திரி: (முதல்வர்) வானொலியில் பேசிய சில மணித்துளிகளுக்குள் தமிழகத்தில் நடைபெற்ற அடக்கு முறைகளையும், துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் அறிந்த மைய ஆட்சியிலிருந்த திரு.சி. சுப்பிரமணியமும் திரு. ஓ.வி. அளகேசனும் தம் பதவிகளைத் துறந்தனர்.

(ஒ) அண்ணலின் செயல்: இந்த நிலையைக் கண்டு கி.ஆ.பெ.வி. 26-1-65 அன்று திருச்சி தேவர் மண்டபத்தில் (மேற்கு அரண்சாலையில் உள்ளது) இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டினார். இந்தியை நுழைக்க விட்ட இராஜாஜியும் தம் கருத்தை மாற்றிக் கொண்டு எதிர்ப்பாளர்

களுடன் சேர்ந்து முன்னணியில் நின்றார். இந்தி எதிர்ப்பை முன் வைத்து காங்கிரசு ஆட்சியை ஒழிக்க, ஒன்பது அரசியல் கட்சித் தலைவர்களை ஒன்று கூடச் செய்து திட்டம் வகுக்கச் செய்தார் நம் அண்ணல்.[7]

(ஓ) 1965 சனவரி 26இல் கட்டாய இந்தியை எதிர்த்துத் தடியடி பட்டும், குண்டடி பட்டும், தீக்குளித்தும் உயிர்நீத்த தமிழர்களின் தொகை 100க்கு மேற்பட்டிருக்கும். அக்கொடுமையைக் கண்டு நம் அண்ணல் எதுவும் உண்ணவும் இல்லை; எவருடனும் பேசவும் இல்லை. அந்த நாள் நினைவாக ஒவ்வொரு ஆங்கில மாதம் சனவரி 26இல் உண்ணா நோன்பும் பேசா நோன்பும் பல ஆண்டுகள் கடைப்பிடித்தார்.

(ஔ) இவரை தேசத்துரோகச் சட்டத்தின்கீழ் கைது செய்து வழக்கும் தொடர்ந்தது. திருச்சி மாவட்ட நீதிபதி இவருக்கு 6 திங்கள் சிறைத்தண்டனையும் ரூ. 1000/- அபராதமும் விதித்தார். அபராதமும் கட்டி சிறையிலும் தண்டனையை அநுபவித்து 2 திங்களுக்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்றம் இவரை விடுதலை செய்தது.

(ஃ) அப்போது இவர் ஓர் அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையை அச்சிட்ட அச்சகத்தினர்மீதும், தம் பத்திரிக்கையில் இத்துண்டு அறிக்கை பற்றி செய்தி வெளியிட்ட நாளேடுகளின் மீதும் அரசு பாயத் தவறவில்லை.

7. **பிறபகுதிகளில்:** தமிழகத்தில் நடைபெற்ற கிளர்ச்சி ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளிலும் பரவியது. வங்காளமும் தமிழகத்திற்குத் தோள் கொடுத்தது.

இவற்றை அறிந்த திருமதி இந்திராகாந்தியும், திரு டி.சஞ்சீவய்யாவும் சென்னைக்குப் பறந்தோடி வந்து மாணவர் களையும் தலைவர்கள் சிலரையும் சந்தித்துப் பேசினர். அதிகம் பேசாத காமராசர் இந்த நெருக்கடியிலும் தம் கருத்தைத் தெரிவிக்காமல் வாய் மூடிக் கிடந்தார். மத்திய அமைச்சர்கள்

7. இன்றுள்ள தி.மு.க. ஆட்சிக்கு வித்திட்டதே இம்மாநாடு தான் என்று கருதினாலும் குற்றம் இல்லை.

வாரி வழங்கும் வாக்குறுதிகட்குப் பொருள் இல்லை என்பதை மக்கள் அறிந்து கொண்டனர்.

8. **கிளர்ச்சியால் நன்மைகள்:** மேற்குறிப்பிட்ட நிலை அடுத்த தேர்தலில் பிரதிபலித்தது. தேர்தலில் மாணவர்கள் முன்னணியில் நின்றனர். இதனால் பக்தவத்சலம், காமராசர் சுப்பிரமணியம், அளகேசன் உள்ளிட்ட காங்கிரசுகாரர்கள் படுதோல்வி அடைந்தனர். காமராசரை ஒரு கல்லூரி மாணவர் தோற்கடித்தார். இந்தியை எதிர்த்த தி.மு.க. ஆட்சியினரை வெற்றி வாகைசூட வைத்து அறிஞர் அண்ணாவை முதலமைச்சராகக் கொண்ட தமிழக அரசை அமையச் செய்து விட்டனர், தமிழக மக்கள்!

9. **புதிய திருப்பம்:** தமிழகத்தில் இந்தி ஆதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்தும் வல்லமை படைத்த தமிழக அரசு ஏற்பட்டுள்ளது. இது தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்து அதற்கு உற்ற துணையாக ஆங்கிலம் மட்டும் இருந்தால் போதும் என்று திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது. இனி இந்தி 'வாலாட்டம்' நடைபெறாது என்ற தெளிவான நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் மொழியறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் திருவாயினின்றும்,

> இந்தி எதிர்ப்பெய்கே? இந்நாட் டுணர்வெங்கே?
> முந்தி மொழிமுத் தமிழெங்கே—உந்தி
> வதிவாழ் திருச்சி வதியும் கி.ஆ.பெ.
> விசுவநா தம் இல்லாக் கால்

என்ற வெண்பாவும் பிறந்து அண்ணலின் புகழை இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிலை நிறுத்திவிட்டது.

# 7

# இல்லற நெறியாளர்

**மானிட** வாழ்வில் திருமணம் ஓர் ஆயிரங்காலத்துப் பயிர். மானிட இனம் குன்றாது நடைபெற இறைவனால் வழிவழி வளர்ந்து வருவதற்கு வழங்கப் பெற்ற ஆற்றலைநல்ல முறையில் செயற்படுத்த ஆன்றவிந்த சான்றோர்களால் நெறிப் படுத்தும் முறையே திருமணம். இந்த ஆற்றல் இறைவனால் வழங்கப் பெற்றதாதலின் இதனை நன்கு விளக்குவேன். அறிவியல் அடிப்படையில் இந்த விளக்கம் அமைகின்றது.

நமது உடல் உயிரணுக்களால் ஆனது. ஒவ்வோர் உயிரணுவிலும் இரட்டை நிறக்கோல்கள்[1] (XX, XY என்பது போல்) உள்ளன. ஆனால் ஆணின் விந்தணுக்களிலும், பெண்ணின் முட்டையணுவிலும் ஒற்றை நிறக் கோல்கள் (X, X, Y என்பது போல்) உள்ளன. இவை குழந்தைப் பருவத்தில் பக்குவப் படாத நிலையில் உள்ளன. அஃதாவது இயக்கமில்லாத நிலையில் (dormant) உள்ளன. இவை ஆணின் முன்குமரப்பருவத்திலும், பெண்ணின் பூப்பெய்தும் பருவத்திலும் வளர்ச்சியடைந்து இயங்கும் நிலையை எய்துகின்றன. இந்த இரண்டுவகை ஒற்றையணுக்கள் ஒன்று சேர்வதால்தான் ஒரு புதிய உயிர் தோன்றும். இந்த இரண்டு வகை உயிரணுக்கள் ஒன்று சேர்வது எப்படி? இந்த இயக்கம் இரு பாலாரிடமும் காதலாக-ஓர் அற்புத ஆற்றல்-மலர்கின்றது.

1. நிறக்கோல்கள் - Chromosomes

கலவி நிகழ்கின்றது. இந்த அணுக்கள் இரண்டும் பெண்ணின் கருக்குழலில் (Fellopian tube) சந்தித்து இணைகின்றன. இணைந்த இக் கருவுற்ற அணு சிறிது சிறிதாக நகர்ந்து சென்று கருப்பையின் சுவரில் பதிந்து குழந்தையாக வளர்ச்சி பெறுகின்றது. இஃது எல்லாவுயிர்க்கும் பொருந்தும்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.[2]

என்று ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியரின் நூற்பா குறிப்பிடுவதாகக் கருதலாம்.

இதுவே அக இலக்கியத்தின் தோற்றுவாய்; ஊற்று வாயாகவும் செயற்படுவது. சங்க இலக்கியத்தில் அகப்பாடல் களின் மிகுதியான எண்ணிக்கையும் அப்பாடல்களைப் பாடிய வர்களின் மிகுதியான தொகையும் 'புறத்திணைப் பாடல்களின் தொகையினும், பாடினோர் தொகையினும் மும்மடங்கு மிக்கிருத்தலைக் காணலாம். இதனால் சங்கப் புலவர்கள் அகம் பாடுவதையே சிறந்த புலமையென மதித்திருந்தனர் என்பது புலனாகின்றது.

**தலைமக்கள்:** சங்க இலக்கியங்களில் வரும் தலை மக்களின் பெயர்களைச் சுட்டி உரைப்பதில்லை. இதனைத் தொல்காப்பியர்,

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்.[3]

என்ற நூற்பாவில் வரையறுத்துக் கூறுவர். ஐந்திணைக் காதல் ஒழுக்கங்கள் மண்ணுலகிலுள்ள மக்கள் அனைவரையும் கருதியதாதலின் தனியொருவர் பெயர் சுட்டி உரைக்கப்பெறும் மரபு இல்லை. இதற்குக் காரணம் என்ன? மக்கள் சமுதாயத்தின் எல்லா மாந்தரிடமும் காதல் நிகழ்ச்சிகளில் நல்லன என்று தேர்ந்து மேற்கொண்ட காதல் ஒழுக்கங்களைப் புனையும்

2. தொல். பொருள். பொருளியல் - 27 (இளம்)
3. அகத்திணை - 57 (இளம்)

வரம்புடையது அகத்திணை. எனவே, ஒருவரின் தனிவாழ்க்கையினின்றும் தோன்றாது, சமுதாயத்தின் பலர் காதல் வாழ்வினின்றும் இது தோன்றின்மையின், தனியாரின் பெயரிட்டு வழங்குதல் யாங்ஙனம் பொருந்தும்?

எண்ணற்ற நம்பியரும், நங்கையரும் நாடோறும் சாலையிலும் சோலையிலும் பூங்காவிலும் படக்காட்சிக் கொட்டகையிலும் பிற இடங்களிலும் சந்திக்கின்றனர். யாரோ ஒருவன் யாரோ ஒருத்தியைக் காதலிக்கின்றான். பலரை விலக்கி ஒருவரைத் தேர்ந்து விழையும் இச்சிறப்புப் பார்வை ஆய்தற்குரிய அரிய சிக்கலாகும். எனினும் நம்முன்னோர் இதற்குக் காரணம் காணவும் முனைந்தனர்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப[4]

[பால்-ஊழ்]

என்ற நூற்பாவால் காரணம் காட்டி விளக்குவர் தொல்காப்பியர். நல்லூழியின் ஏவலால் காட்சி நிகழும் என்பது அப்பேராசிரியரின் கருத்தாகும். 'கிழவனும் கிழத்தியும் காண்ப' என்று இருவரையும் எழுவாயாக வைத்துக் காட்டும் சிறப்பால் முன்னதாகக் காதலித்தவர் யார்? என்ற வினாவுக்கு இடம் வைக்கவில்லை என்பது சிந்திக்கத்தக்கது.

இவ்வாறு ஊழ்வலியால் இணைந்து மணந்து கொண்டவரின் இல்வாழ்க்கை அற்புதமாக நடைபெறுகின்றது. குறுந்தொகைத் தலைவியொருத்தி தன் கணவனை நோக்கிக் கூறுவது:

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர் எம் கணவனை;
யான்ஆ கியர்நின் நெஞ்சு நேர்பவளே.[5]

4. களவியல் - 5
5. குறுந் - 49

"மறுமையிலும் நீ என் கணவன்; நானும் நின் நெஞ்சு கவர்ந்தவள்" என்று அமையட்டும் என்கின்றாள்.

இல்வாழ்க்கையின் தலையாய பயன் மக்கட்பேறு. மக்கட்பேறால் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் கைகூடும் என்பதனை அகநானூற்றுத் தலைவியொருத்தி தோழியிடம் கூறுவது:

இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிரதீர் காட்சிச்
சிறுவர் பயந்த செம்ம லோர்எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே வாகுதல் வாய்த்தனம் தோழி,[6]

இப்பாடலில் மக்கட்பேற்றின் பயன் தெரிவிக்கப் பெறுவதைக் கண்டு மகிழலாம்.

இந்த இரண்டினையும் ஒரு சேர வைத்து,

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.[7]

என்ற குறட்பாவில் வள்ளுவப் பெருந்தகை சிறப்பிப்பதைக் கண்டும் களிக்கலாம்.

சங்க இலக்கியங்களில் வரும் தலைவன்-தலைவியரின் வாழ்க்கை குறிக்கோள் நிலையில் அமைந்தது. இந்தக் குறிக்கோளின்படி இயன்றவரை மணமக்கள் அமைய வேண்டும் என்பது திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் நோக்கம்; தமிழ்ச்சான்றோர்களின் நோக்கமும் இதுவேயாகும்.

**திருமண முறைகள்:** இரண்டு முறைகள் இன்றும் வழக்கிலுள்ளன.

---

6. அகம் - 66
7. குறள் - 60

(அ) பழைய முறை: பழங்காலத்தில், தமிழகத்தில் ஒத்த குணம், ஒத்த நிறம், ஒத்த வயது, ஒத்த கல்வி ஆகிய இவற்றை யுடைய காளையும் கன்னியும் ஆகிய இருவரும் பெற்றோர் கொடுக்கக் கொண்டு, வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டு இல்லறத்தை இனிது நடத்தி வந்தனர். பார்ப்பனர்களை வைத்துச் சடங்குகளைச் செய்து திருமணத்தை நடத்துகிற முறை இடைக்காலத்தில் புகுந்த ஒன்று. அம்முறை இன்றும் வழக்கில் உள்ளது. இமமுறைப்படி மணமக்களை வாழ்த்தும் போது "தனம், தானியம், வெகு புத்திர லாபம், தீர்க்காயுசு, சுபமஸ்து" என்று வருகின்றது. இங்ஙனம் வாழ்த்துதல் தவறு என்பது கி.ஆ.பெ.வி. அவர்களின் கருத்து: காரணம் இது சட்டத்திற்குப் புறம்பானதாகப் போய்விட்டது. தனம்-தங்கக் கட்டுப்பாடு; தானியம்-தானியக் கட்டுப்பாடு; வெகு புத்திரலாபம்-குடும்பக்கட்டுப்பாடு, ஆகவே இவ்வாறு முடியாது; கூடாது.[8]

(ஆ) புதிய முறைகள்: பழைய முறை இப்பொழுது மறு மலர்ச்சியடைந்து வருகின்றது. இப்பொழுது தமிழகத்தில் சுயமரியாதைத் திருமணம், சீர்திருத்தத் திருமணம், தமிழ்த் திருமணம், அரசியல் திருமணம், பதிவுத் திருமணம் எனப் பல்வேறு முறைகளில் திருந்திய திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றைக் காணும் கி.ஆ.பெ.வி. அவர்கள் இவையனைத்தும் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு ஒரே முறையில் நடைபெற வேண்டுமென்று விழைகின்றார். தமிழ்ப் பெருமக்களும் இம்முறையை ஏற்று விரும்பவேண்டும் என்பதும் இவர்தம் வேண்டுகோள்.

திருமண வாழ்த்து: (1) திருமணத்தில் வாழ்த்து கூறுவது ஒருவித சடங்காக வளர்ந்து விட்டது. புலவர் வீட்டுத் திருமணம் செல்வர் வீட்டுத் திருமணம் இவற்றுள்ளும் அச்சிட்ட வாழ்த்துமலர் படித்துக்கொடுக்கும் மரபு இன்று எம்மருங்கும் காணப்பெறும் மற்றொரு மரபாகும்.

8. மணமக்களுக்கு - பக் - 11

(2) பழங்காலத்தில் வாழ்த்தும்போது 'பதினாறும் பெற்று வாழ்க' என்று மணமக்களை வாழ்த்துவது வழக்கம். இதில் பதினாறு பிள்ளைகளைப் பெறுவது என்பதல்ல. ஒருவருடைய வாழ்வு பெருவாழ்வாக அமைய வேண்டுமானால் அவர் பதினாறு பேறுகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பது கருத்து, அப்பேறுகளாவன: மாடு (செல்வம்), மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், பொன், பொருள், போகம், புகழ் என்பனவாகும். இவைபற்றி ஒரு தனிப்பாடலும் உண்டு. அஃது இப்போது நினைவில் இல்லை; இருக்கும் இடம் தேடவும் நேரம் இல்லை. எனினும், அபிராம பட்டர் அன்னை அபிராமியை இவற்றைத் தமக்கு அருளுமாறு வேண்டுவதாக ஒரு பாடல் உண்டு.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வன்மையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகட வூரில் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுக்ரபாணி!
அருள்வாமி! அபிரா மியே![9]

என்பதுதான் அப்பாடல்.

9. கி.ஆ.பெ.வி நினைவுமலர் [முதலாம் ஆண்டு] - பக் 19-29

தம் பிறப்பைப்பற்றி நகைச்சுவையாகக் கூறுவார்; ''யாரோ ஒரு நல்லவர் பதினாறு பேறுகளை எண்ணாமல் பதினாறு பிள்ளைகளை எண்ணி என் தாய் தந்தையர்களை வழங்கியதனால், நாங்கள் பதினாறு பிள்ளைகளாகப் பிறந்து விட்டோம். நான்தான் பதினாறாவது பிள்ளை. எனக்குத் தம்பியும் இல்லை; தங்கையும் இல்லை. இக்காலத்தில் இவ்வாறு வாழ்த்துதல் பொருந்துமா? பொருந்தாது?[10]

(3) மூன்றாவதாக வாழ்த்துவதில் ஒரு புதிய முறை உண்டு. புலவர்கள் எல்லாம் 'மலரும் மணமும் போல', 'வானும் நிலவும் போல', 'கரும்பும் சுவையும் போல', 'நகமும் சதையும் போல', 'எள்ளும் எண்ணெயும் போல'.... இப்படி வாழ்த்துகின்றனர். நல்லறிஞர்கள் பலர் 'இராம கிருஷ்ண பரமஹம்சரும் சாரததேவியும் போல', 'இராமனும் பிராட்டியும் போல' என்று வாழ்த்துகின்றனர். அரசியல் தலைவர்களல் சிலர் 'காந்தியடிகளும் கஸ்தூரி பாயும் போல', 'அண்ணாவும் இராணியும் போல' என்று வாழ்த்துகின்றனர் என்று குறிப்பிடுகின்றார் முத்தமிழ்க் காவலர்.

தமது நீண்ட வாழ்வில் பல்லாயிரக்கணக்கான திருமணங்களில் பங்கு பெற்று வருவதாகவும் ''எவராவது ஒருவர் 'நானும் என் மனைவியும் போல் வாழுங்கள்' என்று வாழ்த்தியதாகச் சொல்லக் கேட்டதில்லை; சொல்ல துணிவும் இல்லை'' என்கின்றார். தொடர்ந்து, ''இன்று என் தலைமையில் திருமணம் செய்து கொள்பவர்கள் இருபது ஆண்டுகள் கழித்து அவர்கள் பங்கு கொள்ளும் திருமணங்களில் அவர்கள் மணமக்களை வாழ்த்தும் போது, ''என்னைப் போல, என் மனைவியைப் போல; என்னைப் போல, என் கணவனைப் போல வாழுங்கள்'' என்று வாழ்த்த வேண்டும் என்று' கூறுவார். தொடர்ந்து, ''பார்ப்பனரை வைத்துச் சடங்குகளைச் செய்யும் மணமக்கள் எவ்வளவு தவறுகளைச் செய்தாலும், இந்த நாடு தாங்கிக் கொள்ளும். இம்மாதிரி சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்ட மணமக்கள் ஒரு சிறு தவறு செய்தாலும், நாடு

10. மணமக்களுக்கு - பக் 11

தாங்காது; ஏற்காது. இன்று புதிதாக இல்லறத்தில் வலது காலை எடுத்து வைக்கும் மணமக்கள், இதை உள்ளத்தில் வைத்துத் தம் வாழ்க்கையைத் தொடங்கியாக வேண்டும். சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்கின்றவர்கட்குப் பொறுப்பு அதிகம்'' என்கின்றார்.[11]

தம்மை ஒரு "நாடோடி" என்றும் 70 ஆண்டுகட்கு மேலாக சுற்றிப் பார்த்தவர் என்றும், அறிமுகம் செய்து கொண்டு அவர் கூறும் அநுபவ உண்மைகள்; ''இந்துக்கள் அல்லாத இசுலாமிய, கிறித்தவ, புத்த, சமண, பார்சியக் குடும்பங்களி லெல்லாம் கணவன்-மனைவி சண்டைகள் மிகக் குறைவு. பாழ்பட்ட நம்முடையச் சமுதாயத்தில்தான் கணவர்-மனைவிமார் சண்டைகள் மிக அதிகமாக உள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம், அவர்கள் திருமணக் காலங்களில், அவரவர்களின் மதக் குருமார்கள், 'வாழ்க்கை என்றால் என்ன? வாழ்வது எப்படி?' என்பதை உணர்த்தி, மணமக்களுக்கு அறிவுரையும் கூறி, வாழ்க்கையில் ஈடுபடுத்துகின்றனர்.

ஆனால் நாமோ, அறியாத ஒருவரைக் கொண்டு வந்து வைத்து தெரியாத சடங்குகள் எவை எவையோ செய்து, புரியாத மொழியில் எது எதையோ சொல்லி, வாழ்க்கை என்றால் இன்னதென்று அறிவிக்காமலேயே, அவர்களை வாழ்க்கையில் ஈடுபடுத்தி வருகின்றோம். அதன் விளைவே இது''[12]

கி.ஆ.பெ.வி. நடத்தி வைத்த திருமணங்கள் சுமார் 2500 எண்ணை எட்டியிருக்கும். கடந்த ஐம்பது ஆண்டுகளாக இத்தகைய தமிழ்த் திருமணங்கள் நடத்தி வைத்திருக்கின்றார். இந்த முறை திரு வி.க. தம் மக்களுக்கு நடத்தி வைத்த முறை யென்றும் அவர்கள் நன்றாக இருக்கின்றார்கள் என்றும் பெருமிதம் கொள்ளுகின்றார் முத்தமிழ்க் காவலர். திருமணம் செய்து வைக்கும்போது இவர் கூறும் அறவுரை இயேசு பெருமான் மலையுச்சியில் கூறிய பத்து கட்டளைகள்போல்

11. மணமக்கட்கு - பக் 12-13
12. மேலது - பக் 13-14

இவர்தம் அறவுரை இருபது கட்டளைகளாக அமைகின்றன. அவற்றின் சுருக்கத்தை ஈண்டுத் தருகின்றேன்.

**அறவுரை:**

1. சேற்று நிலத்தில் வழுக்கி வழுக்கி நடக்கின்றவனுக்கு ஓர் ஊன்றுகோல் துணைசெய்வதுபோல, வாழ்க்கையில் வழுக்கி வழுக்கி நடக்கின்றவர்கட்கும் ஓர் ஊன்றுகோல் தேவை. அது தனக்கு முன்பாக இல்லறத்தை நடத்தி வெற்றி கண்ட நல்லறிஞர்களின் வாய்ச்சொல்; அவ்வாய்ச் சொல்லை வாங்கி ஊன்றுங்கள்; வாழ்க்கை வழுக்காது என்று கூறுவார் வள்ளுவப் பெருந்தகை.

> **இழுக்கல் உடையுழி ஊற்றுகோல் அற்றே**
> **ஒழுக்கமுடை யார்வாய்ச் சொல். [415]**

என்பது அவர் வாய்மொழி. 'வாய்ச்சொல்' படித்தவருடைய வாய்ச்சொல், பட்டம் பெற்றவருடைய வாய்ச்சொல், பதவியிலிருப்பவருடைய வாய்ச் சொல், பணக்காரருடைய வாய்ச்சொல் என்று கூறாமல் 'ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லை வாங்கி ஊன்றுங்கள்; வாழ்க்கை வழுக்காது' என்று கூறியுள்ளார். இன்றைய மணமக்கள் இவ்வறிவுரையைப் பின்பற்றி வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.

**இல்லாததும் உள்ளதும்:**

2. ஒருவருக்கு நற்குண நற்செயல்களையுடைய மனைவி வாய்க்கப்பெற்றுவிட்டால் அவனுக்கு என்ன இல்லாவிட்டாலும் எல்லாம் இருக்கிறது என்றும், ஒருவருக்கு நற்குண நற்செய்கைகளையுடைய மனைவி வாய்க்கப் பெறாவிட்டால் அவனுக்கு எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் ஒன்றும் இல்லையென்றும் கூறுவார் வள்ளுவர் பெருந்தகை.

> **இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
> **இல்லவள் மாணாக் கடை. [53]**

என்பது அவர்தம் பொய்யாமொழி. இவ்வாய்மொழியை மணமக்கள் உள்ளத்தில் வைத்து வாழ்க்கை நடத்துவது நல்லது.

**சகிப்புத்தன்மை:**

3. வீட்டுச் சண்டையிலிருந்து நாட்டுச் சண்டை வரை, கணவன் மனைவி சண்டையிலிருந்து காங்கேய நாட்டுச் சண்டை வரை நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணம் இரண்டே. ஒன்று பிறருடைய தேவையை அறிய மறுப்பது; மற்றொன்று பிறருடைய உரிமையை மறுப்பது. எங்கே பிறருடைய உரிமையை ஒப்ப மறுக்கின்றார்களோ அங்கே உடனே தோன்றுவது சண்டைதான். கணவனுடைய தேவையை அறிய மறுத்தாலும் மனைவியினுடைய உரிமையை ஒப்ப மறுத்தாலும், உடனே அங்கு தோன்றுவது சண்டைதான். அச்சண்டை ஒழிய மருந்தும் இரண்டே. ஒன்று விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை; மற்றொன்று சகிப்புத் தன்மை. இதை மணமக்கள் இருவரும் நன்குணர்ந்து வாழ்க்கையை நடத்துவது நல்லது.

**வாழ்வின் ஒளி:**

4. ஆணாகப் பிறந்தவர்கள் எல்லோரும் ஆண் அல்லர்; ஆண்மையை உடையவனே ஆண். பெண்ணாகப் பிறந்தவர்கள் எல்லோரும் பெண் அல்லர்; பெண்மையை உடையவர்களே பெண். இத்தகைய ஆண்மையையும் பெண்மையையும் இன்றைய மணமக்கள் நிலைநிறுத்திக் காட்ட வேண்டும். அப்படிக் காட்டினால் அவர்கள் வாழ்வில் ஓர் ஒளிவீசுவதை அவர்களே கண்டு மகிழ்வார்கள்.

**புகுந்த வீடு:**

பெண்ணாகப் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் பிறந்த குடிப் பெருமையை நிலை நிறுத்தியாக வேண்டும். பிறந்த குடிப்பெருமைகளை எல்லாம் புகுந்த வீட்டில் பேசிக் கொண்டிருப்பதல்ல. இதற்கு வழி அப்படிப் பேசினால், அது பிறந்த குடிக்குச் சிறுமையைத் தான் தேடித்தரும். பிறந்த குடிப் பெருமையை நிலை நிறுத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது புகுந்த குடிப் பெருமையை உயர்த்துவதன்மூலந்தான் முடியும். ஆகவே, இன்றைய மணமக்கள் புகுந்த குடிப்

பெருமையை உயர்த்துவதன்மூலம், பிறந்த குடிப் பெருமையை நிலைநிறுத்தியாக வேண்டும். இது பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும், பெருமை தேடியதாக முடியும். இதனை மணமகள் தன் உள்ளத்தில் வைத்து வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.

### பெண்ணின் கடமை:

5. முதலில் தன்னைக் காத்துக் கொண்டு, பின்னர் தன்னைத் துணையாகக் கொண்ட கணவனைப் பேணி, பிறர் புகழும்படியான வழியில் நடந்து, சோர்வு இல்லாமல், உழைத்து, இல்லறத்தை நடத்துபவளே பெண் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுவார்.

> தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண் [56]

என்பது பொய்யாமொழி. இதனைப் பெண் என்றும் மனத்தி லிருத்தி ஒழுக வேண்டும்.

### ஆணுக்கும் கற்பு:

6, இக்கால மக்களில் சிலர் வள்ளுவர் பெண்களுக்கு மட்டிலும் கற்பை வலியுறுத்திக் கூறி ஆண்களை அடியோடு தவிர்த்து விட்டார் என்று குறை கூறுவர். அது தவறு; உண்மையுமல்ல. ஆண்களுக்கும் கற்பை மிகமிக வலியுறுத்திக் கூறியுள்ளார். அதுவும் பெண்களையே உவமையாகக் காட்டி விளக்கியுள்ளார்.[13]

"ஆண்மகனே, இதோ பெண்மக்களைப் பாருங்கள். அவர்கள் எங்ஙனம் பிறர் துணையின்றித் தங்களைக் காத்துக்

---

13. உவமை அமைக்கும்பொழுது உவமிக்கும் பொருளாகிய உபமேயத்தை விட அதன் இயல்பினைப் புலப்படுத்தும் பொருட்டு எடுத்துக் கூறப் பெறும் உவமை உயர்ந்த பொருளாக இருக்க வேண்டும். இது,

> உயர்ந்ததன் மேற்றே
> உள்ளும் காலை! (உவம். நூற். 3 இளம்)

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியப்படும்.

கொள்கின்றார்களோ, அங்ஙனமே நீயும் கற்பு நெறி வழுவாது நின்று உன்னை நீ காத்துக் கொள்ளாவிடில், உனக்கு ஏதடா பெருமை'' என்று கன்னத்தில் அறைவதுபோல, அழுத்தம் திருத்தமாக வினவுகின்றார்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. [974]

என்பதுதான் அக்குறள். மணமகளும் மணமகனும் இவண் காட்டப் பெற்ற குறள்களையும் நெஞ்சில் நிறுத்தி அவற்றைத் தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவை தவிர,

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. [148]

என்ற குறளையும் சிந்திக்கலாம்.

**உப்பில்லாப் பண்டம்:**

7. திருமணம் ஆகாத ஆணும் பெண்ணும் திருமணத்திற்கு முன் உப்பில்லாப் பத்தியம் இருப்பவர்கள். உப்பை எவ்வளவு பெரிதாகக் கருதுகின்றார்களோ, அப்படித் திருமணத்தை எண்ணியிருப்பர். திருமணத்திற்குப்பின் பத்தியம் முறிந்து உப்பைச் சேர்த்துக் கொள்ளும்பொழுது உப்பைப் பற்றி எவ்வளவு சிறிதாக எண்ணுகின்றனரோ, அப்படியே திருமணம் முடிந்த பின்னரும், திருமணத்தை எண்ணுகின்றனர். ஆனால் திருமணம் எதற்காக என்று மட்டும் எண்ணுவதில்லை. **எப்படியும் வாழலாம் என்பது வாழ்வல்ல; இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்வு.**

**தியாக வாழ்வு:**

8. 'திருமணம்' என்பது மணமக்கள் தாங்கள் மட்டிலும் வாழ்வதற்காக அல்ல; பிறரையும் வாழவைத்து வாழ வேண்டும் என்பதை மணமக்கள் முதலில் உணர்தல் வேண்டும்; பிறகு வாழத் துவங்க வேண்டும். வாழ்வில்

தன்னலமற்ற வாழ்வு என்று ஒன்று உண்டு. அதுவே தலை சிறந்த வாழ்வாகும். இதனைத் 'தியாக வாழ்வு' என்று வட மொழியில் வழங்குவர்.

(அ) **மழை:** மழை மக்கட்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. அதோடு நின்று விடாமல், தானும் ஓர் உண்ணும் உணவாக மாறி உண்பவர்களின் வயிற்றில் அவர்களை வாழவைத்துத் தான் மடிந்து விடுகின்றது. எவ்வளவு பெரிய தியாகம்! இதற்காக அஃது எந்தப் பயனையும் எவரிடமும் எதிர்ப்பார்ப்பதில்லை. 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய மாரி' (211) என்று சிறப்பிப்பர் வள்ளுவர் பெருமான்.

(ஆ) **கீழாநெல்லி:** மஞ்சட்காமாலைக்குச் சிறந்த மருந்து இது. இதனை வேரோடு பிடுங்கி வந்து அனைத்தையும் ஒன்று விடாமல் அரைத்து நோயாளிக்குக் கொடுப்பர். நோயாளி பிழைத்துக் கொள்ளுகின்றான். மருந்துச் செடி பூண்டோடு அழிந்து விடுகின்றது. இவனைப் பிழைக்க வைப்பதற்காகவே அது பிறந்து வளர்ந்தது போன்று காணப் பெறுகின்றது. எவ்வளவு பெரிய தியாகம்!

(இ) **கோழி:** கோழிகளை ஒருவர் விலை கொடுத்து வாங்கித் தம் வீட்டில் வளர்ப்பார். அதற்கு இவர் தீனி போடுவதில்லை. அது பக்கத்து வீட்டிற்குப் போய், அல்லது தெருவிற்குப் போய் அரிசி முதலியவற்றைத் தின்று விட்டு இவர் வீட்டில் வந்து முட்டை இடுகின்றது. இவரையும் இவருடைய பிள்ளைகளையும் தான் முட்டையை நல்கி வளர்க்கின்றது. இறுதியில் தானும் அவர்கட்கு உணவாகி அடியோடு அழிந்து போகின்றது. எவ்வளவு பெரிய தியாகம்! இதற்கு அஃது அடைந்த பலன் ஒன்றுமில்லை.

(ஈ) **ஆடு:** ஆடு இன்னும் ஒரு படி அதிகம் செல்கின்றது. மலைகளிலும் காடுகளிலும் அலைந்து திரிந்து, தானே உணவைத் தேடித் திரிந்து, இவர் வயலைத் தேடிவந்து எரு விடுகின்றது. தன்னை விலை கொடுத்து வாங்கினவரின் உணவு

உற்பத்திக்குப் பெருந் துணை புரிந்து, இறுதியில் அவருக்குத் தன்னையே உணவாகவும் தந்து மடிந்து விடுகின்றது. எவ்வளவு பெரிய தியாகம்! இதற்காக அஃது அடைந்த பலன் யாதும் இல்லை.

(உ) மாடு: மாடு காலமெல்லாம் உழைக்கின்றது. அதன் உழைப்பு மிகப் பெரியது. வைத்திருப்பவர் தருகின்ற தீனி, கழுநீர் இவற்றிற்குப் பதிலாக சாணி, சிறுநீர் தந்து அன்றாடம் கணக்கை நேர் செய்து விடுகின்றது. அதன் உழைப்பு தனி. அதற்கு உழவன் கூலியே தருவதில்லை. அது எதையும் எதிர் பார்ப்பதுமில்லை. உழைத்து உழைத்து ஓடாகி விடுகின்றது. இறுதியில் தன் இறைச்சியையும் நல்கிவிட்டு அழிந்து போகின்றது. இதன் தியாகம் கோழி, ஆட்டைப் போலல்லாமல் இன்னும் ஒருபடி தாண்டுவதை நோக்க நம் உடல் மயிர் சிலிர்க்கின்றது; உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்கி எழுகின்றது. இது மட்டுமா? 'என்பும் உரியர் பிறர்க்கு' (குறள்-72) என்று வள்ளுவர் பெருமான் கூறுவதுபோல் தன் தோலையும் செருப்பாவதற்குத் தருகின்றது. எவ்வளவு பெரிய தியாகம்! இவற்றால் அஃது அடையும் பயன் ஒன்றுமில்லை.

(ஊ) ஊதுவத்தி: இசுலாமியர்கள் இறைவனை வழிபடுங்கால் ஊதுவத்தியைக் கொளுத்தி வைக்கின்றனர். பாத்திமா முடிகின்றது. மக்களுக்கு மகிழ்ச்சி. இந்த நற்செயலுக்கு துணைபுரிந்த ஊதுவத்தி எங்கே? அஃது அடியோடு தன்னை அழித்துக் கொண்டு சாம்பலாகி விடுகின்றது. இது அது செய்யும் தியாகம்!

(எ) மெழுகுவத்தி: கிறித்தவர்கள் மாதா கோயில்களில் மெழுகுவத்தியை ஏற்றிவைத்து வழிபடுகின்றனர். செபம் முடிகின்றது. மக்களுக்கு மகிழ்ச்சி; இறுதியில் மெழுகுவத்தி காணப்பெறவில்லை. இறைவழிபாட்டிற்கு உதவிய அந்த மெழுகுவத்தி தன்னை அடியோடு அழித்துக் கொண்டு விடுகின்றது. அஃது அது செய்யும் தியாகம்!

(ஏ) சூடக்கட்டி: இந்துக்கள் தமது திருக்கோயில்களில் எலுமிச்சை அளவு சூடக் கட்டியைக் கொண்டுவந்து கொளுத்தி

தெய்வத்தை வழிபடுகின்றனர். வழிபாடு முடிகின்றது. மககளுக்கு ஒரே மகிழ்ச்சி. இறுதியில் சூடம் இருந்த இடமே தெரியவில்லை. இறை வழிபாட்டிற்குத் துணை செய்த அது இறுதியில் தன்னையே அடியோடு அழித்துக் கொள்ளுகின்றது. இஃது அது விளைவித்த தியாகம்! அது பணிபுரியும்போது 'தியாகச் சுடராகக்' காட்சி அளிக்கின்றது.

இல்லறவாழ்வில் காலை எடுத்து வைக்கும் மணமக்கள் இந்த நிகழ்ச்சிகளைச் சிந்திக்க வேண்டும். 'பகுத்தறிவுள்ள நாம் பின்பற்ற வேண்டாமா?' என்ற எண்ணம் அவர்தம் மனத்தில் கிளர்ந்தெழ வேண்டும். 'பிறரை வாழவைத்து தாம் வாழ வேண்டும்' என்ற உண்மையின் ஒளி அவர்கட்குப் புலனாக வேண்டும். 'வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல்' என்று இந்த வாழ்க்கையையே நல்லறிஞர்கள் கருதுவது?

**சிக்கனம்:**

9. இல்லற வாழ்வில் மிகவும் வேண்டப் பெறுவது சிக்கனம். எதிலும் சிக்கனம், எல்லாவற்றிலும் சிக்கனம் என்றிருப்பது நல்லது. சிக்கனத்தை (Frugality) சிலர் கருமித்தனம் (Miserlines) என்ற தவறாகக் கருதுகின்றனர். சிக்கனம் வேறு; கருமித்தனம் வேறு. முன்னது வரவேற்கத் தக்கது; பின்னது வெறுக்கத்தக்கது. எது சிக்கனம், எது கருமித்தனம் என்பதை மணமக்கள் உணர்ந்து கொள்வது நல்லது.[14] (அ) பயணங்களில், (ஆ) நகர்ப்புறங்களில் தங்குவதில், (இ) ஊர் சுற்றிப் பார்ப்பதில் எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதை ஊதாரித்தனத்தாலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை சிக்கனத்தாலும் விளக்கிக் காட்டுவர் விசுவநாதம். இம்மூன்றும் நடுத்தர மக்களுக்கு

14. அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக்
கெடும் (479)

என்ற வள்ளுவர் வாய்மொழியையும் மணமக்கள் சிந்திக்கலாம்.

என்பதையும் சுட்டிக் காட்டுவர். இம்மூன்றையும், "தேவைக்கு மேல் செலவு செய்வது பகட்டுத்தனம்; தேவை அளவு செலவு செய்வது சிக்கனம்; தேவைக்கும் செலவு செய்யாதது கருமித்தனம்" ஓர் இலக்கண நூற்பாபோல் விளக்கியும் காட்டுவர்.[15] இதை மணமக்கள் தம் வாழ்நாளெல்லாம் கடைப் பிடிப்பது நல்லது.

**சேமிப்பு:**

10. குடும்ப வாழ்க்கையில் சேமிப்பு இன்றியமையாத ஒன்று. வருமானம் முழுவதையும் செலவு செய்து வாழ்வது நல்லதல்ல. சேமிப்பது குறைவாக இருப்பினும் அது பல துளி பெருவெள்ளமாய் வியக்கத்தக்க முறையில் பெருகி விடும். உணவிலும், உடையிலும், பயணத்திலும், பொருளாதாரத் திலும், சேமிப்பிலும், — ஏன்? குழந்தை பெறுவதிலும் — சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அறிவுடைமையாகும் . சேமிப்பு செழுமை வாழ்வுக்குத் தோரணவாயில்.

**ஒழுக்கம்:**

11. பார்ப்பனரை வைத்து, மந்திரம் கூறி, சடங்குகள் பலவற்றைச் செய்து திருமணம் புரிந்து கொள்கின்றவர்கள், வாழ்க்கையில் எப்படி நடந்து கொண்டாலும் இவ்வுலகம் தாங்கிக் கொள்ளும். தமிழ்த் திருமணம், சீர்திருத்தத் திருமணம் புரிந்து கொள்ளும் மணமக்கள் சிறிது தவறினாலும் இவ்வுலகம் தாங்காது. பழிதூற்றத் தொடங்கிவிடும். அது மணமக்களுக்கு, அவர்களின் பெற்றோர்களுக்கு, அவர்கள் சமூகங்களுக்கு மட்டுமல்ல, தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் பழியாக வந்து முடியும். ஆகவே, சீர்திருத்தத் திருமணம் புரிந்து கொள்பவர்கட்குப் பொறுப்பு அதிகம்.

15. William Make Peace Thackaray என்ற ஆங்கில நூலாசிரியர் Vanity Fair (பகட்டுச் சந்தை) என்ற அழகிய புதினம் ஒன்றைப் படைத்துள்ளார். அதில் பல்வேறு பகட்டாளர்களைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். வாய்ப்பிருப்பின் மணமக்கள் அதைப் படித்து மகிழலாம்.

அவர்கள் பிறரைப் பார்த்து அதன்படி நடந்து கொள்ள லாகாது; தங்களைப் பார்த்துப் பிறர் பின்பற்றுகின்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ''உயிரைக் காப்பதை விட ஒழுக்கத்தைப் போற்றிக் காப்பாற்றியாக வேண்டும்'' என்பது பொய்யாமொழி. மணமக்கள் இதனை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்கவேண்டும்.

**அறம்:**

12. 'அறம்' என்பது கடமை எனப் பொருள்படும். அறம்-31 ஆதுலர்க்கு அன்னம், ஓதுவார்க்கு உணவு, அறவைப் பிணம் சுடுதல், காதோலை, கருகமணி முதலியன. மக்களாகப் பிறந்தோர் அனைவரும் கடமையைத் தவறாது செய்தாக வேண்டும். பலனை எதிர்பாராது செய்தாக வேண்டும்.[16] இரவில் படுக்கப்போகும்போது 'இன்று என் கடமைகளைச் செய்தேன்' என்று மகிழ்ந்து படுக்கவேண்டும். நல்ல உறக்கம் வரும். நோய் நொடி அணுகாது. வாழ்க்கையில் வெற்றியைக் காணலாம். கடமையைச் செய்யத் தவறியவர்களிடம் கவலையும், உறக்கமின்மையும், நோயும், துன்பமும் உறவாடும். 'உண்மையான மகிழ்ச்சி என்பது அவரவர் கடமையைச் செய்வதில் தான் உள்ளது' என்பது நபிகள் நாயகப் பெருமானின் திருவாக்கு. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து வள்ளுவப் பெருந்தகை. ''அறத்தான் வருவதே இன்பம்'' (39) என்று வலியுறுத்தியிருப்பது நினைவு கூரத்தக்கது. இவற்றை மணமக்கள் இடைவிடாது கையாண்டு வருவது நல்லது.

13. 'அறம்' என்பது கொடை என்ற பொருளையும் தரும். இயன்ற வரை எளியவர்க்கு உதவுதல் வேண்டும். பசித்தோர் முகம் நோக்கி மனம் இரங்குதல் வேண்டும். 'பசிப்பிணி மருத்துவன்' என்று கருதி பெறுவது நல்லது. 'ஐயம் இட்டு உண்' என ஔவைப் பாட்டியின் வாக்கை உன்னுக. 'பகுத்துண்டு

16. கீதையும் இதைத்தான் புகட்டுகின்றது. (18:66)

பல்லுயிர் ஓம்புதலும்' (322) 'பழியஞ்சி நடந்து பகுத்துண்டு வாழ்தலும்' (44) நல்வாழ்வுக்குத் துணை செய்யும் என்பது பொய்யாமொழி. "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" (ஆறாம் திருமுறை. பிள்ளைப் பெரு விண்ணப்பம்-62), "இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்" என்பவையும் வள்ளற் பெருமானின் வாய் மொழிகள். "ஈயென்று இரத்தல் இழிவு; அதைக் கேட்போரிடம் இல்லையென்று கூறுவது அதை விட இழிவு' (புறம்-204) என்பது புறநானூறு காட்டும் புது நெறி. இந்த அறநெறியும் அருள்நெறியும் மணமக்கட்கு வழிகாட்டும் வான் மறைமொழிகள்.

**மகள் கொடை:**

14. பெண்ணைப் பெற்றோர் திருமணம் செய்து கொடுப்பதை 'மகட்கொடை' என்பர். பார்ப்பனர் '**கன்னிகா தானம்**' என்று வழங்குவர். இது தாரை வாத்துத் தரப் பெறுகின்றது. மகட்கொடையோடு பொருட்கொடையும் நல்குவர். இதனை முன்னர் (தமிழர்) '**சீதனம்**' என்றனர். இப்போது இக்கொடை வரதட்சணையாகக் கோர வடிவம் கொண்டு பெண்ணைப் பெற்றோரை வெருட்டுகின்றது. இதனை ஒழித்துக் கட்ட இளையோர், முதியோர், சான்றோர் ஒன்று திரண்டு ஒழித்தேயாக வேண்டும். பெண்ணைப் பெற்று வளர்த்து படிக்க வைத்து அறிவாளியாக்கியதற்கு மணமகனாக வருபவன் நன்றி செலுத்த வேண்டியிருக்க, 'பெண்ணை ஏன் படிக்க வைத்தாய்?' என்று கேட்டு **அபராதம்** போடுவது போன்றுள்ளது. ஒரு காலத்தில் இம்முறை பார்ப்பனர்களிடத்து மட்டிலும் அளவோடு நிலவியது. இன்று தமிழர்களிடத்து இது '**விசுவரூபம்**' கொண்டு தமிழ்ப் பண்பாட்டையே சிதைத்து வருகின்றது. இம்முறையை அடியோடு ஒழித்துக் கட்டுவது தமிழ்ச் சான்றோர் கடமையாகும்.

**புரிந்து கொள்ளல்:**

15. வீட்டிலுள்ள முதியவர்கள் கணவனும் மனைவியும் சண்டையிடுவதைப் பார்த்தால் "ஏன் நாயும் பூனையுமாக

அடித்துக் கொள்கின்றீர்கள்?'' எனக் கூறுவதுண்டு. கணவன்-மனைவி சண்டையை நாய்-பூனை சண்டைக்கு ஏன் ஒப்பிடுகின்றனர்? என்பதைப் புரிந்து கொள்ள முடியாத கி.ஆ.பெ.வி. அவர்கள் நான்கு பூனையையும் ஐந்து நாய்களையும் வளர்க்கின்றார். இச்சண்டையை நேரில் பார்த்த பிறகுதான் உவமையின் பொருள் விளங்கியதாகக் கூறுகின்றார்.

நாயைப் பூனையும், பூனையை நாயும் புரிந்து கொள்ள முடியாது. நாய்க்கு மகிழ்ச்சி வந்தால் வாலை ஆட்டுகின்றது. பூனைக்குக் கோபம் வந்தால் வாலை ஆட்டுகின்றது. 'எப்படி ஒன்றையொன்று புரிந்து கொள்ள முடியும்?' என்பது முத்தமிழ்க் காவலரின் வினா.

பூனைக்கு மகிழ்ச்சி வந்தால் தன் காதை நிமிர்த்தி விரைக்கின்றது. நாய்க்குக் கோபம் வந்தால் காதை நிமிர்த்து விரைகின்றது. ''எப்படி ஒன்றையொன்று புரிந்து கொள்ள முடியும்?'' என்பது முத்தமிழ்க் காவலரின் வினா.

இவற்றிலிருந்து நமக்குப் புலப்படுகின்ற உண்மை யாதெனில்: கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவேண்டும். அதுவே இல்லறம் நல்லற மாவதற்கு ஏற்ற வழி'' என்பது.

**குழந்தை வளர்ப்பது:**

16. நம் நாட்டில் குழந்தை வளர்ப்பில் அதிகமான கவனிப்பு இல்லை. குறைவாகக் குழந்தைகளைப் பெறுவதே அவர்கள் நன்றாகக் குழந்தைகளை வளர்க்கத் துணைபுரியும். உணவை அதிகமாகத் தருவதை விட, சத்தான உணவைக் குறைவாகக் கொடுத்து வளர்ப்பது நல்லது. அவர்களைப் புழுதியில் புரள விடாமல், சிற்றினம் சேர விடாமல், தீய சொற்களைப் பேசவிடாமல் மிகவும் பாதுகாப்பாக வளர்த்தாக வேண்டும்.

பிள்ளைகளின் உடலை வளர்ப்பதை விட அறிவை வளர்ப்பதால் நலம் பயக்கும். பள்ளியில் படிப்பதால் மட்டும்

அறிவைப் பெற முடியாது. பெற்றோர்களும் ஆசிரியர்களாக மாறி ஒழுக்கத்தையும் கல்வியையும் நாள்தோறும் கற்பித்து நன்னெறியில் நடத்தியாக வேண்டும்.

குழந்தைகள் தவறு செய்தால் அடித்துத் திருத்துவதை விட அதட்டித் திருத்தி அணைத்துக் கொள்வது நல்லது. தவறு செய்த பிள்ளைகளை ''ஏன் செய்தாய்?'' என்று கேட்டு மிரட்டுவதை விட இனி அவ்வாறு செய்யற்க' என்று அன்போடு அணைத்து வளர்ப்பது நல்லது.

பெற்ற பிள்ளைகட்குப் பொருளைத் தேடி வைப்பதை விட, புகழையும் பெருமையையும் தேடி வைப்பதே பெற்றோர்களின் கடமையாகும். இதில் மணமக்கள் கருத்தைச் செலுத்துவது நல்லது.

**வாழ்வு உயிர்:**

*17. மணமக்களின் வாழ்வு உயர வேண்டுமானால் அவர்கள் தங்கள் உள்ளங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். உள்ளம் உயராவிடில் வாழ்வு ஒருபோதும் உயராது.*

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. [595]

என்பது வள்ளுவம். ''வெள்ளம் உயர உயர மலர் உயரும்; உள்ளம் உயர உயர நீ உணர்வாய்'' என்பது இதன் பொருள். ஆகவே மணமக்கள் தங்கள் உள்ளத்தைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும். உள்ளத்தை உயர்த்திக் கொள்வது என்பது பெருமனம் படைப்பது என்பதாகும். அது தாமும் வாழ்வது, பிறரும் வாழ்வதே பெருவாழ்வு என்பது வள்ளுவர் கருத்து. இவற்றை மணமக்கள் உள்ளத்தே வைத்து வாழத் தொடங்குவது நல்லது.

**ஒத்த உரிமை:**

*18. ஒரு பல்கலைக் கழகத்தில் ஆண், பெண் இருவரும் அறிவியல் பட்டதாரிகள். இருவருக்கும் ஒத்த வயது, ஒத்த குணம், ஒத்த நிறம், ஒத்த உயரம், ஒத்த குலம் அமைந்த*

இருவரும் தங்கள் காதல் திருமணத்திற்குப் பெற்றோருடைய ஒப்புதலையும் பெற்றுவிட்டனர். ஆயினும் இருவரும் இருவேறு கட்சியினரைச் சார்ந்தவரின் பிள்ளைகள். யாரைக் கொண்டு திருமணம் நடத்துவது என்ற குழப்பத்தினால் இரண்டாண்டுகள் கழிந்தன. இறுதியாக முத்தமிழ்க் காவலருக்கு நடத்தி வைக்கும் பொறுப்பு வந்தது. நடத்தி வைத்து ''எல்லாவற்றிலும் ஒன்றுபட்ட நீங்கள் ஒருவருக் கொருவர் ஒத்த உரிமையும் கொடுத்து வாழுங்கள்'' என்று அறிவுரை கூறித் திரும்பினார்.

'ஒத்த உரிமை' என்பதில் கருத்து மாறுபாடு. சிறு சிறு விஷயங்களிலெல்லாம் தகராறு! மணமகனிடமிருந்து கடிதம் வந்தது. 'முத்தமிழ்க் காவலர் அறிவுரையால் வந்த வினை' என்றிருந்தது அதில். ஓர் அஞ்சலட்டையில் ''அடக்கிப் பார்'' என்று எழுதினார். மிரட்டிப் பார்த்தார்; அடங்கவில்லை. மீண்டும் கடிதம் வந்தது. இதற்கு 'அடங்கிப்போ' என்று பதிலிறுத்தார். இது பெரும்பலன் தந்தது. படித்த பெண் அல்லவா? அடக்க அடக்க அடங்காத பெண் அடங்க அடங்க அடங்கிப் போய்விட்டாள். அவர்கள் வாழ்வில் நல்லொளி வீசியது.

இதிலிருந்து ஓர் உண்மை; ''அடங்கிப் பார்க்க வேண்டும்; முடியாது போனால் அடங்கிப் போக வேண்டும். இழுபறி கொண்டிருக்கக் கூடாது. பொறி வண்டியானாலும், இரட்டை மாட்டுவண்டியானாலும் ஒற்றை மாட்டு வண்டி யானாலும் வண்டியை ஓட்டுபவர் ஒருவராய்த்தான் இருக்க வேண்டும். இருவரால் ஓட்டமுடியாது. ஓட்டினாலும் வண்டி சரியாக ஓடாது. அது போலத்தான் இல்லறமும். ஆண் நடத்துவதில் பெண் தவறு கண்டால், குடும்பத்தையும் வருமானத்தையும் பெண்ணிடம் ஒப்படைத்து விட வேண்டும். இதனால் ஆண்டு முழுவதும் போராட்டமோ தொல்லையோ இராது, இல்லறமும் இனிமையாக, அமைதியாக நடைபெறும்.

**கண், காது, வாய்:**

19. திருமணம் நிறைவு பெறுகின்றது. முத்தமிழ்க் காவலரின் அறிவுரை: மணமகனுக்கு நேற்று வரை இரு கண்கள்; இனி அது கூடாது. நாளை முதல் மணமகளின் இரு கண்களையும் பயன்படுத்தி உற்றார் உறவினர்களையும், உலகத்தையும் நான்கு கண்களால் பார்த்து வாழ்வைத் தொடங்க வேண்டும். மணமகளுக்கு நேற்றுவரை இரு காதுகள். இனி அவை போதா. நாளை முதல் மணமகனின் இரு காதுகளையும் பயன்படுத்திக் கொண்டு நான்கு காதுகளால் உற்றார் உறவினரின் செய்திகளையும் உலகின் செய்திகளையும் கேட்டு வாழ்க்கையை நடத்தியாக வேண்டும்.

வாழ்வில் வெற்றி பெற இவ்விரண்டு மட்டும் போதா. மணமகனும் மணமகளும் தங்களின் வாய் இரண்டையும் நான்காகப் பெருக்கிக் கொள்ளாமலும், இரண்டாக வைத்துக் கொள்ளாமலும் ஒன்றாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வில் வெற்றி காண முடியும். கணவன் உண்டால் மனைவி உண்டது போல, மனைவி உண்டால் கணவன் உண்டது போல; கணவன் ஒருவருக்கு வாக்கு கொடுத்து விட்டால் மனைவி வாக்கு கொடுத்தது போல; மனைவி ஒருவருக்கு வாக்கு கொடுத்து விட்டால், கணவன் வாக்கு கொடுத்தது போல; கண்களும் காதுகளும் நான்கு; வாய் நான்குமல்ல, இரண்டுமல்ல, ஒன்று என்று ஆக்கிக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் வாழ்வில் மகிழ்ச்சியைக் காணலாம். இதனை மணமக்கள் ஓர்ந்து உள்ளத்திற்கொண்டு வாழ்வைத் தொடங்குவது நல்லது.

**வாழ்த்து:**

20. வாழ்த்தி திருமணத்தை நடத்தி வைப்பது மட்டும் அல்ல. மேடையிலுள்ளாரும், வந்திருக்கும் தாய்மார்களும் பெரியோர்களும் ஆகிய அனைவரும் மணமக்களை வாழ்த்தியாக வேண்டும். அதற்கு நேரமின்மையால்

கூடியிருக்கும் அனைவரும் வாழ்த்துவதாக அனைவர் சார்பிலும் மணமக்கள் தலைவரின் வாழ்த்து பெறுகின்றனர்.

மணமக்களாகிய இருவரும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனும் மனவளத்துடனுமிருந்து, நன்மக்களைப் பெற்று, இயன்றவரை பல மொழிகளை ஆய்ந்து, தமிழை ஆழமாகக் கற்றறிந்து, நல் மக்களோடு பழகி, நல்வழியில் பொருளீட்டி, சிக்கனத்தையும் சேமிப்பையும் கடைப்பிடித்து, சேமிப்பை நல்ல அறவழிகளில் செலவிட்டு நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய நற்றொண்டுகளைச் செய்து நல்வாழ்வு வாழவேண்டும் என முழுமனத்துடன் வாழ்த்தப்படுகின்றனர்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. [45]**

**மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு. [60]**

**- பொய்யாமொழிகள்.**

8

# மருத்துவ மாமணி

தமிழ் மொழியிலுள்ள அனைத்தையும் அழியாமல் பாதுகாக்கவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடையவர் திருச்சி தந்த செம்மல் விசுவநாதம். அவற்றுள் ஒன்று தமிழ் மருத்துவம். சித்த மருத்துவமும் தமிழ் மருத்துவமும் ஒன்றேயாகும். இம்மருத்துவம் தோன்றிய காலத்தைக் கணக்கிட்டுக் கணிக்க இயலாது. அப்படிக் கணக்கிட்டுக் கூற வேண்டுமானால் தமிழகத்து மண்ணில் செடி கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலம் என்று சொல்லிவைக்கலாம்.

'நாட்டு வைத்தியம்' என்று பொதுவாகக் குறிப்பிடப் பெறுவது மூன்றை. ஒன்று சித்த மருத்துவம்; இரண்டு ஆயுர்வேதம்; மூன்று யுனானி. தமிழ் மருத்துவத்திற்கு மொழி தமிழ்; ஆயுர் வேதத்திற்கு மொழி வடமொழி (சம்ஸ்கிருதம்) யுனானிக்கு மொழி உருது. யுனானினிக்குத் திசை மேற்கு; ஆயுர் வேதத்திற்குத் திசை வடக்கு; சித்த மருத்துவத்திற்குத் திசை தெற்கு.

தமிழ் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கியாழமுமாக இருக்கும். இதனை பசுபம் (பஸ்பம்) என்றும் கஷாயம் என்றும் சொல்வர். ஆயுர் வேதமருத்துவம் பெரும்பாலும் தைலமும் திராவகமுமாக இருக்கும். யுனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் இலேகியமுமாக இருக்கும்.

**பசுபம்:** இது தமிழ் மருத்துவத்தில் மிகவும் புகழ் பெற்றது. இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது. முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாஷாணங்கள் ஒன்பது. இவற்றை முறையே நவலோகம், நவரத்தினம், நவபாஷாணம்[1] என்று கூறுவர். இந்த மூவொன்பது இருபத்தேழையும் பசுமமாக்கும் முறை சித்த மருத்துவத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவமுறைகளில் இவற்றில் சில பசுபமாகச் செய்யப்பெறும். எனினும் அதன் மூலம் சித்த மருத்துவமுறையாகவே அமைந்திருக்கும்.[2]

அலபதி முறையில் ஆங்கிலேயர்கள் இவற்றில் சிலவற்றைப் பசுபமாக்குகின்றனர். ஆனால் விலையுயர்ந்த இயந்திரத்தில் அதிகச் சம்பளம் வாங்குகின்றவர்கள் கண்காணிப்பில் பெரும் பொருட்செலவில் அவை செய்யப் பெறுகின்றன. சித்த மருத்துவ முறையிலோ 'விரட்டி'களைக் கொண்டு மூலிகைச் சாறுகளைத் தடவி, எளிய முறையில், குறைந்த செலவில் இவை அனைத்தும் பசுபமாக்கப் பெறுகின்றன.

**உணவே மருந்து:** சித்த மருத்துவத்தில் உணவும் மருந்தும் ஒன்றாக அமைந்துள்ளமை வியப்பிற்குரியது. 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' (குறள் 942) என்பார் வள்ளுவப் பெருந்தகை. எப்பொழுது? 'உண்ட உணவு செறிமானம் ஆனபிறகு உண்டால்'; 'மருந்து' என்ற அதிகாரத்தில் (95) மருந்தைப் பற்றிப் பேசாமல் உணவைப் பற்றியே பேசுகின்றார். 'மருந்து' என்ற சொல்லுக்கு மருத்துவப்

---

1. இராமநாதபுரத்திற்கு அருகில் 2 கல் தொலைவில் 'நவ பாசாணம்' என்ற தீர்த்தம் (கடல்) ஒன்று உண்டு. அதில் மூழ்கினால் பாவம் கரைந்து விடும் என்பதாக நம்பிக்கை. 1948 (ஏப்ரல் மே)யில் நான் குடும்பத்துடன் திருத்தலப் பயணம் (ஒரு மாதம்) மேற்கொண்டபோது இதில் நீராடியதாக நினைவு.

2. (1941-50) நான் துறையூரில் பணியாற்றிய காலத்தில் உலக ஊழியனார் என்ற புலவர் பவழ பசுபம் செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தார். ஆறு ஆண்டுகள் (1947-1953) அதனைத் தேனில் கலந்து உண்டேன்.

புலவர்களான சித்தர்கள் மிக உயர்ந்த பொருளைத் தந்திருப்பது சிந்திக்கத் தக்கது.

மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தென சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே

என்ற பாடல் இதனை வலியுறுத்துகின்றது. மக்களின் உண்ணும் உணவும் புரியும் செயல்களுக்கு ஒவ்வாமையாலே உடலிலுள்ள வளி, தீ, நீர் (வாதம், பித்தம், கபம்) ஆகிய மூன்றும் தத்தம் இயற்கையளவில் மிகுந்தும் குறைந்தும் நோய் உண்டான காலத்து நம் முன்னோர்கள் அந்நோய்களை வெயிலிற் காய்தல், எண்ணெய் முழுக்கு, பட்டினியிருத்தல், உணவு முறைகளில் மாற்றம் செய்தல் போன்ற இயற்கையானதும் எளிதானதுமான பக்குவங்களால் அவற்றைப் போக்கி வந்தனர்.

இவை போதாதெனில் பச்சிலை, கொடி, வேர், கிழங்கு, பூ, காய், கனி, வித்து முதலானவற்றாலாகிய சாறு, குடிநீர், எண்ணெய், இலேகியம் போன்ற மருந்துகளைக் கொடுத்தனர். இவற்றாலும் தீர்க்கவியலாத நோய்களுக்கு உப்புகள், ரசகந்தக பாடாணங்கள் போன்றவற்றால் நீறு, செந்தூரம் போன்ற மருந்துகள் செய்தனர். அறுவை, குருதி வாங்கல் போன்ற பல முறைகளும் இருந்து வந்தனவாக நூல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இவை தவிர, கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், சுக்கு, திப்பிலி முதலிய கடைச்சரக்குகள் எல்லாம் மருந்து; எள்ளு, கடலை, இலுப்பை, வேம்பு முதலிய எண்ணெய் வகைகளெல்லாம் மருந்து; சுருக்கமாக உரைக்கின் பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் அனைத்துமே மருந்து.[3] மருந்தாக அமைகின்ற இந்த உணவு வகைகளே சித்த மருத்துவ

3. இவை யாவும் ஆயர் பாடியையும் அங்கு வளர்ந்த கண்ணனையும் நினைக்கச் செய்கின்றன.

முறையாகும். தமிழகத்தைத் தவிர பிற நாடுகளில் உணவுப் பொருள்களே மருந்தாக அமைகின்ற முறையைக் காண முடியாது. தமிழகத்துத் தட்ப, வெப்ப நிலைகளுக்கேற்ப தமிழ் மக்களிடையே தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணிலே முளைக்கின்ற செடி கொடிகளே மருந்தாகத் தருவதே தமிழ் மருத்துவ முறையாகும்.

**வீட்டு வைத்தியம்**[4]: செடி கொடிகளைப் பயன்படுத்தும் முறைகள் வீட்டிலுள்ள பெண்களும் அறிந்திருந்தனர். வயதான பாட்டிமார்கட்கு இது அற்றுப்படி. இதனால் இம்முறை 'பாட்டி வைத்தியம்' என்றும் வழங்கப் பெறும். தாய்வழி மகள் செவி வழியாகக் கேட்டு 'கை வைத்தியமாக'ச் செய்யப் பெறுகின்ற ஒரு முறையும் உண்டு. இதுவே சித்த மருத்துவம்; தமிழ் மருத்துவம், வீட்டு வைத்தியம் என்றும் இதனை வழங்குவதும் உண்டு.

(அ) **ஒற்றை மருந்து**: சித்த வைத்தியத்தில் 'ஒற்றை மருந்து' என்றும் சில மருந்துகள் உண்டு. அது பூண்டு ஒரு மருந்து; கடுகு ஒரு மருந்து; வெங்காயம் ஒரு மருந்து; தேங்காய் ஒரு மருந்து. அந்தந்த ஒன்றையும் எதையும் சேர்க்காமல், அரைக்காமல், காய்ச்சாமல், நிறுக்காமல், உருக்காமல் அப்படியே கொடுத்தால் சிற்சில நோய்கள் குணமாகும். இதை வடமொழியில் '**ஏக மூலிகைப் பிரயோகம்**' என்று கூறுவர்.

(ஆ) சில நோய்கள்: இவ்வாறு குணமாகும் சில நோய்கள்.

(i) பாம்பு கடித்தால் வாழைப்பட்டையில் உள்ள சாற்றைப் பிழிந்து கொடுத்தால் உடனே குணமாகும்.[5]

4. 'வீட்டு வைத்தியம்' [illegible] லைப்பில் டாக்டர் டி.எஸ்.எஸ். இராஜன் (விடுதலை பெறுவதற்கு முன் காங்கிரசு அமைச்சா[illegible] ரு நூலை எழுதியிருந்தார் (1944). எளிய முறையில் பொருளை விளக்குவது. அதனை[illegible]த்தாக நினைவு. அவரிடம் நெருங்கிப் பழகினதும் உண்டு.

5. எல்லா வகைப் பா[illegible] கடிக்கும் இது சரி வருமா? நல்ல பாம்பு கடித்தால் விடம் நரம்பில் ஏறும்; கடியுண்டவர் மயக்கமுறுவர். விரியன் கடித்தால் விடம் குருதிக் குழலுள் பாய்ந்து உடல் முழுதும் நீலநிறமாகும். எதை எதற்குக் கொடுப்பது?

(ii) பூரான் கடித்தால் பனை வெல்லத்தை உண்டால் அதனால் உடலில் உண்டாகும் தடிப்பு உடனே மாறும்.

(iii) பிறந்த குழந்தை தவறிப்போய் பெற்ற தாய்க்குப் பால் கட்டி முலைக்குத்து ஏற்பட்டால் மல்லிகைப் பூவை வைத்துக் கட்டினால் உடனே குணமாகும். மல்லிகைப் பூ கிடைக்காத காலங்களில் வாழைப் பிஞ்சை அரைத்துத் தடவிக் குணம் காணலாம்.

(iv) நட்டுவாக்காலி (நண்டு தெறுக்கால்) கடித்தால் கொப்பரைத் தேங்காயை மென்று தின்றால், உடனே குணம் காணலாம்.

இந்த 'ஒற்றை மருந்து' ஒரு வேளைதான். இரண்டாம் வேளை மருந்து தேவை இல்லை. இத்தகைய முறைகள் 96 அண்ணல் எழுதிய 'தமிழ் மருந்துகள்'[6] என்ற நூலில் காணலாம். இந்நூலிலிருந்து முக்கியமானவற்றுள் சிலவற்றைக் காட்டுவேன்.

*(1)* **பொன்னாங்கண்ணி** (பக். 9): இஃது ஒரு வகைக் கீரையின் பெயர். அதை அருந்தினால் உடல் "பொன்னாம் காண் நீ" என்று மாறும் என்பது கருத்து. தனியாகவும் பருப்புடனும் கலந்துண்ணலாம். வாய்க்கும் சுவையானது. 12 நாட்கள் தொடர்ந்து உண்டால் பலன் அதிகமாகத் தெரியும். அஃது அயச்சத்து நிறைந்த அருமையான பொருள். எங்கும் கிடைப்பது.

*(2)* **வயிற்றுக் கடுப்புக்கு** (பக் 12): சப்பாத்திக்கள்ளிப் பழச்சாறும், சீனியும் கலந்து மூன்று நாள் மாலை நேரத்தில் சாப்பிட்டால், வயிற்று உளைச்சல் தீரும். மூன்று நாட்களும் மிளகாய்க் காரம் கண்டிப்பாய்க் கூடாது.

*(3)* ***சிறுநீரில் இனிப்பு*** (பக் 15): எள்ளுப் புண்ணாக்கை இடித்து மண் இல்லாமல் சலித்து எடுத்து, நாட்டுச் சர்க்கரை

6. பாரி நிலைய வெளியீடு. முதற் பதிப்பு மார்ச் 1953. இருபத்தோன்றாம் பதிப்பு 1994.

சிறிது கலந்து சாப்பிட்டால் சிறுநீரில் உள்ள இனிப்பு தொடக்க நிலையிலிருந்தால் மாறும். பாகற்காய் சூப்பும் பயன் தரும்.

(4) நெஞ்சு சளிக்கு: விரல் மஞ்சளை விளக்கிற் காட்டிச் சுட்டு அதன் புகையை மூக்கின் வழியாக உறிஞ்சினால் நெஞ்சு சளி, தலைவலி முதலியன நீங்கும்.

(5) மஞ்சட்காமாலை (பக். 20): நோய்களுள் பொல்லாதவற்றுள் இஃதும் ஒன்று. இந்நோயை முற்ற விடுதல் மூலம் உயிருக்கே ஆபத்து நேரிடக் கூடும். இந்த நோய்க்குக் கை கண்ட மருந்து இது:

| | | |
|---|---|---|
| சங்கம் வேர்ப்பட்டை | - | 1 வராகன் எடை |
| அதிமதுரம் | - | 1/2 பலம் |
| வெங்காயம் | - | 1/2 பலம் |
| சீரகம் | - | 1/8 பலம் |

இந்த நான்கையும் அரைத்து பசுந்தயிரில் — கிடைக்காவிட்டால் எருமைத் தயிரில் — கலக்கி உண்ணவும். காலையில் மட்டும் உண்ண, மஞ்சட்காமாலை நோய் நீங்கும். இச்சாபத்தியம்.

(6) மலம் கழிய (பக். 26): சோவிக் கீரையைக் கொண்டு வந்து இரசம் வைத்து இரவில் குடித்தால் காலையில் கட்டு மலம் கழிந்து, உடல் வலி தீர்ந்து, உடல் கலகலப்பாக இருக்கும்.

(7) தலைவலிக்கு (பக். 30): பச்சைக் கொத்துக் கடலையை வெந்நீர் விட்டு அரைத்து, நெற்றிப் பொட்டுகளில் தடவினால் தலைவலி உடனே நீங்கும். முலைப்பாலையும் நெற்றியில் தடவலாம்.

(8) பல் வலிக்கு (பக். 31): வேளை வேரையும் அருகம் புல்லையும் கசக்கி துணியில் வைத்துப் பல் வலி இடப்புறமிருந்தால் வலது காதிலும், வலப்புறமிருந்தால் இடது காதிலும், 3 சொட்டு மட்டும் பிழிந்தால், வலி உடனே நீங்கும்.

*(9) செரிமானமின்மைக்கு* (பக். 32): ஓமத்தைத் தேய்த்து, உமியைப் போக்கி, அரைத்து பிள்ளைப்பால் அல்லது பசும்பாலில் கலக்கிக் குடித்தால் செரிமானமின்மை, மந்தம், வயிற்றுப்போக்கு முதலியன நீங்கும். பெரியவர்கட்கு 3 தம்படி எடை ஓமமும், குழந்தைகட்கு 1 தம்படி ஓமமும் போதும். பத்தியம் இல்லை. உணவு, அரிசிக் கஞ்சி.

*(10) வீதர் வீக்கத்திற்கு* (பக். 34): மூன்று வழிகள்:

(i) கழற்சிக் கொட்டைகளை உடைத்து அதன உள்ளிருக்கும் பருப்பில் 5 எடுத்து அரைத்துத் தடவினால் வீக்கம் மூன்றே மணித்துளிகளில் வடியும்.

(ii) புறா மலத்தையும் தேங்காய்த் திருவிய பூவையும் கலந்து இருப்பு வாணலியில் போட்டு வறுத்து ஒத்தடம் கொடுத்தால் உடனே வீக்கம் வடியும்.

(iii) தேங்காய்ப்பூவில் புறா முட்டையை உடைத்து ஊற்றி வறுத்து ஒத்தடம் கொடுத்தால் 15 மணித்துளிக்குள் குணத்தைக் காணலாம்.

*தமிழ் மருந்துமுறை அழிவு:* இன்று தமிழ் மருத்துவ முறை பெரும்பாலும் அழிந்து விட்டது. இதற்குத் தமிழ் மருத்துவர்களே ஒருவகைக் காரணமாவர். வறுமை வாய்ப்பட்ட மக்களில் சிலர் தங்களை மருத்துவர் என்று சொல்லியும், தங்களிடமிருப்பது மருந்து என்று சொல்லியும் தவறு செய்தமையால் பொது மக்களின் நம்பிக்கை கெடத் தொடங்கியது. மருத்துவ நூலிலுள்ள கவிதைகளையும், அதில் மறை பொருளாகச் சொல்லப்பெற்ற மருந்துகளின் பெயர்களையும் அறியாமலும் புரியாமலும் இளம் மருத்துவர்கள் பலர் தவறு செய்யத் தொடங்கினர். இதனால் பொது மக்கள் சிறந்த பண்டிதர்களையும், உயர்ந்த மருத்துவர் களையும், அவர்களிடம் உள்ள தகுந்த மருந்துகளையும் ஐயுறத் தொடங்கினர். இவையும் சித்தமருத்துவம் அழியக் காரணமாயின.

சித்த மருத்துவ முறையில் சிறந்து திகழ்ந்த மருத்துவ மேதைகளும், பண்டிதமணிகளும் பலர் தங்களிடமுள்ள உயர்ந்த முறைகளை வெளியிற் காட்டிற்றிலர். பிறருக்குச் சொல்லிற்றிலர். தமக்குப் பிறகு வாரிசாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து சொல்லி வைத்தனர். அரசினருக்கும் அறிவித்திலர்; நூல்களாக எழுதி வைத்திலர். மருத்துவர் மறைய மறைய, ஒவ்வொருவரையும் புதைக்கப் புதைக்க, அவர்களுடன் சித்த வைத்திய முறைகளும் புதை பொருளாயின. புதை பொருள்கள்போல் இவர்களின் கருத்துப் பொருள்களைத் தோண்டி எடுக்க வழியே இல்லை.

**மேலும் காரணங்கள்:** நமது முன்னோர்கள் இத்தகைய தவற்றினை செய்திலர். தாங்கள் கண்டறிந்த அருமையான முறைகளைச் சுவடிகளில் பதிய வைத்தனர்; ஓலைகள் குவிந்தன. சொற்சுருக்கம் கருதி அனைத்தும் கவிதைகளில் அமைந்தன. தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தது. ஆங்கில ஆட்சியினர் இவற்றைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை. தவிர, காலத்தால் பாழ்பட்டன; கடல் கோளின் அழிவிற்குள்ளாயின. கறையான்களும் தின்றன. எஞ்சியிருந்தவற்றையும்[7] மக்கள் அறிவுக்குறையினால் ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம் எனக் கருதி நீரில் விட்டனர்.

**அழிந்து போனவை:** பல்வேறு குறிப்புகளால் அழிந்து போன நூல்களைப் பற்றி அறியமுடிகின்றது. அவை:

1. அகத்தியர் பன்னிரு காண்டம்
2. போகர் எண்ணாயிரம்
3. கோரக்கர் மூவிலைப் பயன் ஆயிரம்
4. கொங்கணவர் - மூவாயிரத்து நூறு
5. கோரக்கர் வெண்பா ஏழாயிரம்

7. இலக்கியங்களைக் காத்த டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் போல் இத்துறையில் காக்க ஒருவரும் பிறக்கவில்லை.

6. பச்சமுனி - ஏழு காண்டம்

7. சிவவாக்கியம் - ஐந்து காண்டம்

8. காசிபர் வண்ணம்

9. உரோம முனி - வண்ணம்

10. இராமதேவர் சந்தப்பா

11. நந்தீசர் சந்தம்

12. சங்குமாமுனி கலித்துறை

13. திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம்

14. பதஞ்சலி ஏழு காண்டம்

15. சட்டமுனி நிகண்டு

16. சட்டமுனி இரண்டாயிரத்து எழுநூறு

17. காலங்கிநாதர் - நாலு காண்டம்

18. போகர் எழுநூறு

முதலியன. இவை யாவும் தமிழகத்துச் சான்றோர்களாகிய சித்தர் பெருமக்களால் தமிழ் மொழியில் தோற்றுவிக்கப் பெற்றவை.

இக்கூறிய அனைத்தும் அண்ணலாரின் 'தமிழின் சிறப்பு' என்ற நூலிலும்[8] 'தமிழ் மருந்துகள்' என்ற நூலிலும்[9] கண்டவை. இவற்றை வெளியிட்டவரும், இக்கருத்துகளை தம் வாழ்நாளில் சொற்பொழிவுகளால் பரப்பியவருமாகிய நம் அண்ணலை 'மருத்துவ மாமணி' என்று குறிப்பிடுவது பொருத்தமல்லவா?

8. மருத்துவர் சிறப்பு - 12 .மருத்துவர் கட்டுரை (பக். 71-78) காண்க. (பாரி நிலைய வெளியீடு)
9. பாரி நிலைய வெளியீடு (முதற் பதிப்பு 1953 இருபத்தோன்றாம் பதிப்பு - 1994)

# 9

# அநுபவ நாயகர்

'அவரவர் பட்டால்தான் தெரியும்' என்பது மக்களிடையே அடிக்கடி நிலவும் ஒரு வாசகம். 'படுதல்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது 'பட்டறிவு' என்ற சொல்[1]. இதுதான் வட மொழியில் 'அநுபவம்' என்று பெயர் பெற்றது. சில சமயம் தூய தமிழ்ச் சொல்லை விட பிற மொழிச் சொற்கள் மக்களிடம் பேச்சு வழக்கில் மிகச் செல்வாக்கு அடைந்து விடுகின்றது. 'தொலைக்காட்சி' என்ற சொல் இருப்பினும் 'சன் டி.வி.' என்ற சொல்தான் பேச்சு வழக்கில் மிகச் செல்வாக்கு பெற்றுள்ளது. 'சன் செய்திகள்' என்று தொலைக்காட்சியில் அடிபடுவதை நோக்கலாம்.

ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டாலும் ஆங்கிலப் பண்பாடு மக்களிடையே ஆழப் பதிந்து விட்டது. 'தமிழ் வழிக்கல்வி' என்று ஒரு சிலர் ஓயாது கூக்குரல் இட்டாலும், அரசும் இதை நடைமுறைப் படுத்துவதில் 'மதில் மேல் பூனை' என்றிருந்தாலும், மக்களில் பெரும்பாலோரிடம் ஆங்கில வழிக் கல்வி மோகம் அசுர வேகத்தில் இருந்து வருகின்றது. இலட்சக்கணக்காகச் செலவு செய்து மருத்துவம், பொறியியல் படிப்பை நாடுகின்றது. கோயில் குருக்கள்

1. 1957-இல் நான் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாக இருந்தபோது ஆறாண்டுகள் கடுமையாக உழைத்து தமிழ்ப் பயிற்றும் முறை என்ற பெரிய நூல் [650 பக்] வெளியிட்டேன். அப்போது 'பட்டறிவு' என்ற சொல் உருவாயிற்று.

தலையில் உச்சிக் குடுமி மறைந்து 'கிராப்பு'த் தலை காட்சி வருகின்றது.

**பண்ணார் கிராப்புத் தலையும் பயனில**
**கண்ணாடி போடாத கண்.**

என்ற 'புதுக்குறளும்' பிறந்து விட்டது. இஃதுடன் இது நிற்க.

அண்ணலின் பேச்சிலும் எழுத்திலும் வரும் அறிவுரைகளும் கருத்துகளும் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இராமல், அவை அநுபவத் தெளிவாக வெளிவரும்போது அவை ஆற்றல் மிகுதியுடன் மக்கள் உள்ளத்தில் பதிகின்றன. அண்ணலின் எல்லா நூல்களிலும் இவை 'இலை மறை காய்களாகத்' தென்பட்டாலும் அடியிற் கண்ட நூல்களில் அதிகமாகத் தென்படுவதைக் காண்கின்றேன்.

1. அறிவுக்கு உணவு (1953)[2]: இந்த நூலிலுள்ள சிறந்த கருத்துகள் சிறு வடிவத்தில் அமைந்துள்ளன. இவை தெறிக்கும் சொற்களால் அமைந்த தெளிவான நல்லுரைகள். கற்பனை உலகத்தை நடைமுறைக்கு ஈர்த்து அமைவதும் இங்கில்லை. பழைய வரலாற்றை இன்றைய வாழ்வுக்குப் பாய்ச்சி இணைப்பதும் இங்கு இல்லை. நடைமுறையை மறவாமல் வாழ்வைக் காக்கும் அநுபவ அறவுரையே இங்கு உள்ளது.

எடுத்துக்காட்டுகள்: சில எடுத்துக்காட்டுகளை ஈண்டுத் தருகின்றேன்.

(1) 'ஏமாற்றம்' என்ற தலைப்பில் வருவது (பக். 7):

யோக்கியன் தன்னைப் போலவே பிறரும் யோக்கியராய் இருப்பர் என எண்ணி ஏமாறிக் கெட்டுப் போகிறான்.

அயோக்கியனும் தன்னைப் போலவே மற்றவர்களும் அயோக்கியர்களாய் இருப்பார்கள் என எண்ணி ஏமாறிக் கெட்டுப் போகிறான்.

2. பத்தொன்பதாம் பதிப்பு (1994). பாரி நிலைய வெளியீடு.

*(2) வஞ்சகர் உள்ளம் (பக். 8): பாலை வனத்தில் புல்லைக் காணலாம்.*

*எங்கு? - அணையருகில்.*

*கோழைகளிடத்தில் வீரத்தைக் கூடக் காணலாம்.*

*எப்போது? - உரிமை பறிபோகும்போது.*

*கார்காலத்து இருளில் வெளிச்சத்தைக் கூடக் காணலாம்.*

*எப்போது? - மின்னும்போது.*

*வஞ்சக மக்களின் உள்ளத்திலுள்ளவற்றை மட்டும் எங்கும், எப்போதும், எவராலும் காண முடியாது.*

*(3) நகைச்சுவை (பக். 9): சிரிப்பது உடல் நலத்துக்கு ஏற்றது என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்து.[3] மக்களைச் சிரிக்க வைக்க நகைச்சுவை ஒரு சிறந்த கருவி. இக்கருவியை விழிப்பாகக் கையாள வேண்டும். இன்றேல், இது தீமையையே விளைவிக்கும்.*

*நகைச்சுவை வேறு; நையாண்டி[4] வேறு. நகைச்சுவை செல்லுகின்ற பாதையில் ஒரு மயிரிழை தவறினாலும் நையாண்டியாகக் காட்சியளித்து விடும். நகைச்சுவை அறிஞர்களை மகிழ்விக்கும்; நையாண்டி மற்றவர்களை மகிழ்விக்கும்.*

*ஒருவன் கூறியது நகைச்சுவையா? நையாண்டியா என்பதை அறிய விரும்பினால் அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவர்கள் அறிஞர்களா? மற்றவர்களா? என்பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.*

*(4) தம்பீ! கவனி (பக். 13):*

**சுறுசுறுப்பாயிரு! ஆனால் படபடப்பாயிராதே!**
**பொறுமையாயிரு! ஆனால் சோம்பேறியாயிராதே!**
**பற்றற்று இரு! ஆனால் காட்டுக்குப் போய் விடாதே!**

---

3. உளவியல் அறிஞர்களின் கருத்து கூடத்தான்.
4. இன்று பெரும்பாலும் பேசும் படங்களில் காண்பது நையாண்டியையே.

இல்லறத்தை நடத்து! ஆனால் காம வெறியனாயிராதே!
வீரனாயிரு! ஆனால், போக்கிரியாயிராதே!
அன்பாயிரு! ஆனால் அடிமையாயிராதே!
கொடையாளியாயிரு! ஆனால் ஓட்டாண்டியாயிராதே!
சிக்கனமாயிரு! ஆனால் கருமியாயிராதே!
இரக்கம் காட்டு! ஆனால், ஏமாறிப் போகாதே!

*(5)* தமிழ் மகனே! (பக். 15):

உனது மொழியைத் 'தமிழ்' என்று கூறு!
உனது கலையைத் 'தமிழ்க்கலை' என்று சொல்!
உனது பண்பை 'தமிழ்ப்பண்பு' எனக் கருது!
நீ 'தமிழன்' என நினை! மறவாதே!
மறந்தால் உனக்கு வாழ்வில்லை!

*(6)* எது? (பக். 19, 20):

துன்பத்திற்குப் பிறப்பிடம் எது?

இன்பத்திற்கு அழிவிடம் எது?

தோல்விக்கு பிறப்பிடம் எது?

வெற்றிக்கு அழிவிடம் எது?

தீமைக்குப் பிறப்பிடம் எது?

நன்மைக்கு அழிவிடம் எது?

வறுமைக்குப் பிறப்பிடம் எது?

வாழ்விற்கு அழிவிடம் எது?

*விடை: சோம்பல்.*

*(7)* நாட்டை அழிக்கும் அறுவர் (பக். 21):

நாணயமில்லாத வியாபாரி

நேர்மையில்லாத அரசியல்வாதி

ஒழுக்கமில்லாத சீர்திருத்தவாதி

உண்மையில்லாத எழுத்தாளி

கொள்கையில்லாத பேச்சாளி

அறிவில்லாத படிப்பாளி

ஆகிய அறுவரும் நாட்டை அரித்துத் துன்புறுத்தும் நல்ல செல்லுப் பூச்சிகளாம்.

*(8) தமிழரின் பண்பு (பக். 22):*

அறத்தின் வழி நிற்றல்

ஆண்மையில் உயர்தல்

இன்பத்தில் திளைத்தல்

ஈதலில் சிறத்தல்

உள்ளத்தில் தெள்ளியராதல்

ஊக்கத்தில் தளராதிருத்தல்

எவரையும் தமராய்க் கொள்ளல்

ஏற்றத்தாழ்வின்றி வாழ்தல்

ஐயம் திரிபறப் பேசுதல்

ஒழுக்கத்தைக் காத்தல்

ஓரஞ் சாராது நிற்றல்

ஔவியம் தன்ன அகற்றல்

இவை செவ்விய தமிழரின் பண்பு.[5]

*(9) மகிழ்ச்சி (பக். 24):*

வெற்றியும் தோல்வியும் பாராமல், புகழும் வசையும் எண்ணாமல், கடமையைச் செய்து மகிழ்வதுதான் இவ்வுலகில் உண்மையான மகிழ்ச்சியாகும்.

5. தமிழுக்கு உயிரெழுத்து போல இவை தமிழருக்கு உயிரானவை.

விதி என்பது ஒன்று உண்டு. அது நன்றாய் விளையாடும் ஒரு விளையாட்டுப் பிள்ளை. முயற்சி என்ற வலிமை பெற்றுள்ள மனிதன், ஆயுதம் எடுத்து அதனுடன் சண்டைக்குப் போக வேண்டிய அவசியமும் இல்லை! கையையே ஆயுதமாக உபயோகிக்க வேண்டிய தேவையும் இல்லை. முயற்சியுடையாரின் ஆண்மை நிறைந்த ஏளனச் சிரிப்பு ஒன்றே அதனை வெல்வதற்குப் போதுமானது.[6]

*(10) **வள்ளுவர்** (பக் 31):*

***மடாதிபதிகளுள்*** *பலர் துறவியர்.*

**இளங்கோவும்** தொல்காப்பியரும் துறவியரும் புலவரும் ஆவர்.

***பட்டினத்தார்***, *தாயுமானவர், இராமலிங்க ஆகிய மூவரும் துறவியரும் புலவரும், ஞானியரும் ஆவர்.*

***திருப்பராய்த்துறை*** *சித்பவானந்த அடிகளைப் போன்றவர் துறவியரும் புலவரும் ஞானியரும் தொண்டரும் ஆவர். ஆனால்,*

**வள்ளுவரோ** *துறவியர், புலவர், ஞானியர், தொண்டர் மட்டுமல்லர், வாழ்ந்து வாழ வழி வகுத்துத் தந்த இல்லறத்தாரும் ஆவர்.*

இங்ஙனம் 151 அறவுரைகளைக் கொண்டது. 'அறிவுக்கு உணவு' என்ற நூல். அநுபவக் களஞ்சியமாகத் திகழ்வது.

2. **எண்ணக் குவியல் (1954)**[7]: இந்நூல் 'தமிழ்நாடு' இதழ்களில் அவ்வப்போது எழுதி வெளியிடப் பெற்ற எட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு. கட்டுரைகள் ஒவ்வொன்றும் நாட்டை, மொழியை முன்னிறுத்தி எழுப்பெற்றது. இத்தொகுப்பு ஆடவர் மகளிர் அனைவருக்கும் தேவையானது; இன்றியமையாதது. அவற்றைப் படித்துப் பயன் பெறுவது நல்லது.

6. 'இடுக்கண் வருங்கால் நகுக' (குறள் - 621) மகிழ்வதனால் மனத் தளர்ச்சி குறைகின்றது. அதனால் தடையுற்ற தொழிலைச் செய்து வெற்றி பெறுவதற்கும் வழி அமைகின்றது.

7. பதினோராம் பதிப்பு (1993). பாரி நிலைய வெளியீடு.

இந்நூலில் சில பொறுக்குமணிகளை ஈண்டுத் தருகின்றேன்.

(1) முடத்தெங்கு (முதல் கட்டுரை) இது பாட்டனுக்கும் பேரனுக்கும் நடைபெறும் உரையாடல் முறையில் அமைந்துள்ளது.

''நெல்லிற்பிறந்த பதர்களைப் போல் மனிதருள்ளும் பதருண்டு. அவர்கள் மனிதப் பதர்கள் என்றும் வழங்கப் படுவார்கள். விரிவு எதற்கு? குரங்கும் கோட்டானும் நாயும் நரியும் கூட மனிதருள் உண்டு என்றால் முடத்தெங்கு இருப்பதில் வியப்பென்ன இருக்கிறது?'' (பாட்டன் பக். 9)

''தன்னைப் பெற்ற தந்தையைத் தளர்ந்த வயதில் தள்ளாட விட்டுவிட்டு, மாமனார் வீட்டோடு மகிழ்ந்து வாழும் மகனும் ஒரு முடத் தெங்குதான்'' (பாட்டன் - 9)

''நான் முடத்தெங்காக வாழப் போவதில்லை; மற்றவர்களையும் முடத்தெங்கலாக வாழ விடுவதில்லை; யானும் முடத்தெங்குகளைத் தோற்றுவிப்பதுமில்லை என இன்று உங்கள் முன் உறுதி கூறுகின்றேன். என்னையும் என்னைப் போன்ற இளைஞர்களையும் வாழ்த்துங்கள்'' (பேரன் - பக் 18)

(4) ஆமை (பக். 24):

''ஒருமையில் ஐந்தடக்கும் ஆமை'' (குறள் - 126) என்பது வள்ளுவம். இது கண்ணுக்குப் புலனாகும் ஆமை. கண்ணுக்குப் புலனாகாத ஆமை என்று ஒன்று உண்டு. அஃது' ஆற்றாமை. இந்த ஆமை வாழும் ஆறு வெண்ணாறுமன்று; வெட்டாறு மன்று; பாலாறுமன்று; பெரியாறுமன்று. இது வாழும் ஆறு அழுக்காறு ஆகும்.

பிற ஆறுகளின் இரு கரைகளிலும் கோட்டுப்பூ, கொடிப்பூ, செடிப்பூ ஆகிய பல வகைப் பூக்கள் பூக்கும். இந்த ஆற்றின் இருகரைகளிலும் 'எரிப்பு' ஒன்று மட்டுமே பூக்கும்.

ஆற்றாமை, அழுக்காறு, எரிப்பு என்பவை 'பொறாமை' என்பதைக் குறிக்கும் சொற்கள்.

'அமீனா புகுந்த வீடும் பொறாமை புகுந்த வீடும் உருப்படா' என்பது உண்மை. பொறாமை புகுந்த தெரு, சிற்றூர், நகரம், நாடு என்பவை கேடு அடையும்.

எத்தனையோ மன்னர்கள், எத்தனையோ நாடுகள், இயக்கங்கள், சமூகங்கள், அமைச்சரவைகள் ஆகியவற்றில் இந்த ஆமை புகுந்து நாசமாக்கியுள்ளது.

இந்த ஆமை பேராசைத் தண்ணீரில் வாழுமேயன்றி பெருந்தன்மைத் தரையிலே வாழாது. ஆமை தரைக்கு வந்தால் மடியும். பொறாமை பெருந்தன்மைக்கு வந்தால் மடியும்.

ஆகவே, நாட்டின் நலனைக் கருதி மக்கள் தங்கள் இருப்பிடங்களில் இல்லாமை தோன்றாமையும், தோன்றின் இருக்க இடமில்லாமையையும் செய்ய வேண்டியது இன்றியமையாததுமாகும்.

இந்த ஆமையை நேரடியாக ஒழிக்க இயலாவிட்டால் குறுக்கு வழியால் ஒழிக்கலாம். அது வைரத்தை வைரத்தால் அறுப்பது போல ஆமையை ஆமையால் அழிப்பதாகும் — இந்த ஆமைக்குப் பகையாமைகளும் உள்ளன.

அவை:

இம்மையினில் தீமைகளை எண்ணாமை; எக்காலும் பொய்மைதனைச் சொல்லாமை; வஞ்சகத்தால் பிறர் பொருள்களைக் கவராமை; வலுவிருந்தும் நெறியுடைமை தவறாமை; கள்ளத்தால் கொடுமையினைச் செய்யாமை; கண்ணற்றோர் உரிமைகளைப் பறியாமை ஆகியவையே பகை ஆமைகளேயாம்.

இந்த ஆமைகள் எவரையும் பகையாமை என்ற ஆழமான உள்ளத்தில் தான் வாழும்.

தீண்டாமைப் படுகுடியில் பிறந்து, பொறாமைப் புழுச் சேற்றில் புரண்டு, நியாயச் செயல்களில் உருண்டு ஆதரவு இல்லாமல் அழிந்த மக்களை அதிகமாகக் கொண்ட நம் தமிழ்நாடு - சுதந்திரம் பெற்றும் பொறாமையால் சுழன்று

அல்லலுற்று அவதிப்படும் நம் தமிழ்நாடு - வாழ வேண்டும் என்றால் அதற்கு வழி ஒன்றே ஒன்று உண்டு.

அது எந்த வழி? "அது இந்நாட்டில் சீர்திருத்தக் குளம் ஒன்றை வெட்டி, அதனுள் தீந்தமிழ் ஆற்றதனைக் கண்டு, நல்லொழுக்க நீரை நிறையச் செய்து, என்றும் நன்மை விளையும் மலர்தனையே விளைத்து, பார் முழுதும் அந்நீரைப் பருக, அதனுள் பகையாமைதனை வளர்த்து வாழ்வோம்" என்பதேயாகும்.

இந்த "ஆமை விளையாட்டால்" சிறுவர்க்குச் சுவையாக வழிகாட்டுவதுபோல் வளர்ந்தவர்கட்கும் வழி காட்டும். கலைமாமணியை வாழ்த்தி இத்துடன் இந்நூலை நிறைவு செய்வோம்.

*3.* **ஐந்து செல்வங்கள்** (**நவம்** - *50*)[8]: தமிழ் மேடையுலகிலும் தமிழ்த்தாள் உலகிலும் சிறப்புடன் திகழும் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் எழுதிய ஐந்து கட்டுரைகள் '**ஐந்து செல்வங்கள்**' என்ற அழகிய திருநாமத்தோடு வெளி வந்த நூல். இவரே ஒரு செல்வர். 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்'. இந்நூலால் நம் அண்ணல் தமிழர்களாகிய செழுங் கிளையைத் தாங்குகின்றார்.

இவர் காட்டும் ஐந்து செல்வங்கள்: (1) தாய்ச் செல்வம்; (2) சிந்தனைச் செல்வம்; (3) கிழட்டுச் செல்வம்; (4) உடல் செல்வம்; (5) திருச்செல்வம் என்பவையாகும்.

(1) **தாய்:** செல்வம் பலவகைப்படும். 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும்' என்று வாழ்த்துவதில் 'பதினாறு பிள்ளைகள்' என்பது பொருளல்ல. அது மனை, மனைவி, மக்கள், தாய், நெல், நீர், நிலம், கால்நடை, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, பொன், பொருள், போகம் என்பவையாகும்.

8. இதன் பதினான்காம் பதிப்பு (திசம்பர் 1991). பாரி நிலைய வெளியீடு.

இந்தப் பதினாறிலும் சிறந்தது தாய் செல்வம். பிற செல்வங்களை இழந்து விடுவோமானால் முயன்றால் அவற்றைத் திரும்பப் பெற்று விடலாம். தாய்ச் செல்வத்தை இழந்து விட்டால் அதனை எவராலும் எவ்விதத்திலும் பெற முடியாது. இதனை வள்ளுவர், பாவேந்தர், மணிவாசகர் போன்ற பெரியார்களின் கூற்றுகளை வைத்து தம்பிக்கு விளக்குவர். 'தம்பி' என்பது அண்ணலுக்கு இளைய அனைவரும் அவருக்குத் தம்பியரே.

*(2) சிந்தனைச் செல்வம்:* இஃது அண்ணனும் தம்பியும் உரையாடுவதுபோல் அற்புதமான உரையாடலை அமைத்து சிந்தனை அனைவர்க்கும் ஓர் இன்றியமையாத செல்வம் என்பதனை விளக்குகின்றார் நம் அண்ணல்.

"பேசுவது குறைவாக இருக்கட்டும். கேட்பது அதிகமாக இருக்கட்டும். கேள்வி ஒன்றுதான் சிந்தனைக்குக் கருவூலமாக இருந்து வருகின்றது. வள்ளுவரும் 'செல்வத்துள் எல்லாம் தலையாய செல்வம் செவிச் செல்வம்' என்று அறுதியிடுவார்."

"சிந்தித்தால் யாவும் நன்கு விளங்கும். உண்மையைக் காண, சிந்தனை ஒரு சிறந்த கருவி. திருவள்ளுவர் செவியைச் சிந்தனை என்றது எல்லோருடைய செவியையும் அல்ல. சிந்திக்கும் ஆற்றலுடைய மக்களின் செவியை மட்டுமே. சிந்தனையற்ற மக்களின் செவியானது செல்வமும் அல்ல; செவியுமல்ல; அஃது ஒரு துளை."

என்பவை இக்கட்டுரையின் மூலக்கருத்துகள்.

*(3) கிழட்டுச் செல்வம்:* இக்கட்டுரையும் ஓர் அற்புதமான உரையாடலாக அமைந்துள்ளது. இதில் பங்கு பெறுபவர்கள் ஒரு பாட்டி, பேத்தி கண்ணம்மாள், பக்கத்துச் 'செல்லம்' என்ற ஒரு சிறுமி. இதில் புலனாகும் உண்மை.

"கிழடுகள்தாம் நம் நாட்டின் உயர்ந்த செல்வங்கள். அவர்களிடம் நிறைந்துள்ள அநுபவக் குவியல்கள் எதிர்காலக் கிழடுகளாகிய நமக்கு இப்போது தேவை. கிழட்டுச்

செல்வங்களை இழந்தால் நாம் ஒரு நற்செல்வத்தை இழந்தவர் களாவோம்.

விரிவஞ்சி மற்ற இரண்டையும் காட்டவில்லை.

4. *ஆறு செல்வங்கள் (ஆகஸ்டு 64):*[9] இந்நூல் (1) கல்விச் செல்வம் (2) கேள்விச் செல்வம், (3) அருட்செல்வம், (4) பொருட்செல்வம், (5) அறிவுச் செல்வம், (6) மக்கட் செல்வம். முத்தமிழ்க் காவலர் தேனீயனையர். தாம் தேர்ந்து பயின்ற நன்னூற் பொருள்களை வகைப்படுத்திச் சின்னூல் உணர்ந்தாரும் கற்றுப் பயன் பெறும் வகையில் நூல் வடிவமாக்கித் தந்துள்ளார். உருவிற் குறியதாயினும், உறு பயன் அளிப்பதில் 'தானே உவமை தனக்கு.' இஃது அறிவின் களஞ்சியம். தெவிட்டாத தேன் பிளிற்றும் தேனடை.

*(1) கல்விச் செல்வம்:* தமிழ் இலக்கியத்தில் கல்வி பற்றியும் அதன் தொடர்பாக உள்ளவை பற்றியும் காணப் பெறும் கவிதைகளின் கருத்துகளை அழகிய எளிய உரைநடையில் தந்துள்ளார் அண்ணல். கல்விச் செல்வத்தின் பெருமையை ''ஈடு இலாச் செல்வம்'' என்பார் திரு வி.க. 'கேடில் விழுச்செல்வம் கல்வி' (குறள் - 400) என்பார் நம் வள்ளுவப் பெருந்தகை.

ஒரு நாட்டின் மன்னனுக்குப் பிற நாடுகளில் அவ்வளவு சிறப்பு இராது. ஆனால் கற்றோர்க்குச் சென்றவிடம் எல்லாம் சிறப்பு. பொருட்செல்வம் அனைத்தையும் அதை உடையவனே வழி நடத்துவான். கல்விச் செல்வம் ஒன்று மட்டுமே அதனை உடையவனை வழி நடத்தும். இப்படிப் பல கருத்துகளைக் கொண்டவை.

இளைஞர்களை நோக்கி அமைந்த தால முடிவு அவர்கட் கேற்றவாறு அமைகின்றது. ''படி, நன்றாகப் படி; வாழ்வதற்காகவே படி; படிப்பதற்காகவே வாழ். எல்லாவற்றையும் படிக்காதே. படிக்க வேண்டியவற்றை மட்டும் படி. படித்து, அறிந்தவற்றைச் சிந்தித்து உணர்.

9. இதன் ஆறாம் பதிப்பு 1994இல் வெளிவந்தது. பாரி நிலைய வெளியீடு.

நல்லதைக் கொள். பின் அப்படியே நட. ஏனெனில் கல்வியின் குறிக்கோள் அறிவை அடைவது மட்டுமல்ல. அன்பையும் அருளையும் பண்பையும் ஒழுக்கத்தையும் பெற்று நல்வாழ்வு வாழ்வது ஆகும்.''

*(2)* **கேள்விச் செல்வம்:** கேள்வியும் ஒரு செல்வம். ''கற்றலில் கேட்டலே நன்று''. இதனை,

> **செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
> **செல்வத்துள் எல்லாம் தலை [411]**

என்ற வள்ளுவம் மெய்ப்பிக்கும்.

''கேள்விகளுக்கு விடையளிப்பதில் வக்கீல்களும் டாக்டர்களும் மிகுந்த விழிப்பாக இருத்தல்வேண்டும். அவர்கட்கு உண்மைத் தெளிவாகத் தெரிந்திருந்தாலும் அவற்றை வெளிப்படையாகக் கூறாமல் சிறிது சுற்றி வளைத்துக் கூறுவதே நலமாக இருக்கும். ''உயிர் போய் விடும்'' என்று கூறிய கேசுகள் பிழைத்துக் கொண்டதால் கெட்டுப் போன டாக்டர்களும், ''தோற்றுப் போகும்'' என்று கூறிய 'கேசுகள்' வெற்றி பெற்றதால் அழிந்து போன வழக்குரைஞர்களும் பலர் உண்டு.

''வாய்க்கு இரண்டு கதவுகள் இருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் மூடி வைப்பதற்கு. காதுகளுக்குக் கதவுகள் இல்லாமல் இருப்பது ஏன் தெரியுமா? எப்போதும் கேட்டுக் கொண்டிருப்பதற்கு. வாய் ஒன்றும் காது இரண்டுமாக அமைந்திருப்பது ஏன் தெரியுமா? குறைவாகப் பேசு; அதிகமாகக் கேள்' என்பதற்கு! இன்றைய தினம் உயர்ந்த அறிஞர்களாகவும் சிறந்த செயலர்களாகவும் உள்ள தலைவர்களெல்லாம் குறைந்த பேச்சு உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.''

''காதுக்கும் வாய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வாய் நல்லதைச் சொல்ல வேண்டுமானால் காது நல்லதைக் கேட்டிருக்க வேண்டும். வாய் வணக்கமாக இன்னுரைகளைக் கூற வேண்டுமானால், காது இணக்கமான நல்லுரைகளைக்

கேட்டிருக்க வேண்டும். அதிகம் கூறுவானேன்? காது கேட்க முடியாதபோது வாயால் பேச முடியாது எனக் கூறிவிடலாம்.

"ஆகவே கேள்விச் செல்வத்தைப் பெறு; அதைக் கேளாமற் கேட்டுப் பெறு. கேட்டுத்தான் பெற வேண்டும் என்ற நிலை வந்து விட்டால் மெதுவாகக் கேள். அதிலும் ஒழுக்க முடையவர்களிடம் மட்டுமே கேள். அவர்களிடமிருந்து வரும் விடையானது சேற்று நிலத்திலே வழுக்கி நடக்கிறவனுக்கு ஊன்று கோல் துணை செய்வது போல் உன் வாழ்க்கைப் பாதையில் வழுக்காது நடக்க உயர்ந்ததோர் ஊன்றுகோலாக நின்று உதவும்."

"எப்()பாழுதும் நல்லவற்றைக் கேள். அல்லது எவ்வளவாவது நல்லனவற்றைக் கேள். அவ்வளவு உனக்குச் சிறப்பும் உயர்வும் உண்டு. 'எனைத்தானும் நல்லவை கேட்க' (குறள் - 418) என்ற வள்ளுவத்தைச் சொல்லிக் கொண்டிரு."

இவை அண்ணலின் அறவுரைகள். ஏனைய நான்கு செல்வங்களும் விரிவஞ்சி விடப் பெற்றன.

5. **மாணவர்களுக்கு (1988)[10]:** 1987-இல் காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய விழாவில் பேசிய பேச்சும்[11] அதற்குச் சில ஆண்டுகட்கு முன்னர் திருச்சி புனித சிலுவைக் கல்லூரி ஆண்டு விழாவில் பேசிய பேச்சின் குறிப்புகள் அடங்கியது. "ஒழுக்கக் கேடுகளை வெளியிடும் திரைப்படங்களைப் பார்த்தும், ஒழுக்கக் கேடுகளை எழுதும் கிழமை இதழ்களைப் படித்தும் கெடுகிற மாணாக்கர்களில் சிலரேனும் இந்நூலைப் படித்துத் திருந்துவார்களாயின் மகிழ்வேன்" என்பது அண்ணலின் எதிர்பார்ப்பு.

10. இதன் இரண்டாம் பதிப்பு (1993) பாரி நிலைய வெளியீடு.

11. பள்ளியின் தலைமையாசிரியர் இந்த ஒரு மணி நேரப் பேச்சை ஒலிப்பதிவு செய்து கொடுத்ததால் பேச்சு அப்படியே அமைந்தது.

இதிலுள்ள சில சுருக்கமான கருத்துகள்.

கல்வி வழியே மாண்புடையவர்களாக ஆக்கும் பருவமே மாணாக்கப் பருவம். இப்பெருமை இப்பருவத்தில் தான் இருக்கும். இதற்கு முன்பும் இராது. இப்பருவத்தை மாணாக்கர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அண்ணலின் பேச்சுகள் பேச்சாளர்கட்கெல்லாம் இலக்கணம் போல் அமைவது. கருத்தைத் தொடக்கத்திலேயே சுட்டிக் காட்டுவார். சொற்பொழிவை எடுப்பு, தொகுப்பு என்ற முறையில் அழகாகத் தொடங்கி கருத்துச் செறிவோடு, பன்னூற் புலமை வெளிப்பட, நகைச்சுவை ஆங்காங்குத் தலைகாட்ட விளக்கங்களுடன் கூறிச் செல்லும் அண்ணல் அதனை அற்புதமாக முடிப்பதிலும் வல்லவர். பேசின தலைப்பு "மாணவரும் தமிழும்" என்பது.

இதில் அவர் வற்புறுத்தினது: " 'கல்வி, ஒழுக்கம்' என்பவை. 'கேடில் விழுச்செல்வம்' (400) என்று வள்ளுவப் பெருந்தகையும் 'ஈடு இலாச் செல்வம்' என்று திருவி.க.வும் கல்வியை 'வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது' என்று பழம் பாடல் கருத்தையொட்டி விளக்குவார். மேலும் கல்லாமையின் இழிவை, செல்வர் முன்னே வறியவன் நிற்பது காணக் கூடிய காட்சியே. ஆனால் கற்றவர் முன்னே கல்லாதவன் நிற்பது காணச் சகியாத காட்சியாகும்" என்று எதிர்மறையாக எடுத்துக் காட்டிக் கல்வியின் இன்றியமை யாமையை உணர்த்தியுள்ளமை அண்ணலின் திறமைக்குச் சான்று.

மாணாக்கரிடம் இவர் அதிகமாக வற்புறுத்துவது ஒழுக்கத்தை. "விழுப்பம் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றப்படும்" என்பதை,

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி [137]**

என்று பொய்யில் புலவன் வழி நின்று விளக்குவார். ஒழுக்கம் இழந்தவன் தான் செய்யாது பிறர் செய்த பழியையும் ஏற்க வேண்டி வரும் என்று 'எய்துவர் எய்தாப் பழி' என்ற தொடருக்குக் கூறியதன் விளக்கம் அண்ணலின் நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்று.

எத்தனையோ கலைகளைக் கற்கும் மாணாக்கர்கள் அரசியலையும் கற்றுக் கொள்வதில் தவறில்லை; நன்றாகக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் செயற்படக்கூடாது. "அரசியலில் தலையை இட்டால் காலைக் கல்லூரியிலிருந்து எடுத்துவிட வேண்டும். அரசியலில் தலையையும், கல்லூரியில் காலையும் வைத்துக் கொண்டு நடப்பது மாணவர்க்கு மட்டிலும் கேடு பயப்பதல்ல, நாட்டுக்கும் வீட்டுக்குமே கேடு பயப்பதாக முடிந்து விடும்" என்பது அண்ணலின் அதிராக் கொள்கை.

காஞ்சிப்பள்ளி உரை யேசுநாதர் மலையுச்சிப் பொழிவையும் போர்க்களத்தில் தேர்த் தட்டிலிருந்து கொண்டு பார்த்தனுக்குப் பரந்தாமனே அருளிய உபதேசத்தையும் நிகர்த்தது என்று சொல்லிவைப்பதில் குறையொன்றுமில்லை.

6. அறிவுக்கதைகள் (1984)[12]: இந்தத் தலைப்பில் 100 நிகழ்ச்சிகள் அடங்கிய தொகுப்பு நூல் இது. இதைப்பற்றி அண்ணலே கூறுவது: "சில படித்தவை; சில பார்த்தவை; சில கேட்டவை; சில கற்பனை" என்பது. பாரதத்தில் பாண்டவர்கள் 12 ஆண்டுகள் கானகத்தில் தங்கியிருந்தனர். அப்போது பல்வேறு வரலாறுகளை (கதைகளை) அறிந்தனர்; அறிவுத் தெளிவு பெற்றனர். அதுபோல அண்ணல் தம் வாழ்வில் அறிந்த பல நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகின்றார். எல்லாம் அநுபவக் களஞ்சியம். இவரே ஓர் அநுபவக் களஞ்சியம். இந்த நூல் 8 பகுதிகளாக நடைபெறுகின்றது. சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

12. இதன் இரண்டாம் பதிப்பு (1992) பாரி நிலைய வெளியீடு.

**1. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்:**[13] ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன் ஒரு பள்ளிப் பாடநூலில் கண்ட கதை. வயதான தந்தையைத் தெருத்திண்ணையில் அமர்த்தி சட்டியைக் கொடுத்து நாடோறும் அதில் உணவு போட்டு வைத்து அவர் உண்ணும்படி ஏற்பாடு செய்திருந்தான் ஒருவன். பல நாட்கள் இந்தத் திருத்தொண்டு தொடர்ந்து நடைபெற்று வந்தது.

ஒருநாள் அதில் உணவு இடப் போகும்போது சட்டி காணப் பெறவில்லை. இச்செய்தியைக் கணவனிடம் தெரிவிக்கின்றாள் மனைவி. சட்டி எங்கே என்று கேட்டு அவரைத் திட்டி அடிக்கவும் கை ஓங்குகின்றான் அவன். 'அருமருந்தப் பிள்ளை' அப்போது ஓடி வந்து, ''அப்பா, நான்தான் அந்தச் சட்டியை எடுத்து ஒளித்து வைத்துள்ளேன்'' என்று கூறினான்.

''ஏன் மகனே?'' என்று அவனைக் கேட்டதற்கு, சிறுவன், ''உங்களை இவ்வாறு திண்ணையில் உட்கார வைத்து உணவு வழங்க எனக்கு ஒரு சட்டி வேண்டாமா? அதற்காகத்தான் அதனைப் பாதுகாப்பாக வைத்துள்ளேன்'' என்றான்.

தன் மகனுடைய சொல்லைக் கேட்டு தந்தை, ''தனக்கும் இப்படி நேரிடுமோ?'' என்று அஞ்சினான். தன் எதிர்கால நிலையை எண்ணித் திருந்தினான். இதனால் நாம் அறியும் உண்மை:

**தினை விதைத்தவன் தினை அறுப்பான்**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்**

ஒருவன் செய்கின்ற செயல்களின் பயன்களை பெரும்பாலும் இப்பிறவியிலேயே அநுபவிக்க நேரிடும் என்பதற்கு இஃது ஒரு சான்று.

13. அறிவுக் கதைகள் - பக் 29

2. பொதுத் தொண்டு[14]: அண்ணல் ஒரு சமயம் பெங்களூர் சென்றிருந்தபொழுது, 95 அகவையைத் தாண்டிய நாடறிந்த பொறியியல் நிபுணர் சர் விசுவேசுர ஐயா அவர்களைக் காண ஆசைப்பட்டு ஒரு கன்னட நண்பரின் துணை கொண்டு சென்றார். அவரிடம், அண்ணலைப் "பொதுத் தொண்டு செய்பவர்" என்று கன்னட நண்பர் அறிமுகப்படுத்தினார்.

பழுத்த பழமாகச் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த அந்தப் பெருமகனார், "பொதுத் தொண்டா? பொதுத் தொண்டா?" என்று இருமுறை சொல்லி "அது மிகவும் கடினமாயிற்றே? இவரால் அதனை எப்படிச் செய்ய முடிகின்றது?" என்று வியப்புடன் வினவினார்.

அப்போது அப்பெருமகனாரின் கருத்து அண்ணலுக்கு விளங்கவில்லை. சர் வி.ஐயா அவர்கள் உடனே விளக்கத் தொடங்கினார் — இரண்டு நிகழ்ச்சிகள் மூலம்.

(1) "நான் அரசாங்க அலுவலாக மேட்டூருக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் ஐந்து மைல் தூரத்தில் நண்பர் வீட்டுத் திருமணம். அதற்கும் செல்ல வேண்டியிருந்தது. வண்டியோட்டி அந்தப் பாதையில் வண்டியைத் திருப்பினார். எனக்கு உடலெல்லாம் நடுங்கி விட்டது. ஏனெனில் நான் சென்றது அரசாங்க வண்டியில். அதை எப்படி நான் என் சொந்த அலுவலுக்குப் பயன் படுத்தலாம்?"

ஆகவே வண்டியோட்டியைக் கோபித்து வண்டியைத் திருப்பி 20 மைல் தொலைவு உள்ள என் இருப்பிடத்திற்கு வந்து, பின்பு என் சொந்த வண்டியை எடுத்துக் கொண்டு திருமணத்திற்கு சென்று வந்தேன். அதுதான் என் மனத்திற்கு நிம்மதியைத் தந்தது.

(2) "நான் அலுவல் பார்க்கும் காலத்தில் என் மேசையின் மீது இரண்டு பேனாக்கள் இருக்கும். அரசாங்க அலுவலுக்குத் தனிப்பேனாவும் என் சொந்த அலுவலுக்கும் உறவினர்

14. அறிவுக் கதைகள் - பக் 39

நண்பர்களுக்கு வரையும் கடிதங்களுக்கும் என் சொந்தப் பேனாவும் பயன்படுத்துவேன்'' என்று கூறி என் பக்கம் திரும்பி ''தாங்கள் வந்த செய்தி என்ன?'' என வினவினார்.

உடனே நம் அண்ணல், ''நான் வந்த வேலை முடிந்து விட்டது. பொதுத் தொண்டு செய்வது எப்படி? - என்ற பாடத்தைத் தங்களிடம் இன்று கற்றுக் கொண்டேன்'' என்று கூறி மகிழ்ச்சியுடன் விடை பெற்றுத் திரும்பினேன். இவை பொது வாழ்க்கைக்கு மிகவும் பயன்பட்டன'' என்கின்றார்.

3. **திதி கொடுத்தல்**[15]: குப்புசாமி சிற்றூர்வாசி. தம் தந்தைக்குத் திதி கொடுக்க நினைத்தார். ஒரு பார்ப்பனரை அணுகினார். அவர் தந்த பட்டியல்படி சாமான்களை வாங்கி வைத்திருந்தார். ஐயர் வந்ததும் திதி கொடுக்கத் தொடங்கினார்.

குப்புசாமி, ''இந்தச் சாமான்கள் எல்லாம் எதற்காக?'' என்று ஐயரை வினவ, அவர், ''மேல் உலகத்திலுள்ள உம் தந்தைக்கு மந்திரங்களை செபித்து — செபித்து அவருக்கு இவை எல்லாம் அனுப்பி வைக்கப் பெறும்.'' என்றார்.

குப்புசாமிக்குப் பெரிய மகிழ்ச்சி! தந்தை இறந்த பிறகும் அவர் உண்ண உணவு தருகின்றோம் என்ற மகிழ்ச்சி! சடங்குகள் தொடங்கின.

சாமான்களை ஐயர் பார்வையிட்டபோது அங்கிருந்தது 'புழுங்கல் அரிசி!'. 'இது வேண்டா; பச்சரிசி கொண்டு வாரும்' - என பகன்றார்.

உடனே குப்புசாமி - ''சாமி! எங்கப்பாவுக்குப் பச்சரிசி ஆகாது. அதை உண்டதனால்தான் வயிற்று வலி வந்து வானுலகம் சென்றார். மேலுலகத்திற்கு இதை அனுப்பி அங்கும் அவருக்கு வயிற்று வலி உண்டாக்கித் துன்புறுத்த வேண்டாவே'' என்று வினயத்துடன் வேண்டிக் கொண்டார்.

ஐயருக்கு, அப்போது என்ன செய்வது? என்ன சொல்வது? என்று விளங்கவே இல்லை!

---

15. அறிவுக் கதைகள் - பக் 76

4. இல்லை போ![16] "அம்மா தாயே! பிச்சை போடுங்க" என்று பிச்சைக்காரன் ஒரு வீட்டின் முன் நின்று கூவினான். அந்த வீட்டு மருமகள் வெளியில் வந்து, 'ஒன்றுமில்லை, போ' என்று சொல்லி அனுப்பினாள். அவனும் முணு முணுத்துக் கொண்டே ஏசத் தொடங்கினான்.

அவன் போய்க் கொண்டிருந்தபோது வெளியில் அலுவல் நிமித்தம் சென்றிருந்த மாமியார் திரும்பி வந்து கொண்டிருந்தாள்; பிச்சைக்காரனை 'வாப்பா' என்று கூட்டிக் கொண்டு சென்றாள். அவனும் ஏதோ கிடைக்கும் என்று திரும்பி வந்தான்.

வாசற்படிவரை சென்றவள், "ஏம்பா! நேற்று வந்த அந்தச் சிறுக்கி சொன்னதும் நீ போய் விடுவதா? நான்தான் இந்த வீட்டு மாமியார்! அவளுக்கு 'இல்லை' என்று சொல்ல என்ன அதிகாரம்? நான்தான் சொல்லவேண்டும்! இப்போது சொல்லுகிறேன். "இல்லை நீ போ" என்றாள் மாமியார்!

"எம்மா! இதைச் சொல்லவா அழைத்தீர்கள்? நான் என்னமோ உங்களை நம்பி... போங்கம்மா!" என்று மனம் வெதும்பிச் சொல்லிக்கொண்டே ஏகினான்.

பிச்சைக்காரனுக்கு 'இல்லை' என்று சொல்லுகிற அதிகாரம் கூட மருமகளுக்கு இருக்கக்கூடாது என்று எண்ணும் மாமியார்களும் சிலர் உள்ளனர் என்பது இதிலிருந்து தெரிகின்றது.

5. ஊர்வலம்[17]: திண்டுக்கல்லில் பெரிய இடத்துத் திருமணம். பூப்பல்லக்கு அலங்காரம்; "பட்டணப் பிரவேசம்" (ஊர்வலம்) நடைபெறுகின்றது. மதுரை பொன்னுசாமிப் பிள்ளை நாயனம். பைரவி இராகம். ஆலாபரணம் பண்ணிக் கொண்டிருக்கின்றார். எல்லோரும் அந்த இசையின்பத்தில் தோய்ந்து திளைக்கின்றனர்.

16. அறிவுக் கதைகள் - பக் 83
17. அறிவுக் கதைகள் - பக் 124

இந்த நிலையில் கூட்டத்தை விலக்கி கையிலே ஒரு பூமாலையை எடுத்துக் கொண்டு ஒருவர் வேகமாக உள்ளே நுழைகின்றார். ஒத்து ஊதிக் கொண்டு பக்கத்தில் நின்றவருக்கு மாலையைப் போடுகின்றார். எல்லோரும் "என்னங்க யாருக்கு மாலையைப் போட்டீங்க?" என்று கேட்க,

அவர் "மதுரை பொன்னுசாமிக்குதான்" என்கின்றார். அவர்கள் "அவரல்ல, இவர்தான் பொன்னுசாமி" என்று சுட்டிக் காட்டிச் சொன்னதும் —

வந்தவர் "இவரை விட அவர் நன்றாக வாசித்தாரே" என்கின்றார். "எப்படி ஐயா கண்டீர்கள்?" - என வியந்து வினாவ, மாலை போட்டவர் —

'இவர் விட்டு விட்டு வாசிக்கின்றார்
அவர் விடாது வாசிக்கின்றாரே'

- என்று விடையிறுக்கின்றார்.

எழுபது ஆண்டுகட்கு முன்பே - நம்மில் சிலர் இசையைச் சுவைத்த அழகு இது!

6. வரதநஞ்சப்பிள்ளை[18]: 65 ஆண்டுகட்கு முன்பு - தஞ்சைக்கு அடுத்த கரந்தையில் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா. தமிழவேள் உமா மகேசுவரம் பிள்ளை அவர்கள் முன்னின்றும் நடத்தும் விழா.

முதலில் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள் பேசினார்கள். அதன் பின்னர் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்கள் பேசினார்கள். இறுதியாக, சேலம் மாவட்டத்துச் சிற்றூர் தாரமங்கலம் அ. வரதநஞ்சப் பிள்ளையவர்கள் பேச வந்தார்கள்.

பிள்ளையவர்கள் பேசத் தொடங்கும் பொழுதே, "இந்த நாட்டாரும் நகரத்தாரும் பேசிய பிறகு இந்தக் காட்டானை ஏன்

18. அறிவுக் கதைகள் - பக் 128

ஐயா போட்டீர்கள்?'' என்றார். கூட்டத்தில் சிரிப்பும் கைத்தட்டலும் அடங்கவே பல மணித்துளிகள் ஆயின.[19]

குறிப்பு: சேலம் மாவட்டத்தில் சிற்றூரில் பிறந்தவர் அப்படி; அன்றி உடையும் தோற்றமும் கூட அவர் கூற்றுக்குத் துணையாயிருந்தன.

7. கரையேறுதல்[20]: தவசி ஒருவர் சாலையோரமாகப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு குளம். அப்போது அங்கே ஒருவன் தூண்டில் முள்ளில் புழுவை மாட்டிக் குளத்திலே மீன் பிடிப்பதற்காக இறங்கிக் கொண்டிருந்தான்.

குளத்தின் ஓரத்தில் இருந்து இதனைப் பார்த்துக் கொண்டிருந்த தவசி, அவன் மேல் இரக்கம் கொண்டு மிகவும் உளம் வருந்தி, ''தம்பி, நீ எப்போது கரையேறப் போகிறாய்?'' என்று அவனைப் பார்த்து வினவினார்.

அவனோ உடனே மறுமொழி சொன்னான். ''என்பறி நிரம்பினால் கரையேறுவேன்'' என்று. அவன் சொன்னதும் அவருக்கு உண்டான அதிர்ச்சி சொல்லில் அடங்காது.

8. நடையும் உடையும்[21]: தமிழகத்திலுள்ள ஒரு சிற்றூரிலிருந்து ஓர் உழவன் மும்பை (பம்பாய்) பார்க்கப் போயிருந்தான். ஊர் முழுதும் சுற்றிப் பார்த்து விட்டு மாலையில் கடற்கரையைப் பார்க்கச் சென்றான்.

அங்கே கடற்கரையில் சிறுவன் ஒருவன் அலையை நோக்கி வேகமாக ஓடுவதும், தண்ணீரைக் கண்டதும் பின் வாங்குவதும், பிறகு அலையில் காலை வைத்துக் கொண்டு விளையாடுவதுமாக இருந்தான். அப்போது ஒரு பெரிய அலை

19. 1944- இல் நான் துறையூரில் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாகப் பணியாற்றி வந்த காலம். இராசி புரத்தில் பிள்ளையவர்களின் தலைமையில் என் பேச்சு. "கலையும் நாட்டு நிலையும்'' என்பது தலைப்பு. (இரண்டாம் உலகப் பெரும்போர் நடைபெற்ற காலம்) எடுத்த எடுப்பில் பிள்ளையவர்கள் கூறியது: "தலைப்பை உம்மைத் தொகையாகக் கொண்டால் பொருள் ஒருவிதமாக அமையும். 'கலையும்' என்ற சொல்லுக்கு ஒரு கால்புள்ளி போட்டு அதை வினைச் சொல்லினால், போர் நடைபெறும் இன்றைய நாட்டுநிலையைக் குறிக்கும்'' என்று ஒரு நகைச்சுவையை உதிர்த்தார்.

20. அறிவுக்கதைகள் - பக் 136

வந்தது. அதைக் கண்ட உழவன் பயந்து போய் "சிறுவன் சுட்டித்தனமாக விளையாடினால் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே. அவனை அழைத்து உங்கள் அருகில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

அதனைக் கேட்ட அந்த ஆள் சிரித்து "அது பையன் அல்ல, பெண்" என்றார். "அப்படியா? நீங்கள் தான் அந்தப் பெண்ணின் தந்தையா?" என்று கேட்டான் அந்த உழவக் குடிமகன்.

அவர், "இல்லையில்லை; நான் அந்தப் பெண்ணுக்குத் தந்தை அல்ல, தாய்" என்று சொன்னவுடன் உழவப் பெருமகன் அடைந்த வியப்புக்கு எல்லையே இல்லை.

பெண்ணாக ஆணும், ஆணாகப் பெண்ணும் வேற்றுமை தெரியாத அளவுக்கு நடையுடை பழக்கங்களை மாற்றி நடந்து கொள்ளும் வேடிக்கையைப் பம்பாயில் (மும்பை) பார்த்து விட்டு வந்து அந்த உழவக்குடிமகன் அவன் ஊர் வந்ததும் அவன் அனைவரிடமுமே அதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தான்.

**9. தென்னை மரத்தில் புல் பிடுங்கியது**[22]: ஒருவன் அயலான் வீட்டுத் தென்னந் தோப்பில் தேங்காய் பறிக்க ஏறிக் கொண்டிருக்கும் நிலையில் தோட்டத்திற்கு உரியவன் கண்டு கொண்டான். இவன் வருவதைக் கண்ட திருடன் தேங்காய் பறிக்காமல் கீழே இறங்கி விட்டான்.

தோட்டக்காரன் கேட்டான்: "எதற்காக என் மரத்தில் ஏறினாய்?" என்று. திருடன் "கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க" என்று பதிலுரைத்தான்.

"தென்னை மரத்தில் புல் இருக்குமா?" என்று தோப்புக்காரன் வினவ, "இல்லாமல் இருப்பதைக் கண்டுதான் இறங்கி விட்டேனே" என்று விடை கூறிப் போய்விட்டான்.

22. அறிவுக்கதைகள் - பக் 140

இப்படியும் சில திருடர்கள். அவர்கள் தங்கள் திறமையைச் செயலில் மட்டுமல்ல, பேச்சிலும் காட்டிக் கொண்டிருப்பர்.

*10. சிந்தனை செல்லும் வழி*[23]: சிந்தனை ஒரு செல்வம். மக்கள் சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது. அண்ணலின் அதிராக் கொள்கை. சிந்திக்கத் தெரியாதவன் வறுமை வாய்ப்பட்டவன். இறைவனின் அருளைப் பெறவும் சிந்தனை தேவை என்பதை அருளாளர் ஒருவர் இப்படிக் கதறுவார்:

"இறைவா, உன்னைச்சிந்தித்தறியேன். அரைக் கணமும் தரிசித்தறியேன். ஒரு நாளும் வந்தித்து அறியேன். மறவாதே வழுத்தியறியேன். கனவிலும் எனக்கு உன் அருள் எப்படிக் கிடைக்கும்?" என்று. ஆனால் பலர் இன்று சிந்திப்பதே இல்லை. சிலர் குறுக்கு வழியில் சிந்திக்கின்றனர். அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்று.

ஏணி மரத்தின்மீது ஏறி சுவரில் ஆணி அடிக்கின்றான் ஒருவன். மற்றொருவன் கீழே நின்று ஏணி மரத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றான்.

சற்று நேரம் அதிகமாகவே, கீழே நிற்பவன் அவனை நோக்கி "ஆணி இறக்கவில்லையா? காங்கிரீட் சுவரா?" - என்று வினவினான்.

"மண் சுவர்தான். விரைவில் அடித்து விடுகின்றேன்" என்று சொல்லி மீண்டும் வேகமாகச் சுத்தியால் அடிக்கத் தொடங்கினான்.

ஏணியைப் பிடித்துக் கொண்டிருந்தவன் நன்றாக மேலே பார்த்துவிட்டு "கொண்டையை சுவரில் வைத்துக் கூர்ப்பக்கமாக சுத்தியால் அடிக்கிறாயே" என்று கோபித்தான். அதற்கு அவன் சிந்தித்து விட்டுச் சொன்னான். "என் மேல் தப்பில்லை. ஆணிக் கம்பெனிக்காரன் கூர் இருக்க வேண்டிய

23. அறிவுக்கதைகள் - பக 137

இடத்தில் கொண்டையையும் கொண்டை இருக்க வேண்டிய இடத்தில் கூரையும் சிந்திக்காமல் வைத்து விட்டான். சுவரில் இஃது எப்படி இறங்கும்?'' என்றான்.

அதற்குக் கீழே இருப்பவன் சொன்னான்: ''ஆணிக் கம்பெனிக்காரன்மீது தப்பில்லை. இந்த ஆணி எதிர்ச்சுவரில் அடிக்க வேண்டிய ஆணி-'' என்று. கடைக்காரனிடம் கொடுத்து விட்டுப் பின்பு நன்றாகச் சிந்தித்துப் போய், ''இந்தச் சுவருக்கான ஆணியை வாங்கிக் கொண்டு வா'' என்று அனுப்பினேன். எப்படி? குறுக்கு வழிச் சிந்தனைகள் பலவற்றுக்கு இது போதும்![24]

முடிவு: நம் அண்ணலின் பேச்சும் எழுத்தும் — ஏன் மூச்சு கூடத்தான் — அநுபவத்தோடு வெளிவரும். ஈண்டுக் குறிப்பிட்ட ஆறு நூல்களும் அந்தந்த வழியில் வந்த அநுபவக் களஞ்சியங்கள்! ஆகவே நம் அண்ணலை 'அநுபவ நாயகர்' என்று கூறுவதில் என்ன தடை?

24. இது நுனிக் கொம்பரில் இருந்து அடிக் கொம்பை வெட்டும் ''பிரகஸ்பதியை''விட அடிமுட்டாள் என்பது தெரிகின்றது.

# 10

# தமிழகப் புலவர் குழு[1] கண்ட புரவலர்

**வள்ளுவர்** வழி நின்று வாழ்க்கை நடத்தும் நம் அண்ணல் கி.ஆ.பெ.வி அவர்கள் தமிழ் வளம் பெற வேண்டும். தமிழர் வாழ்வு பெற வேண்டும், தமிழகம் வான் புகழ் பெற வேண்டும் என்ற மூன்றையும் சேர்ந்து ஒருங்கே கருதும் உள்ளம் படைத்த ஒரு சிலரில் தலையாயவர். இப்பெருமகனார் இம்மூன்றினை யும் ஒருங்கே விழைந்து, விழைந்தவாறே நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ளவர்தம் உள்ளங்களிலெல்லாம் எடுத்துரைத்து ஓயாமல் தொண்டாற்றி வருபவர். இவற்றிற்கு மேலாக,

> **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும் [131]**

என்ற குறள் காட்டும் ஒளியில் நடப்பவர். ஒழுக்கத்தை உயிரை விடச் சிறந்ததாகக் கருதி அதனைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பவர்.

இத்தகைய பெருமகனார் சிந்தையில், - சிந்தனையில் - பல்லாண்டுக் காலமாக ஒரு கருத்து புழுங்கிக் கொண்டே இருந்தது. "தமிழ் மொழி, தமிழ் கலை, தமிழ் இசை, தமிழ் மருத்துவம், தமிழகம் ஆகிய ஐந்தும் உலகில் உயர்ந்த இடத்தில் இருந்து விளங்குதல் வேண்டும்" என்பது. அந்நிலை இன்று இல்லை; அதனால் தமிழ் மக்கள் இருக்க வேண்டிய இடத்தில்

1. The Academy of Tamil Scholars of Tamil Nadu.

இல்லை என்பதை உணர்ந்தார். இத்தகு முதன்மையான காரணம் தமிழ் மக்கள் தமிழறிஞர்களைப் போற்றாது விட்டமையே யாகும் என்பதையும் தெளிந்தார்.

**அமைப்பு தேவை:** புலவர் பெருமக்களுக்கும் பொது மக்களுக்கும் இருந்த தொடர்பு பல்லாண்டுகளுக்கு முன்பே அற்றுப் போயிற்று. புலவர் பெருமக்களைக் குறித்துப் பொது மக்களும், பொதுமக்களைக் குறித்துப் புலவர் பெருமக்களும் கவலைப்படாவிடில் நாடும் மொழியும் என்னாகும்? என்று சிந்தித்தார் நம் அண்ணல். இந்த இழி நிலை மாற வேண்டும் என்ற எண்ணம் இவர்தம் தமிழ் உள்ளத்தில் முகிழ்த்தது. இதற்கு முன்னர் 'தமிழர் கழகம்' என்ற ஓர் அமைப்பை கண்டு வளர்த்த அநுபவம் இதற்குக் கை கொடுத்து உதவியது. இதற்காகப் புலவர் பெருமக்களை ஒன்று திரட்டி அவர்களைக் கொண்டு நாட்டுக்கும் மொழிக்கும் நல்வழி காட்ட வேண்டும் என்ற சிந்தனையும் எழுந்தது. இதற்கு ஓர் அமைப்பு இன்றியமையாதது என்று முயற்சி செய்தார்.

**மணி விழா:** இந்நிலையில் இவர்தம் மணி விழா வந்தது. திருச்சி தேவர் மன்றத்தில்[2] 11-11-1958இல் இது நடைபெற்றது. இந்த விழாவில் தம் கருத்தை அண்ணல் தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிவித்தார். அதன் விளைவாகத் தோன்றியதே **'தமிழகப் புலவர் குழு'**.

**உறுப்பினர் தகுதி:** இந்தக் குழு அமைப்புக்காக ஒரு தொடக்கக் கூட்டம் மதுரை பசுமலையில் டாக்டர் ச. **சோமசுந்தர பாரதியார்** இல்லத்தில் அவர் தலைமையில் நடைபெற்றது. புலவர் பெருமக்கள் பலர் அக்கூட்டத்திற்கு வருகை புரிந்திருந்தனர். கடைச் சங்கப் புலவர்களின் தொகையாகிய 49 என்ற தொகையே தமிழ்ப் புலவர் குழுவிற்கும் இருத்தல் வேண்டும் என்ற முடிவு செய்யப் பெற்றது.

இதில் டாக்டர் எழுவர், பல்கலைஞர் எழுவர், தமிழ் முது கலைஞர் (எம்.எ) எழுவர், வித்துவான்கள் எழுவர், மரபு

2. திருச்சி மேலரண் சாலையில் உள்ளது.

வழிப் புலவர் எழுவர், பண்டிதர் எழுவர், புலவர் கல்லூரிச் சார்பாளர் எழுவர் என்னும் துறைகள் ஏழுக்கும் எவ்வேழு பேர்களாக நாற்பத்தொன்பதின்மர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப் பெற்றதில் முதுமைக்கு முதலிடம் கொடுக்கப் பெற்றது; இஃதுடன் ஒத்த உரிமையும் வழங்கப் பெற்றது. இக்குழு உறுப்பினர்களின் தொகை என்றும் நாற்பத்தொன்பதாகவே இருந்து வரும்.

உறுப்பினர் ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் முழுவதுமே இக்குழுவில் உறுப்பினராக இருந்து வருவர். ஆனால் தமிழ்க் கல்லூரியின் சார்பாளர்கள் எழுவரும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் வரை மட்டுமே குழுவின் உறுப்பினராக இருப்பர். பிறகு வேறொரு புலவரை அக்கல்லூரி தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கும்.

செயற்குழு: இக்குழுவை ஆட்சி செய்ய ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழு இருக்கும். மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப் பெறுவர்.

இக்குழு ஆண்டுக்கு இருமுறை கூடும். இக்குழுவின் நடைமுறைக் கணக்காண்டு தைத்திங்கள் முதல் மார்கழி ஈறாக உள்ள திருவள்ளுவர் தொடர் ஆண்டாக இருக்கும்.

இக்குழுவின் முதல் மூன்று கூட்டங்களுக்குப் பேராசிரியர் டாக்டர் **சோம சுந்தர பாரதியார்** தலைவராக இருப்பார் என்றும், அடுத்து வரும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் சுழல் முறைப்படி ஒவ்வொரு புலவர் தலைமை தாங்குவார் என்றும், தலைமை தாங்குவதற்குரிய முறை அவரவர் பிறந்த நாள் அடிப்படையில் முதுமை முறைப்படி அமையும் என்றும், எந்த ஒரு கூட்டத்திற்காவது சுழல் முறைப்படி தலைமை தாங்க வேண்டியவர் வராதிருப்பாரானால் குழுவினால் தேர்ந்தெடுக்கப் பெறும் ஒருவர் அக்கூட்டத்திற்குத் தலைவராக இருப்பார் என்றும் ஒரு மரபு முறை ஏற்படுத்தப் பெற்றுள்ளது.

**பயணப்படி:** குழுவின் கூட்டத்திற்கு வரும் ஒவ்வோர் உறுப்பினரும் தத்தம் ஊர்களிலிருந்து போக வர இரண்டாம் வகுப்பு இருப்பூர்திக் கட்டணப்படியும் ஒரு நாள் செலவுப் படியும் பெறுவதற்கு உரியவராவார். அண்மையில் இருப்பூர்தி முதல் வகுப்புக் கட்டணம் படியாக வழங்குவதாக முடிவு செய்யப்பெற்றது.

**நோக்கங்கள்:** இப்புலவர் குழுவின் நோக்கங்களாவன:

(1) தமிழ் மொழியின் உயர் தனிச் செம்மையையும் இனிமையையும் தொன்மையையும் பரவச் செய்தல்;

(2) இக்குழுவைப் பழங்காலத் தமிழ்ச் சங்கங்கள் மூன்றினையும் தொடர்ந்ததாகவும், குழு உறுப்பினரை பழங்காலச் சங்கப் புலவர் நாற்பத்தொன்மர் வழித் தோன்றலாகவும் கருதுதல்;

(3) சங்க கால நூல்களுள் இதுவரை அச்சேற்றி வெளி வராத சுவடிகளை வைத்திருப்பவர்கள் அவற்றை வெளியிட உதவுவதும், இதுவரை வெளிவந்த நூல்களில் தவறுகள் இருப்பின் அவற்றைச் சுட்டிக் காட்டித் திருத்துதலும், எல்லாத் துறைகளிலும் தமிழை வளர்க்கவும், போற்றவும், அழிவுறாமல் தடுக்கவும் ஆவன செய்தல்;

(4) தமிழ் மொழி வரலாறு, தமிழக வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழ் மன்னர் வரலாறு, தமிழ்ப்புரவலர் வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்து வெளியிடுதல்;[3]

(5) தமிழ் மொழியில் வெளி வரும் நூல்கள் சிறப்புடையனவாயிருப்பின் அவற்றிற்கு இக்குழு நற்சான்றுகளை வழங்குதல்;

(6) தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்க விரும்புகின்ற பிற நாட்டினருக்கும் நம் நாட்டினர்க்கும் தக்க வழி காட்டுதல்;

---

3. இவற்றில் பெரும்பாலானவற்றை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது; தனியார் சிலரும் வெளியிட்டுள்ளனர். தவறுகள் இருப்பின் சுட்டிக்காட்டி வெளியிடச் செய்யலாம்.

(7) தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழர் பண்பாடு, கலை, நாகரிகம் ஒழுக்கம் முதலியவற்றைத் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் பரவச் செய்வதற்கான வழி வகை யாவற்றினையும் மேற்கொள்ளுதல்; இதழ்களை நடத்துதல்.

**முக்கிய பகுதிகள்:** இயல் இசை நாடகமாகிய முத்தமிழையும் வளர்த்தல் என்பதும், கூட்டங்கள் மாவட்டம் தோறும் நடைபெற்று வரும் என்பதும், ஒவ்வொரு கூட்டமும் அடுத்தடுத்துக் கூடும் மாவட்டத்தையும், இடத்தையும் முடிவு செய்யும் என்பதும் இக்குழுவின் சட்டதிட்டங்களில் காணப் பெறும் முக்கிய பகுதிகளாகும். தமிழ்நாடு முழுவதும் இப்புலவர் குழுவைப் போற்றி வரவேற்றது. தமிழ் அரசு ஏட்டிலும் (gaz :tta) இது பதிவு செய்யப் பெற்றது.

**நடைபெற்றவை:** தமிழகப் புலவர் குழு தமிழ் நாட்டில் 13 மாவட்டங்களிலும் உலாச் சென்று முடிந்து, புதுவை மாநிலத்தில் புதுச்சேரியிலும், கர்நாடகத்தில் பெங்களூரிலும், ஆந்திரத்தில் திருப்பதியிலும், மராட்டியத்தில் மும்பையிலும் (பம்பாய்), இந்தியத் தலைநகர் தில்லியிலும் கூடியுள்ளது. பொதுவாக 33 தடவை பல்வேறு இடங்களில் குழுமியிருந்து 34வது கூட்டத்தைத் தம் சொந்த இடத்தில் கூடி மகிழ்ச்சியுற்றது. தமிழகம் முழுவதும் பிற இடங்களிலும் புலவர் குழு உலா வந்த நாள்களெல்லாம் தமிழ்த் திருவிழா நாள்களாகச் சிறந்து விளங்கின.[4] இவற்றிற்கெல்லாம் பெருவிசையாக இயங்கின நம் அண்ணலுக்குப் புலவர் குழு உறுப்பினர்களும் தமிழக மக்களும் மிகவும் கடமைப்பட்டவர்களாகின்றனர்.

**நிதி நிலைமை:** ஓர் இலட்சம் சேர்த்து அம்முதலீட்டின் வருவாயைக் கொண்டு புலவர்க்குழுவை செயற்படச்செய்வது என்பது குழுவின் பொருளாதாரக் கொள்கையாகும். இதுவரை கி.ஆ.பெ.வி. அவர்கள் சொற்பொழிவுகளின் மூலம் கிடைத்த பொருளுதவியைக் கொண்டே குழு இனிது நடை

4. வறுமையினாலும் பிறவற்றாலும் எங்கும் செல்லாமல் கிணற்றுத் தவளைகளாக உள்ள பல புலவர்கட்கு விரிந்த மன நிலையமையும் பரந்த நோக்கங்களும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

பெற்றுள்ளது. இதற்குப் புரவலர்களுடைய நன்கொடையும் சேர்ந்து ரூ 185 ஆயிரம் வசூலானதில் 14 ஆண்டுகளின் செலவு ரூ 57 ஆயிரம் போக ரூ 128 ஆயிரம் இருப்பில் உள்ளது. இந்த நல்ல நிலைமையில் கி.ஆ.பெ.விற்கு 74ஆம் ஆண்டு பிறப்பதால் புலவர் குழுவை நடத்தும் பொறுப்பை புலவர் பெருமக்களிடமே அளித்து விட்டார் நம் அண்ணல். அன்று முதல் இன்று வரை புலவர் குழுவே கூட்டங்களை நடத்தி வருகின்றது.

ஒரு கண்ணோட்டம்: புலவர் குழுவின் முதற்கூட்டம் 15-2-1959இல் திரு வீ. சதாசிவ பண்டாரத்தார் தலைமையில் திருச்சியில் நடைபெற்றது. இதன் 33-வது கூட்டம் 15-10-1972இல் திருச்சியில் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல அரிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

(1) புலவர் குழுச் சார்பில் முத்திங்கள் ஆராய்ச்சி வெளியீடு தொடங்கப் பெறல் வேண்டும் என்றும், தமிழ்ப் புலவர் குழு உறுப்பினர்கள் உலகப் பல்கலைக் கழகங்களைப் பார்வையிட ஒரு சுற்றுலா மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், தமிழுக்கும் தமிழருக்கும் கடந்த 30 ஆண்டுகட்கு மேலாக அரும் பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ள பெரும்புலவர் மே.வீ.வேணு கோபாலப் பிள்ளை, பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்[5], சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்[6], பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், மொழியியலறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், தாமரைத் திரு நெ.து. சுந்தர வடிவேலு[7], ஏழிசை வல்லி கே.பி. சுந்தராம்பாள்

5. டாக்டர் சுப. மாணிக்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்ததால் பெருமையுடன் இவருக்கு டி.லிட். மதுரைப் பல்கலைக்கழகம் வழங்கியது.

6. அரசியல் செல்வாக்கு இருந்தமையால் ஏற்பாடுகள் தாமாக நடைபெற்று இவருக்கு இரண்டு பல்கலை கழகங்கள் டி.லிட். வழங்கின.

7. தமிழுடைய அயரா உழைப்பினால் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரானார். பலருக்கு பட்டங்கள் வழங்கக் கூடிய பெருமையும் பெற்றார்.

ஆகியோருக்குத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் சிறப்பு டாக்டர் பட்டங்கள் வழங்கவேண்டும் என்று பரிந்துரைத்து முடிவு எடுத்துள்ளது சிறப்பித்துக் கூறத்தக்கது[8].

(2) புலவர் குழு தமிழுக்குரிய பாட வேளைகளைக் குறைக்கக் கூடாது என்று வற்புறுத்துகிறது. தமிழ்ச்சொல் அகர வரிசை நிறுவனம் ஒன்றை விரைவில் தொடங்குமாறு கேட்டுக் கொள்கின்றது.[9] ஆங்கிலத்தின் வாயிலாகப் பிற பாடங்களைக் கற்பித்து வரும் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி இவற்றில் தமிழிலேயே அவற்றைக் கற்பிக்கும்படி வற்புறுத்துகின்றது.[10] தாய்மொழி வளர்ச்சிக்காகத் தமிழ்க் கல்லூரிகளை இணைக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தமிழகத்தில் ஏற்படுத்துமாறு கோருகின்றது.[11] அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழகத்தார் நடத்தி வருகின்ற நிலையத்தைத் தமிழக அரசே ஏற்று நடத்தும்படிப் பரிந்துரைக்கின்றது. இந்தியப் பண்பாட்டின் அடிப் படையாகவும், அதன் சிறப்பின் வேர்ப் பகுதியாகவும் உள்ள தமிழ் நூல்கள்; தமிழக வரலாறு, தமிழர் பழக்க வழக்கங்கள், புதிய உண்மைகள்— இவற்றை இந்நாட்டுத் தமிழர்களும், பிற நாட்டிலுள்ள தமிழ் மக்களும் அறிந்து புரிந்து கொள்ளப் பணி புரிவதென முடிவு எடுத்துக் கொண்டுள்ளது.

புலவர் குழுவிற்காகச் சொந்தமாக வாங்கப் பெற்ற கட்டடத்தில் புலவர் பெருமக்களின் உருவப்படங்களை இடம்

---

8. ஏனையோர் வாயில்லாப் பூச்சிகள்போல் வாளா இருந்தமையால் இவர்கள் சார்பில் ஒன்றும் நடைபெறவில்லை.

9.தேவனேயப் பாவாணரைத் தலைவராகக் கொண்டு அகர முதலி நிறுவனம் ஒன்றை அரசு தொடங்கியது.

10. பெரும்பாலான பெற்றோர்கள் ஆங்கில வழிக் கல்வியையே விரும்புவதால், குடியரசு ஆட்சியில் அரசு விரைந்து செயற்பட முடியவில்லை.

11. எம்.ஜி.ஆர். ஆட்சியில் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப் பெற்றது (இணைக்கும் பல்கலைக் கழகம் அல்ல) தவிர, பாரதியார் பெயரில் கோவையிலும், பாரதிதாசன் பெயரில் திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பெற்றன.

இவையெல்லாம் நடைபெற நம் அண்ணலின் தொலைநோக்கே முதற்காரணமாகும்.

பெறச் செய்தும், தம்மிடமிருந்த ஏறத்தாழ 1500 நூல்களை ஐந்து நூல் நிலைகளோடு புலவர் குழுவிற்காக முத்தமிழ்க் காவலர் நன்கொடையாகவும் அளித்து விட்டார். இதனால் புலவர் குழுவின் நூலகத்திற்கு "**கி.ஆ.பெ. விசுவநாதம் நூலகம்**" என்று பெயர் சூட்டுவதெனத் தீர்மானித்தது.

(3) நல்ல அடிப்படையில் அண்ணல் அமைத்த புலவர் குழுவிற்கு நல்ல அமைதியான எதிர்காலம் உண்டு. மேலும் அண்ணல் அவர்கள்,

(அ) தமிழகப் புலவர்குழுவின் சொத்துப் பொறுப்பாண்மைக் குழு (12 பேர் அடங்கியது) ஒன்றும்,

(ஆ) தமிழகப் புலவர் குழு - செயற்குழு (10 பேர் அடங்கியது) ஒன்றும் நிறுப்பெற்று நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றது.

நம் அண்ணல் அவர்கள் கிட்டத்தட்டப் பத்துக்கு மேற்பட்ட நிறுவனங்கள் சிலவற்றின் தலைவராகவும் பலவற்றின் செயலாளராகவும் பல்லாண்டுக் காலம் பணி புரிந்த பட்டறிவு இதற்குக் கை கொடுத்து உதவியுள்ளது என்று கொள்வதில் தவறில்லை.

# முடிப்புரை

இன்றைய பேச்சு பத்துப் பகுதிகளாக அமைந்தது. கி.பி. 1899இல் தோன்றி பள்ளியோ கல்லூரியோ புகாமல் தமிழ் கற்று தமிழக வானில் ஒரு துருவ மீன்போல் திகழ்ந்த தமிழ் கூறு இந்தியா, மலேசியா, பர்மா முதலிய நாடெங்கும் கால் நடையாடி தமிழின் பெருமையையும், பண்பாட்டையும் பரப்பி, நிலையாக நின்று தமிழ்ப் பணியாற்றத் தமிழகப் புலவர் குழு கண்டு, 96 ஆண்டுகள் நாடெல்லாம் புகழ நல்வாழ்வு வாழ்ந்து, 1994இல் தமிழன்னையின் திருவடி நிழலிலும் தமிழர்களின் நெஞ்சில் நிலையாகவும் தம் புகழுடம்பை நிறுத்தி தம்புகழ் நிறுவி தாமாய்ந்த பெரியோர்களில் ஒருவராகத் திகழும் அண்ணல் முத்தமிழ்க்காதலர் கி.ஆ.பெ.வி அவர்களைப் பற்றி அவர்தம் நூற்றாண்டு விழாவில் பேசி அப்பேச்சு அச்சு வடிவம் பெறுவதென்பது அடியேனுக்குக் கிடைத்தற்கரிய பெரும்பேறு. அடியேனும் அண்ணலும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏறத்தாழ 30 கல் தொலைவிலுள்ள இடங்களில் பிறந்து வளர்ந்தவர்கள்.[1] அண்ணல் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்து 1934 முதல் அவர்தம் பூத உடல் மறையும் வரையிலும் (1994) விட்டு விட்டு நெருங்கிப் பழகியும், அரசு அமைத்த பல்வேறு குழுக்களில் இணைந்து பணியாற்றியும் பேறு பெற்றவன் அடியேன். அவருடைய தமிழ் உணர்வும் தமிழ்த் தொண்டும் அடியேனையும் பற்றிக் கொண்டு தமிழ்ப்பணி (பெரும்பாலும்

---

1. அடியேன் பெரகம்பி (லால்குடி வட்டம்)யில் (தாய்வீடு) பிறந்து வளர்ந்தும் பின்னர் கோட்டாத்தூரில் (தந்தை வீடு) (இப்போது துறையூர் வட்டம்) வளர்ந்தும் வெவ்வேறு திசைகளில் தமிழ்ப் பணியாற்றியவர்கள் (அடியேன் பிறந்தது - 1916) அண்ணலை விட அடியேன் 16 அகவை இளையவன்.

எழுத்துப் பணி, திருப்பதியருகில் 4 ஊர்களில் தமிழ்ச் சங்கங்கள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் கண்டமை) ஆற்றவும் அண்ணலே முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்ற காரணங்களில் அடியேன் துணைக் காரணம் என்று கருதுகின்றேன்.[2]

தோரணவாயிலாக - முன்னுரையாக - சில கருத்துகளைக் குறிப்பிட்டு, முத்தமிழ்க் காதலர் கி.ஆ.பெ.வி. அவர்களைப் போற்றிப் பேசும் பேச்சைப் **பெரியோர் கேண்மை** என்ற முதற் பகுதியில் அண்ணலுக்கும் அடியேனுக்கும் ஏற்பட்ட தொடர்புகளைக் குறிப்பாகக் காட்டியுள்ளேன்.

'**முத்தமிழ்க் காதலர்**' என்ற இரண்டாம் பகுதியில் மிக்க இளமைக் காலத்தில் பெரியோர்களைத் துணைக் கொண்டதனால் இவர்தம் தமிழறிவும் தமிழுணர்வும் பெருகலாயிற்று என்பதை அண்ணலின் கூற்றாலேயே விளக்கியுள்ளேன். முத்தமிழ்க் காதலராக மாறிய, மூன்று தமிழ்களில் ஆழங்கால் பட்ட விவரங்களைச் சுட்டிக் காட்டியுள்ளேன். இந்த விவரங்கள் யாவும் அற்புதமானவை. பல்வேறு சிறப்புகளைக் கூறும் பாங்கு படிப்போர், கேட்போர் உள்ளங்களைத் தொடுபவை. "**மெய்யிற் பொடியும்**" என்ற சிலப்பதிகாரப் பாடலின் பொருளை விளக்கும் திறன் புலவர்களையும் தம் மூக்கின்மீது விரலை வைக்கச் செய்து விடும். இயற்றமிழிலில் இவர் படைத்த நூல்களைப் பற்றிச் சுருக்கமாக விளக்கியுள்ளேன். இங்ஙனமே இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிகளையும் சுட்டியுள்ளேன்.

'**வணிகர் திலகம்**' என்ற மூன்றாம் பகுதியில் முத்தமிழ்க் காதலர் கருத்துப்படி வணிகர் என்பவர் யார்? வணிகர் சின்னம் போல் நின்று தொழில் புரிபவரே நாணயமான வணிகர்,

**2. திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை கண்டு எம்.ஏ;எம்.ஃபில், பிஎச்.டி.க்கு வழி வகுத்த முதற் பேராசிரியன் என்ற பெருமை அடியேனுக்கு உண்டு. கலைஞர் ஆட்சியில் (1969) ஆண்டிற்கு 10 ஆயிரம் நிதி பெற்று அது இன்று படிப்படியாக ஓர் இலட்சமாக அதிகரிக்கச் செய்தமைக்கு அடியேனே முதற் காரணம், துணைக் காரணங்கள். ஏழு மலையான் நிமித்த காரணம். 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கோண்டல்' அல்லவா அவன்?**

தொழிலில் வெற்றி பெற வணிகர் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள், தந்தையார் மறைவுக்குப் பின் இவர் அடைந்த தொல்லைகள், அவற்றை இவர்தம் நா-நயமும், நாணயமும் தகர்த்த முறைகள், இவருடைய உயர்ந்த சரக்கு - உயர்ந்த விலை தத்துவம், வணிகர்கட்கு இன்றியமையாத சிக்கனம், சேமிப்பு, பாதுகாப்பு முதலிய பண்புகளைப் பற்றி அண்ணலாரின் கருத்துகள், அறச் செயல்கள் முதலியவை தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

**'சித்தாந்த வித்தகர்'** என்ற **நான்காம்** பகுதியில் அண்ணல் சித்தாந்தத்தைப் பற்றிப் பேசிய உரைகளை விளக்கியுள்ளேன். இளமையில் சித்தாந்தத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார் என்றும் கழுத்தில் மணிமாலைகளை அணிந்திருந்தார் என்ற குறிப்புகள் கிடைக்கின்றனவேயன்றி வேறு விவரங்கள் அவர்களின் நூல்களினால் அறியக்கூடவில்லை. இப்பகுதியிலுள்ள கருத்துகள் யாவும் அண்ணலார் இப்படித்தான் பேசியிருக்கக் கூடும் எனக் கற்பனையில் கண்டு எழுதப் பெற்ற கருத்துகளைக் கொண்டது. இஃது அண்ணலாரின் சைவ சமய ஈடுபாட்டையும் அவர் சைவ இலக்கியங்களில் கொண்டிருந்த ஆர்வத்தையும் காட்டுவதாக அமைகின்றது இப்பகுதி.

**'சொல்லின் செல்வர்'** என்ற **ஐந்தாம்** பகுதியில், சாதுர்யமாகப் பேசும் அண்ணலின் நா-நயமும், தமிழ்-இந்திக்கு இராஜாஜி கூறிய இட்லி-சட்னி, வேட்டி-சட்டை உவமைகளை உடைத்தெறிந்து பேசிய சாணக்கியத்திறன் தெளிவாக்கப் பெற்றது.

**இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்** என்ற **ஆறாம்** பகுதியில் திருச்சியின் திலகமாகிய அண்ணலின் மாநாடு நடத்திய திறமை, தமிழர் பெரும்படை அமைந்த சீர்மை, சென்னை மாநில இந்தி எதிர்ப்பு உரிமை ஆணையம் ஈன்ற ஒன்றை நிறுவிய பெருமை, பல்வேறு மட்டங்களில் இந்தி திணித்தலை எதிர்த்து நின்ற சமயோசிதப் பாங்கு ஆகியவை தெளிவாக விளக்கப் பெற்றன.

'இல்லற நெறியாளர்' என்ற ஏழாம் பகுதியில் அறிவியல் நோக்கில் அகப்பொருள் தத்துவம் விளக்கப் பெற்றது அவ்விளக்கம். "எல்லா உயிர்க்கும் இன்பம்" (தொல்-பொருள் -பொருளியல்-27) என்ற தொல்காப்பிய நூற்பாவில் அடங்கியிருக்கும் அருமை சுட்டிக்காட்டப் பெற்றது. சங்ககாலத் திருமணம் குறிக்கோள் திருமணம், அகப் பொருள் இலக்கியத்தில் வரும் மாந்தர் அனைவரும் குறிக்கோள் மக்களே என்பவை சுட்டப் பெற்றன.

ஏழாம் பகுதியில் அண்ணல் வாழ்க்கையில் அவர் நடத்தி வைத்த திருமணம் 2500 எண்ணிக்கையைக் கடந்திருக்கும் என்பது சுட்டப் பெற்றது. அவர் மேற்கொண்ட திருமண முறைகளும் வாழ்த்து முறைகளும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. அவர்கள் வாழ்த்தை இருபது கட்டளைகளாக வகுத்துக் காட்டிய முறையொன்றை சடங்கு முறைகளுக்கு அதிர் வேட்டுக்களாகும் என்பது குறிப்பாகக் காட்டப் பெற்றது. இந்தப் பொழிவில் இதுவே மிகவும் முக்கியப் பகுதியாகும்.

மருத்துவ மாமணி என்ற எட்டாம் பகுதியில் 'நாட்டு வைத்தியம்' என்ற பெயரில் வழங்கும் சித்த மருத்துவமுறை தெளிவாக்கப் பெற்றது. அண்ணல் அவர்கள் இம்முறைக்கு முக்கியத்துவம் நல்க வேண்டும் என்பது அவர்தம் வேண்டுகோள். அண்ணல் அவர்கள் சில நோய்களையும் சுட்டி அதற்குரிய மருத்துவ முறைகளும் காட்டியமை விளக்கப் பெற்றது. அண்ணல் தம் வாழ்நாள் முழுதும் இம்முறையை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட முயற்சி காட்டப் பெற்றது.[3]

'அநுபவ நாயகர்' என்ற ஒன்பதாம் பகுதியில் 96 ஆண்டுகள் வாழ்ந்து நற்றொண்டு புரிந்த நாயகரின் அநுபவங்கள் 'அறிவுக்கு உணவு', 'எண்ணக் குவியல்', 'ஐந்து செல்வங்கள்',

3. இதன் காரணமாகத்தான் சென்னையில் சித்த மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை, மூலிகைப் பண்ணை ஆகிய நிறுவனங்கள் அண்ணாநகரில் அண்ணா பெயரில் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றன என்று கருதலாம்.

'ஆறு செல்வங்கள்', 'மாணவர்களுக்கு', 'அறிவுக்கதைகள்' என்ற நூல்களில் அடங்கியுள்ளமை எடுத்துக்காட்டப் பெற்று எடுத்துக்காட்டுகளால் விளக்கப் பெற்றது. இவர் எழுதிய ஏனைய நூல்களிலும் இவர்தம் அநுபவச் சுடர்கள் தெறிக்கின்றன என்பதும் அறியத்தக்கது என்பதும் சுட்டப் பெற்றது.

தமிழகப் புலவர் குழு கண்ட புரவலர் என்ற பத்தாம் பகுதியில் தமிழுக்காக இவர் மனம், மொழி, மெய்களால் உழைத்த உழைப்பின் நினைவுச் சின்னம். தமக்குப் பின்னரும் ஒரு நிலையான நிறுவனம் பணியாற்றவேண்டும் என்று கருதி பலமான அடிப்படையுடன் நிறுவினமை சுட்டப் பெற்று அவர்றின் நடைமுறையும் விளக்கப் பெற்றது. அண்ணலுக்குப் பின்னர் அண்ணல் கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகி வரும் அண்ணல் கண்டது 'தமிழகப் புலவர் குழு' என்ற நிறுவனம் என்பது நினைவுறுத்தப் பெற்றது.

1899 -இல் பிறந்த குழந்தைக்கு 'விசுவநாதம்' என்ற பெயரிடப்பெற்றது 'முறைவழிப்படும் ஆருயிர்' என்ற கருத்தையொட்டி என்பதாகக் கருதலாம். நாதம்-ஒலி; விசுவம் - அண்டப் பெருவெளி; ஐந்து பூதங்கள் அடங்கிய இடம். அதில் ஒலியின் அடிப்படையில் பிறந்தது மொழி. தமிழ் மொழியும் அவ்வாறு பிறந்ததே. இந்தப் பெயர் கொண்ட ஒரு மனிதர் 96 ஆண்டுகள் வாழ்ந்து கிட்டத்தட்ட 80 ஆண்டுகட்கு மேல் தமிழ்த் தொண்டு புரிந்து தான் வந்த இடத்திலே அடங்கிப் போயிற்று என்று கருதலாம். நாதம் - ஒலி, விசுவம் - அண்டப் பெருவெளியில் அடங்கிப் போயிற்று. 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு' (குறள் - 358) என்ற குறளை விளக்குவதுபோல அமைந்தது — இக்குறளுக்குப் பரிமேலழகர் காட்டிய உரைப்படி. உலக மக்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு மனிதர் போல் வாழ்ந்து பரு உடலைக் களைந்து புகழுடம்பை

*விட்டுச் சென்றார் — நாதம் விசுவத்தில் மறைந்தது. ஆயினும் அவர் ஒரு துருவ மீன்போல் இன்றும் வாழ்கின்றார் உலக மனிதர்களில் நெஞ்சங்களில்!*

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன் [குறள் – 294]**

பின்னிணைப்பு - 1

# டாக்டர் முத்தமிழ்க்காவலர் படைப்புகள்

1. தமிழின் சிறப்பு
2. தமிழ்ச் செல்வம்
3. வள்ளுவரும் குறளும்
4. திருக்குறள் கட்டுரைகள்
5. திருக்குறள் புதை பொருள் (பகுதி-1)
6. திருக்குறள் புதைபொருள் (பகுதி-2)
7. திருக்குறளில் செயல்திறன்
8. வள்ளுவர் உள்ளம்
9. மும்மணிகள்
10. நான்மணிகள்
11. ஐந்து செல்வங்கள்
12. ஆறு செல்வங்கள்
13. எண்ணக் குவியல்
14. அறிவுக்கு உணவு
15. தமிழ் மருந்துகள்
16. நல்வாழ்வுக்கு வழி
17. நபிகள் நாயகம்
18. வானொலியிலே
19. மணமக்களுக்கு
20. இளங்கோவும் சிலம்பும்
21. மாணவர்களுக்கு

*22. அறிவுக்கதைகள் நூறு*

*23. எனது நண்பர்கள்*

*24. வள்ளலாரும் அருட்பாவும்*

*25. எது வியாபாரம்? எவர் வியாபாரி?*

**அண்ணலாரைப் பற்றியவை**

*26. திருச்சி விசுவநாதம்*

*(மா.சு. சம்பந்தம் எழுதியது)*

*27. முத்தமிழ் காவலர்*

*('முகம்' மாமணி வரைந்தது)*

*28. முத்தமிழ்க்காவலர் பற்றி 100 அறிஞர்கள்*

*(தொகுப்பு: 'முகம்' மாமணி)*

*29. கி.ஆ.பெ.வி. முதலாம் ஆண்டு நினைவு மலர் (19-12-95)*

பின்னிணைப்பு -2

# துணைநூல் பட்டியல்


| | | |
|---|---|---|
| இராமலிங்க சுவாமிகள் | : | திருவருட்பா - ஆறாம் திருமுறை |
| இராஜன் T.S.S | : | வீட்டு வைத்தியம் |
| கம்பர் | : | கம்பராமாயணம் - கிட் கிந்தா காண்டம் |
| சங்கப்புலவர்கள் | : | அகநானூறு |
| சங்கப்புலவர்கள் | : | குறுந்தொகை உ.வே.சா. பதிப்பு |
| சாமிநாதய்யர் உ.வே. | : | மீனாட்சி சுந்தரம் பிள்ளைய வர்கள் சரித்திரம் |
| சித்பவாநந்தா (பதி) | : | பகவத் கீதை விளக்கம் |
| சிவப்பிரகாசர் | : | நால்வர் நான்மணிமாலை |
| சுப்புரெட்டியார் ந. | : | அகத்திணைக் கொள்கைகள் |
| சுப்புரெட்டியார் ந. | : | இல்லற நெறி |
| சுப்புரெட்டியார் ந. | : | வாழையடி வாழை |
| சுப்புரெட்டியார் ந. | : | உளவியல் கோட்பாடுகள் |
| சுப்புரெட்டியார் ந. | : | பாட்டுத்திறன் |
| சுப்புரெட்டியார் ந. | : | தம்பிரான் தோழர் |
| சுப்புரெட்டியார் ந. | : | தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை |
| சேக்கிழார் | : | பெரிய புராணம் |
| திருவள்ளுவர் | : | திருக்குறள்-பரிமேலழகர் உரை |
| தொல்காப்பியர் | : | தொல்காப்பியர் பொருளதிகாரம் (இளம்) |
| மாணிக்கவாசகர் | : | திருவாசகம் |
| மாணிக்கவாசகர் | : | திருக்கோவையார் |
| மூவர் | : | தேவாரம் அடங்கன்முறை (சமாஜம்) |

# முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி.யின் வாழ்க்கைக் குறிப்புகள்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள் - 236)

| | |
|---|---|
| *1899 நவம்பர் 10.* | *தோற்றம் :*<br>*குலம் : சோழிய வேளாளர் மரபு*<br>*தந்தை : பெரியண்ண பிள்ளை*<br>*அன்னை : சுப்புலட்சுமி அம்மையார்.* |
| *1904* | *கல்வி : முத்துசாமிக் கோனார் - ஆசிரியர் திண்ணைப் பள்ளிமுறை - மணலில் எழுதி எழுத்துக் கற்றல்* |
| *1907* | *புகையிலைக் கடையில் அலுவல்* |
| *1914* | *திருச்சி சைவ சித்தாந்த சபையில் உறுப்பினர் துணைச் செயலர் - 12 ஆண்டுகள்.* |
| *1916* | *நீதிக்கட்சியின் உறுப்பினர், கட்சியின் நகர, வட்ட, மாவட்டக் கிளைகளில் படிப்படியாக உயர் பதவிகள் பெறல்.* |
| *1920* | *செப்டம்பர் 15. திருமணம் : செல்லக்கண்ணு என்பாரைத் துணைவியாக ஏற்றல். மூன்றாண்டுகள் இல்லறம், மகப்பேறு, தாயும் சேயும் இறத்தல்.* |
| *1923 சனவரி - 10* | *காங்கிரசில் இருந்த பெரியார் ஈ.வெரா.வும் முத்தமிழ் காவலரும் நீதிக்கட்சியில் சேர்ந்து இணைந்து பணியாற்றல்.* |
| *1925* | *பெரியார் ஈ.வெரா. தொடங்கிய 'குடியரசு' இதழின் துணை ஆசிரியராகப் பணிபுரிதல், அவர் தோற்றுவித்த தன்மான இயக்கத்திற்கும் பகுத்தறிவு இயக்கத்திற்கும் செயலராகப் பணிபுரிதல்.* |
| *1926 சனவரி 25* | *இரண்டாம் திருமணம், இராசம்மாள் துணைவியாக ஏற்றல், நான்காண்டுகள் இல்லறம், இறைவனடி சேர்தல்.* |

| | |
|---|---|
| 1929 | மூன்றாம் திருமணம். தமக்கை மகள் சுப்பு லட்சுமியைத் துணைவியாக ஏற்றல். மக்கட்பேறு: 6 பெண்கள்; 4 ஆண்கள். |
| 1936 | திருச்சி நகரக் கலைக்கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதல்; 20 ஆண்டுகள் இயல், இசை, நாடக வளர்ச்சிக்குப் பணியாற்றுதல். |
| 1937 | சென்னை மாநில அரசு இந்தியைத் திணித்ததை எதிர்த்துப் போராட்டம், திருச்சியில் தமிழர் மாநாடு கூட்டுதல், பொதுச் செயலராகச் சுற்றுப் பயணம் செய்து தமிழ் மக்களைக் கிளர்ந்தெழச் செய்தல். |
| 1940 | இராசா சர். அண்ணாமலைச் செட்டியாருடன் சேர்ந்து தமிழிசை இயக்கத்திற்குப் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றுதல். |
| 1953 | 'வள்ளுவரும் குறளும்', 'தமிழ் மருத்துவம்' 'அறிவுக்கு உணவு' - என்ற மூன்று நூல்கள் வெளியிடப் பெறுதல். |
| 1954 | கி.ஆ.பெ.வி. தொடக்கப்பள்ளி தொடங்கப் பெறல். 1961இல் அது உயர்நிலைப் பள்ளியாகவும் 1978இல் மேனிலைப் பள்ளியாகவும் உயர்தல். |
| 1956 திசம்பர் - 16 | திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் 'முத்தமிழ்க் காவலர்' என்ற விருதை இவருக்கு வழங்குதல் |
| 1958 நவம்பர் | மணிவிழா : திருச்சி தமிழ்ச்சங்கம் மணிவிழா மலரை வெளியிட்டது. 'புலவர் குழு' தோற்றுவிக்கப் பெற்றது. |
| 1965 சனவரி 17 | திருச்சியில் 9 எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்துதல். |
| சனவரி 26 | இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிரிழந்த 27 பேர் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் சனவரி 26இல் உண்ணா நோன்பு இருந்து அஞ்சலி செய்தல். |

| | |
|---|---|
| திசம்பர் 11. | மதுரையில் நடைபெற்ற தமிழகச் சித்தமருத்துவ மாநாட்டில் 'சித்த மருத்துவ சிகாமணி' எனும் விருது வழங்கப் பெறுதல். |
| 1969 | கோவையில் நடைபெற்ற தென்மாநிலங்களின் இந்தி எதிர்ப்பு மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றுதல். |
| அக்டோபர் | காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவில் பல இடங்களில் பங்கு பெறுதல். |
| 1973 | 75 ஆம் ஆண்டு பவளவிழா : மலர் வெளியிடப் பெறுதல். |
| 1974 சூலை 4. | திருச்சி நகர் மன்றம் வரவேற்பு |
| 1975 சனவரி 15 | சென்னை மயிலாப்பூரிலுள்ள தமிழ்நாட்டு நல்வழி நிலையம் 'வள்ளுவ வேள்' என்ற விருதை வழங்குதல். |
| 1978 சனவரி | தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் 'கலைமாமணி' எனும் விருது வழங்கிப் பாராட்டுதல். |
| 1980 | மதுரைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் (டி.லிட்) வழங்கிச் சிறப்பித்தல். |
| 1993 | செருமணி நாட்டில் நடைபெற்ற தமிழ் மாநாட்டிற்குச் சென்று, பின்னர் பிரான்சு நாட்டுக்கும் சென்று வருதல். |
| 1994 | அந்தமான் தலைநகர் போர்ட் பிளேயரில் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்க இரண்டாவது மாநாட்டுக்குத் தலைமை ஏற்றல். சென்னையில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் ஆற்றிய உரை இவர்தம் இறுதி உரையாக முடிதல். |
| 1994 திசம்பர் 19 | மறைவு : அதிகாலை சென்னையில் தம் பரு உடலைத்துறந்து புகழுடம்பு பெறுதல். |

## இந்நூலாசிரியரைப் பற்றி....



84 அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் எம்.ஏ.பி.எஸ்.சி. எல்.டி. வித்துவான், பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர்.

ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளி நிறுவனர் - தலைமையாசிரியராகவும் (1941-50), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60) பதினேழு ஆண்டுகள் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் நிறுவனர் - பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

1978 சனவரி 14இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்ரவரி - ஜூன் 1979) தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகவும் பணியாற்றியவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1986ஆண்டு மூன்று மாதங்கள் மதிப்பியல் பேராசிரியராகவும், 1989 மே முதல் 1990 அக்டோபர் முடிய 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் - காஞ்சித் தத்துவ மையத்தில் தகைஞராகவும் பணியாற்றி 1200 பக்கத்தில் 'வைணவச் செல்வம்' என்ற ஒரு பெரிய ஆய்வு நூலை உருவாக்கி வழங்கியவர். முதற்பகுதி 1995 இல் 575 பக்கத்தில் வெளி வந்துள்ளது. இரண்டாவது பகுதி அச்சேறும் நிலையில் உள்ளது. (த.ப.க வெளியீடு) 1996 பிப்ரவரி முதல் சென்னைப் பல்கலைக் கழகத் தெற்கு - தென்கிழக்கு ஆசியநாடுகளின் மரபு வழிப் பண்பாட்டு நிறுவனத்தில் மதிப்பியல் இயக்குநராகப் பணியாற்றுபவர்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து (பிஎச்.டி.) டாக்டர் பட்டம் பெற்றவர். (அந்த ஆய்வு நூல் ஆங்கிலத்தில் 940 பக்கங்களில் திருவேங்கடவன் பல்கலைக் கழக வெளியீடாக

வெளிவந்துள்ளது.) எம்ஃபில், பிஎச்.டி மாணவர்களை உருவாக்கியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றுள்ளன. பெற்றும் வருகின்றன. தவிர, ஆசிரியம் கல்வி உளவியல் (5), இலக்கியம் (22), சமயம் தத்துவம் (35), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (13), திறனாய்வு (19), அறிவியல் (20), ஆராய்ச்சி (6) ஆக 120 நூல்களை வெளியிட்டவர்.

இவர்தம் அறிவியல் நூல்களில் மூன்றும், சமய நூல்களில் மூன்றும், தமிழக அரசுப் பரிசுகளையும், அறிவியல் நூல்களில் ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசினையும் அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசினையும் ஆக 8 நூல்கள் பரிசுகள் பெற்றன. இவர்தம் அறிவியல் நூல்களைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் (1968), வைணவ நூல்களைப் பாராட்டிப் பண்ணுருட்டி வைணவ மாநாடு 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் (1987), தமிழ்ப் பணியைப் பாராட்டி தமிழக அரசு திரு வி.க. விருதையும் (10,000 வெண் பொற்காசுகள்) (1987), இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டி மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் (1991), இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை கல்வி, இலக்கியம் அறிவியல் என்ற மூன்று துறைகளில் இவர்தம் பணியைப் பாராட்டி இராசாசர் முத்தைய வேள் விருதையும் (1994) (50,000 வெண்பொற்காசுகள்) இவர் தம் கம்பன் பணியைப் பாராட்டிசென்னைக் கம்பன் கழகம் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருதையும் (1994 - 1000 வெண் பொற்காசுகள்), சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் இவர்தம் வைணவ வெளியீடுகளைச் சிறப்பிக்கும் முறையில் இராமாநுசர் விருதையும் (1996) - 25000 வெண்பொற்காசுகள்) வழங்கிச் சிறப்பித்துள்ளன. இனிமை, எளிமை, தெளிவு இவர் தம் நூல்களின் தனிச் சிறப்பியல்புகள்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி. அவர்களுடன் 1934 முதல் அவர் மறையும் வரை (1994) தொடர்புடையவராக இருந்தவர்.

# மணிவாசகர் பதிப்பகத்தின் பரிசு பெற்ற நூல்கள்

உலகப் பெருங்கவிஞர் கம்பர்
திருமுறையும் திருக்கோயில்களும்
கலைவாணன் கவிதைகள்
சுற்றுலா வளர்ச்சி
வண்ணங்கள் வடிவங்கள்
கம்ப்யூட்டர்
தமிழ்நாட்டுச் சத்திரங்கள்
சிறுவர் நல்வழிப்பாடல்கள்
தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம்
பண்பாட்டு மானிடவியல்
தனித்தமிழ் இயக்கம்
நோய் அறிதல்
மண்சுவை
கல்வெட்டில் வாழ்வியல்
மலையாள மொழியில்
முதல் இலக்கணம்
தகவல் தொடர்பியல்
அறிவியல் ஆயிரம் தொகுதி (1- 2)
தமிழிசை இயக்கம்
மரங்கள்
உரையாசிரியர்கள்
பரிபாடல் திறன்
இசையியல்
கம்பர

திருவருட்பா சிந்தனை

திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்

தமிழ் மொழி வரலாறு

தாகூர்

தொழுநோய்

மொழி வளர்ச்சியும், மொழி உணர்வும்

மணிக்கொடி காலம்

வீரர் உலகம்

ஊருக்குள் ஒரு புரட்சி

வேரில் பழுத்த பலா

தமிழகக் கலை வரலாறு

இலக்கண வரலாறு

கல்லெழுத்துக் கலை

இந்திய அரசமைப்பு

இரணியூர்க் கோவில்

நேமம் கோவில்

இலக்கண உருவாக்கம்

பகுத்தறிவுக் கும்மி

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

வயிரவன் கோயில்

ஐ.நா. மனிதகுல நம்பிக்கை ஒளி

காதல் காவியம்

இதழியல்

மாணிக்கச் செம்மல்

சங்க இலக்கியங்கள் செவ்வியல்

இலக்கியங்களே

# மணிவாசகர் பதிப்பகம்

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
தொலைபேசி - 5361039

| | | |
|---|---|---|
| நிறுவனர் | : | தமிழவேள் ச. மெய்யப்பன் |
| நிறுவிய ஆண்டு | : | 1961 |
| வெளியீடுகள் | : | 700 |
| பல்கலைக்கழகப் பாடநூல்கள் | : | 60 |
| பரிசுபெற்ற நூல்கள் | : | 55 |

- தமிழ்நாட்டின் தலைசிறந்த பதிப்பகங்களில் ஒன்று.
- தரமான நூல்களின் தாயகம்.
- செம்பதிப்புக்களின் கருவூலம்.
- நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களின் பதிவகம்.
- தமிழ் இலக்கியங்களுக்குக் காப்பகம்.
- ஆராய்ச்சி நூல்களின் அமுதசுரபி.